# கண்ணே உந்தன் நிழலாவேன்!



## 1

அந்த வசந்த இரவில்... பௌர்ணமி ஒளிச் சாரலில், ஊட்டியே மஞ்சள் உடை உடுத்திய தேவதையாய் ஜொலித்தது!

ஒவ்வொரு மலரையும் ஒரு நேசக் கவிதையாய் உதிர்த்து பூமிக்குத் தூதனுப்பிக் கொண்டிருந்தன... குல்மொஹர் மரங்கள்!

அந்த ரயில் நிலையத்தில் இன்னும் சற்று நேரத்தில் புறப்படத் தயாராக நின்றிருந்த அந்த ரயிலில் [illegible] அமர்ந்திருந்தாள் சம்யுக்தினி.

''ஜாக்கிரதைடி! ஊருக்குப் போய் சேர்ந்தவுடனே எனக்கு போன் பண்ணு!''

ஜன்னல் வழியே அவள் கையைப் பிடித்தபடி மீரா கூற, பெட்டியையும், ஏர் பேகையும் சீட்டுக்கு அடியில் வைத்து விட்டு அவளிடம் விடைபெற்றுக் கீழே இறங்கினார் மீராவின் தந்தை சபாபதி.

''சரிடி..! உனக்கும் அங்கிளுக்கும் ஒரு வாரமா ரொம்பத் தொல்லை குடுத்திட்டேன்... அங்கிள் இல் லேன்னா எனக்கு இந்த வேலையே கிடைச்சிருக்காது! ரொம்ப தேங்க்ஸ் அங்கிள்!''

அவள் குரலில் கசிந்த நன்றியுணர்வு, சபாபதியை பெரிதும் நெகிழச் செய்வதாய்!

''எனக்கு நீயும் மீராவும் ஒண்ணுதாம்மா வர்த்தினி... இதுக்கு எதுக்கு தேங்க்ஸ் எல்லாம்! அங்கே உனக்கு வேலை பிடிக்கலைன்னா எப்ப வேணாலும் எங்க வீட்டுக்கு நீ திரும்பி வரலாம்!''

வாஞ்சையுடன் உரைத்தவரிடம், சிறு கலக்கத்துடன் விடைபெறும்போதே, ரயில் நகரத் துவங்கியது.

மீரா சிறிதும் தூரம் அவள் கையைப் பிடித்தபடியே ஓடி வர, நட்பின் உன்னதம் அந்த நேரம் புரிவதாய்!

''என்னுடைய தாய், மனதிற்குப் பிடித்த வேலை, உயிராய் வளர்த்த மாமா அனைவரையும் விட்டு விட்டு இப்படி எங்கோ அநாதையாகச் செல்கிறேனே'' வென்ற தவிப்பும் வேதனையும் அவளை வெகுவாய் ஆட் படுத்தின.

மெதுவாகப் பின்புறம் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டாள் அவள்.



ரயிலின் வேகத்திற்கு எதிர் மாறாய்க் கடந்து செல்லும் இயற்கைக் காட்சியாய், நினைவுகள் பின் நோக்கிப் பயணிக்கத் துவங்கின.

* * *

''வர்த்தினிம்மா! இன்னிக்கு ஹாஸ்பிடலுக்கு சீக்கிரம் போகணும்னியே எழுந்திரிக்கலையாடா?''

அம்மா சுகந்தியின் குரல் மயிலிறகாய் இன்னும் செவி மடலை வருடுவது போல்!

மெதுவாக விழித்தவளின் முன்னால், நெற்றியில் சிறு கீற்று விபூதியுடன் தேஜஸ் மிளிர நின்ற தாயின் உருவம்!

''ம்... மாமா ஏதும் போன் பண்ணினாங்களாம்மா?'' கேட்டபடி எழுந்து அமர்ந்தாள் வர்த்தினி!

''இல்லைடா! நீ சரியான நேரத்துக்கு வந்திடுவேன்னு தான் அண்ணனுக்குத் தெரியுமே! அதான் பண் ணலைன்னு நினைக்கிறேன்...''

''சரிம்மா! நீங்க எப்போ ஸ்கூலுக்குப் போகணும்?''

''எனக்கு எப்பவும் போல ஒன்பது மணிக்குத்தான்... இன்னிக்கு என்ன பங்ஷன்மா?''

''என்னம்மா... மறந்துட்டீங்களா? மாமா ஹாஸ்பிடல் ஆரம்பிச்சி பதினேழு வருஷம் முடியப் போகுதேம்மா! அதான்! இன்னிக்கு ஃபங்ஷன் இருக்கு!'' என்றபடி தயாராகி மருத்துவமனைக்கு வந்தாள் அவள்.

சம்வர்த்தினி, பி.பி.ஏ. படித்து விட்டு ஹாஸ்பிடல் மேனேஜ்மெண்ட் கோர்ஸும் படித்தவள்... இப்போது எம்.பி.ஏ. தபாலிலும் பயின்று வருகிறாள்!

JUN 12 2010

அவளுடைய மாமா சுந்தர மகாலிங்கத்தின் மருத்துவ மனையில் அட்மினிஸ்ட்ரேடிவ் ஆபீசராகப் பணி புரிந்து வருகிறாள்.

மருத்துவமனைக்குச் சென்றவள், அங்கு நடக்கும் ஏற்பாடுகளைப் பார்வையிட்டு விட்டு முன்புறம் வந்தாள்.

''மேடம்! நீங்க வந்தவுடனே சீஃப் உங்களை வந்து பாக்கச் சொன்னாங்க!''

ரிசப்ஷனிஸ்ட் கூறியதும், இரண்டாவது ஃப்ளோருக்குச் சென்றபோது அவளுக்காகக் காத்திருந்தார் சுந்தர மகாலிங்கம்.

''வர்த்தினி! வா... வா! உனக்காகத்தான் காத்திட்டிருக்கேன்டா... எல்லாம் ரெடியா?'' ஆர்வத்துடன் விசாரித்தார்.

''ம்... பாத்துட்டுதான் வரேன் அங்கிள்! நீங்க டிபன் சாப்பிட்டாச்சா?''

''இல்லைடா! உனக்காகத்தான் வெயிட் பண்ணிட்டிருந்தேன்... வா... ரெண்டு பேருமா சாப்பிடலாம்! நீ சீக்கிரம் வருவேன்னு தான் தெரியுமே... சேத்துதான் ஆர்டர் பண்ணியிருக்கேன்.''

இருவரும் சாப்பிட்ட பிறகு அன்றைய விழாவிற்கான வேலைகள் தொடர, கேக் வெட்டி கோலாகலமாகக் கடந்த பதினேழு வருட இனிய வெற்றியைக் கொண்டாடி முடித்தனர்.

எப்போதும் போல், முதல் கேக் துண்டை அவளுக்கே மகாலிங்கம் ஊட்டிவிட, அவளுக்கோ பெரும் நெகிழ்ச்சியாய்!



வர்த்தினியின் சிறு வயதிலிருந்தே ஒரு பெறாத தந்தையாய்... பாசமிகு மாமாவாய் அவளை அன்புடன் வளர்த்தவர் அவர்!

இன்றுவரை அவளுடைய படிப்பு செலவையும் ஏற்று, அவளைத் தன் சொந்தப் பெண்ணாகவே பாதுகாப்பவர்!

அவள் தாய் சுகந்திக்கு தூரத்து உறவில் அண்ணன் முறையென்றாலும், தனக்கென்று யாருமே இல்லாததால், அவர்களையே தன் குடும்பமாக வரித்திருப்பவர் மகாலிங்கம்!

மருத்துவப் பணிக்காகத் தன்னையே அர்ப்பணித்து, திருமணமே செய்து கொள்ளாமல் இன்றும் தனிமையிலேயே வாழ்பவரை வர்த்தினி தன் தந்தைக்கும் மேல் நேசித்திருந்த தருணமது!

நினைவு தெரியாத சிறு வயதிலேயே தந்தை இறந்த பிறகு, ஒரு தந்தையாய், நண்பராய், பாதுகாவலராய் அவளுடைய உணர்வுகளைப் புரிந்து நடப்பவர் அவர்.

தனக்குப் பிறகு இந்த மருத்துவமனையை கவனிக்க பொறுப்பேற்க அவள் ஒரு டாக்டராக வேண்டும் என்று அவர் விரும்பினார்.

ஆனால் அவளுக்கோ மருத்துவத் துறை எடுத்து படிக்க ஆர்வமில்லாததால், அவளுடைய விருப்பத்தை மதித்து தேர்ந்தெடுத்த துறையில் படிக்க அனுமதி வழங்கி, இன்று வரை அவளுக்கான எல்லாச் செலவுகளையும் ஏற்றும் வருகிறார்.

''என்ன வர்த்தினி! அப்படியே அமைதியா உக்காந்து யோசிச்சிட்டிருக்கீங்க...''

JUN 12 2010

நர்ஸ் தேவகியின் குரல் அவளைக் கலைக்க நிமிர்ந்தால், தான் மாமாவைப் பற்றிய எண்ணங்களில் ஆழ்ந்து, சுற்றுப்புறத்தை மறந்து நின்று விட்டது புரிவதாய்!

"ம்... ஏதேதோ பழைய ஞாபகங்கள் தேவகி!" என்றபடி விலகிச் சென்றவள், அன்று மாபெரும் இடியொன்று தனக்காகக் காத்திருப்பதை அறியவில்லை!

✱ ✱ ✱

ரிசப்ஷன் அருகே போடப்பட்டிருந்த இருக்கையில் சாய்ந்து கண் மூடி யோசித்திருந்தவளைக் கண்ட வரதன் என்ற அந்த மனிதருக்கோ, யோசனையாய்!

தன் உறவினர் வீராசசாமியின் மறு பதிப்பாய் உயரமாக, தீர்க்கமான அழகு முகத்துடன் அவள் தெரிய, உடனே சென்று அவளிடம் பேச வேண்டும் போல்!

ஆனால் மறு கணமே அவள் எழுந்து உள்ளே சென்று விட, தான் பார்க்க வந்த நோயாளியின் அறைக்கு யோசனையுடன் விரைந்தார் அவர்.

அன்று முழுவதும் மருத்துவமனையைத் தேனியாய் சுற்றி வந்தவள், வீட்டிற்குக் கிளம்பத் தயாராகியபோது, மகாலிங்கம் அவளை செல்லில் அழைத்தார்.

உடனே சென்று அவரிடம் மருத்துவமனை தொடர்பான சில விபரங்களைப் பேசி விட்டு வெளியே வரும் போதுதான், அந்த வரதன் அவளை வழி மறித்தார்.

சுந்தர மகாலிங்கத்தையும் அவளையும் ஒன்றாய் பார்த்தவருக்கோ, தாங்க முடியாத அதிர்ச்சியும், கோபமும்! இது எப்படி...?

வீராச்சாமி இறந்ததற்குப் பிறகு அவர் குடும்பத்தாருடன் தொடர்பின்றிப் போனது அவருக்கு ஞாபகம் வருவதாய்!



கிட்டத்தட்ட பதினெட்டு வருடங்களுக்கு மேல் ஆயிற்று... அவர் சுகந்தியைப் பார்த்து!

வீராச்சாமி இறந்த பிறகு கணவரின் சொந்த ஊருக்கே வராமல் எங்கோ சென்று விட்ட கனகத்தைப் பற்றியும், அவள் குழந்தையைப் பற்றியும் ஊரே மறந்து போயிருந்தது.

இன்று, தன் உறவினர் வீராச்சாமியின் மறு பதிப்பாய் பெண் உருவாய் அவளைக் கண்டதும் மகிழ்ந்தவர், அவளை சுந்தர மகாலிங்கத்தோடு கண்டதும் வெகுவாய் அதிர்ந்து தான் போனார்.

இந்த மனிதனுடன் வீராச்சாமியின் மகள் எப்படி... இவன் யாரென்று இந்தப் பெண்ணிற்குத் தெரியுமா... பதறித் துடித்தது இதயம்!

மறுகணமே அவளைத் தொடர்ந்தவர், பார்க்கிங் ஏரியாவில் அவளைக் கண்டு பிடித்து விட்டார்.

தன்னுடைய ஸ்கூட்டியை எடுத்து உயிர்ப்பிக்க முயலும்போதுதான், ஒரு குரல் அவளைத் தடுத்து நிறுத்தியது.


"ஒரு நிமிஷம்மா! நீ வீராச்சாமி அண்ணன் மகதானே?"

அவர் கேட்டதும் வியப்புடன் திரும்பியவளுக்கு அவரின் அடுத்த கேள்வி பேரிடியாய்!

"எப்படிம்மா நீ இந்த டாக்டரோட... உங்கப்பாவைக் கொன்னவனோடவே நீ எப்படி... ரொம்ப அதிர்ச்சியா இருக்கும்மா!"

அவர் கூறியதும் அவளுடைய காலடியின் கீழ் பூமி பிளக்க, கையிலிருந்த பிடி நழுவி, ஸ்கூட்டி தரையில் சாய்ந்தது.

JUN 12 2010



# 2

வர்த்தினியின் இதயம், புயலில் சிக்கிய பூவாய் தடதடத்தது.

"என்ன சொல்றீங்க... சார்?"

வார்த்தைகள் உயிர்ப்பின்றி வெளிவர, சிலையாய் சமைந்து நின்று விட்டாள் அவள்.

"ஏம்மா... உனக்குத் தெரியாதா? உங்கப்பா... வீராச்சாமி அண்ணன் சாவுக்கு காரணமானவனாச்சே அவன்!

"பெரிய டாக்டரா இருக்கலாம்... ஆனா அவன் செஞ்சது குத்தம்தானே! அவனால தானே இன்னிக்கு நீயும் உன் அம்மாவும் தனியா நிக்கறீங்க?"

அவருடைய வார்த்தைகள் முள்ளாய்த் தைத்தன... உடலில் சிறு நடுக்கம் ஓடியது.

"எங்கப்பாவை... அங்கிள்?" பேச மறுத்து தொண்டையிலேயே புதைந்தன வார்த்தைகள்.

எதையுமே நம்ப முடியாமல் உள்ளம் பதறித் தவித்தது.

"ஆமாம்மா! அந்த ஆளு ஒரு கிரிமினல்... சட்டத்தோட ஓட்டைங்களைப் பயன்படுத்தி உங்கப்பாவைக் கொன்ன கொலைக் குத்தத்திலிருந்து தப்பிச்சி அஞ்சே வருஷத்தில் ஜெயில்லேருந்து வந்திட்டதா அப்ப எல்லாரும் பேசிக்கிட்டாங்க...



"நானும் பேப்பர்லே படிச்சித்தான் தெரிஞ்சிக்கிட்டேன்... அப்புறம் பதினாலு வருஷம் கழிச்சி இப்பதான் நான் சென்னைக்கே வரேன்...

"என் மாப்பிள்ளைக்கு ஒரு ஆக்சிடெண்ட்... மல்டிபுள் ஃப்ராக்சருன்னு சொல்றாங்க... இங்கதான் சேத்திருக்கோம்... நாளைக்கு ஆபரேஷன்...!

"என் பொண்ணுக்கு துணையா இருக்க வந்தப்பதான் உன்னையும் அந்த ஆளையும் பாத்தேன்... இப்ப வேணா அவரு சீஃப் டாக்டரா இருக்கலாம்! ஆனா நிஜத்துல அவன் ஒரு கொலைகாரன்தானே!

"சுகந்தி அண்ணியும் அண்ணனும் காதல் கல்யாணம் செஞ்சுக்கிட்டவங்க! அவங்களைப் பத்தி ஊரில சிலர் தப்பாப் பேசினப்ப நான் நம்பலை!

"தன் கணவனைக் கொன்னவனோடவே சுகந்தி அண்ணி தொடர்பு வச்சிருக்கறதா அவனோடவே வாழறதா எல்லாரும் சொன்னாங்க...!

"ரெண்டு பேருக்கும் இருந்த தொடர்பை உங்கப்பா கண்டு பிடிச்சிட்டதாலேதான் அவரை இந்தாளு கொலையே செஞ்சாராம்!

"இப்ப உன்னை இந்த ஆளோட பாத்தப்புறம்... அதை நம்பாம இருக்கவும் முடியலை! உனக்கும் அம்மாவுக்கும் இந்த டாக்டர்தான் ஹெல்ப் பண்றாரா?"

வெறுப்பும் சினமுமாய் வினவியவரை அதிர்ச்சியும் வேதனையுமாக ஏறிட்டவள், மெதுவாக பதிலளித்தாள்.

"நீங்க சொன்னது உண்மையான்னு எனக்குத் தெரியாது... எங்கப்பா இறந்திட்டாங்கன்னு மட்டும் தெரியும்!



JUN 12 2010

"ஆனா... அம்மாவும் மாமாவும்... ப்ச்... நான் நம்ப மாட்டேன்... ரெண்டு பேருமே ரொம்ப நல்லவங்க! இனிமே என்னைத் தொந்தரவு செய்யாதீங்க! ப்ளீஸ்..."

சுள்ளென்று கூறிவிட்டு வேகமாக ஸ்கூட்டியைக் கிளப்பியவளுக்குள், பெரும் சஞ்சலமும் குழப்பமும்!

அன்றிலிருந்தே மனதில் குழப்ப மேகங்கள் மையம் கொள்ள, வீட்டிற்கு வந்த பிறகும் தன் தாயிடம் இயல்பாகப் பேசவே அவளால் முடியாது போயிற்று!

மருத்துவமனையில் மகாலிங்கத்திடம் இது தொடர, நெஞ்சமெங்கும் புதிய பாரம் ஆக்ரமித்திருக்க, தன் உணர்வுகளை மறைக்கப் படாத பாடு பட்டாள் வர்த்தினி!

மூன்று நாட்கள் கழித்து மீண்டும் ஒரு நாள் மதியம் அவளைத் தேடி வந்தார் அந்த வரதன்!

ரெஸ்ட் ரூமில் சாப்பிட்டு முடித்து விட்டு யோசனையுடன் அமர்ந்திருந்தவளை அவரின் அழைப்பு உசுப்பியது.

"சம்வர்த்தினி! நான் சொன்னதை நீ நம்பலை இல்லை? சம்வர்த்தினிங்கறது யார் பேரு தெரியுமா? உங்க பாட்டியோட பேரு...! உங்கப்பா வீராச்சாமியோட அம்மா பேரு... அவங்க தான் எனக்கு உறவு...

"வேணும்னா அது உண்மையான்னு உங்கம்மா கிட்டே கேட்டுப் பாரு! அன்னிக்கு என்னை நீ நம்பலை இல்லை...

"இங்கே பாரு... எங்கப்பா எடுத்து வச்சிருந்த பேப்பர் கட்டிங்கை எல்லாம் தபால்லே வரவழைச்சிருக்கேன்... அது சொல்லும் எது உண்மை அப்படின்னு!"



ஒருவித வேகத்துடன் கூறிவிட்டு, தன் கையிலிருந்த பேப்பர்களை அவளுக்கு எதிரிலிருந்த மேஜை மேல் போட்டவர், வேகமாக அங்கிருந்து திரும்பிச் சென்றார்.

முதல் பக்கத்திலேயே வெளியாகியிருந்தது அந்த திகில் செய்தி!

மேலே அவளுடைய தந்தை வீராச்சாமியின் புகைப்படமும் கீழே அவரைக் கொலை செய்த குற்றத்திற்காக சரணடைந்திருந்த சுந்தர மகாலிங்கத்தின் போட்டோவும் தெளிவாய்த் தெரிந்தன.

"எப்படி இது சாத்தியம்? ஏன் இதுவரை தன் தாயும், மாமாவும் இது பற்றித் தன்னிடம் ஒரு வார்த்தை கூடக் கூறவில்லை?"

தலை வெடித்து விடும்போல் தெறிக்க ஆரம்பிக்க, எல்லாப் பேப்பர்களையும் அள்ளியெடுத்துக் கொண்டு உடனே வீட்டிற்குக் கிளம்பினாள் அவள்.

ரிசப்ஷனிஸ்ட்டிடம் சென்று வீட்டிற்குச் செல்வதாகக் கூறிவிட்டு, நேரே தன் தாயிடம் சென்றாள்.

மனம் முழுவதும் படபடப்பாய்... தன் தந்தையின் இறப்பை எண்ணி பெரும் சீற்றமாய் துடித்தது.

சுகந்தி வேலை செய்கின்ற பள்ளிக்கே சென்றவள், வெளியிலிருந்து செல்லில் அவரை அழைத்தாள்.


"அம்மா! நான்.. உங்களோட பேசணும்! ஸ்கூல் வாசல்லே தான் வெயிட் பண்றேன்.. உடனே லீவு சொல்லிட்டு வர்றீங்களா?"

அவள் கேட்டதும் பதறிப் போனவர். "என்னடா? உடம்பு ஏதும் சரியில்லையா? இந்த நேரத்துல நீ வந்ததே

JUN 12 2010

இல்லையே? இரு.. நான் உடனே வரேன்!'' என்றபடி கிளம்பினார்.

ஆனால், வெளியே காத்திருந்த பெரும் பூகம்பத்தை... அது அவருடைய வாழ்க்கையைப் பெரும் அதிர்வுக்குள்ளாக்கப் போவதை அப்போது அவர் அறியவில்லை!



## 3

**வா**சலில் முகம் முழுவதும் சிவந்து ரௌத்ரமாய் நின்றிருந்த மகளைக் கண்டதும் ஒன்றும் புரியாமல் பில்லியனில் ஏறி அமர்ந்தார் சுகந்தி.

வீட்டிற்கு வந்து நுழைந்ததுமே தன் ஹேண்ட் பேகிலிருந்த பேப்பர்களை எல்லாம் எடுத்து டீப்பாயில் சிதற விட்டவள், கண்ணீருடன் தாயிடம் திரும்பினாள்.

''இதுக்கு என்னம்மா அர்த்தம்! எங்கப்பாவைக் கொலை செஞ்சது அங்கிளா? இதை ஏன் என் கிட்ட நீங்க சொல்லவே இல்லை?''

படபடவென்று பொரிந்தபடி தீக்கனலாய் கனன்றவளுக்கு பதில் கூற முடியாமல் ஒரு கணம் ஸ்தம்பித்து நின்று விட்டார் அவர்.

''சொல்லுங்கம்மா... இது உண்மைன்னா அங்கிள் அப்பாவைக் கொன்னவருன்னு தெரிஞ்சும் எப்படி உங்களால...?



''அப்போ அந்த மனுஷர் சொன்னது உண்மையா...? உங்களுக்கும்... மாமாவுக்கும்...?''

முடிக்க முடியாமல் அவள் திணறி நிறுத்த, ''வர்த்தினி! தப்பாப் பேசாதடா! அம்மா சொல்றதைக் கேளுடா! உங்கப்பா சாவுக்கு மகாலிங்கம் அண்ணன்தான் காரணம்கிறது உண்மை! ஆனா எதுக்காகன்னு தெரியுமா?''

அவர் முடிக்கும் முன்பே இடைமறித்தாள் அவள்.

''போதும்மா! இதுக்கு மேல எனக்கு எதுவும் தெரிய வேண்டாம்! இனிமே என்னால அவரை உறவா... ஏத்துக்க முடியாது...

''நீங்க வேணா உங்க கணவரைக் கொன்னவரை சுலபமா மன்னிக்கலாம்... என்னால முடியாது... இதுவரைக்கும் உங்களோட இருந்ததே பாவம்... நான் போறேன்! அவர் சாகடிச்சது எங்கப்பாவை... எதிர்காலத்தை...!

''தயவு செஞ்சு என்னைத் தேடாதீங்க! என்னைத் தொடர்ந்து வந்தீங்கன்னா, அப்புறம் நான் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது! நான் உயிரோடவே இருக்க மாட்டேன்!''

கொதிப்பும் குமுறலுமாய்க் கூறிவிட்டு அவள் தன் அறைக்குள் சென்று படாரென்று கதவை மூட, அதிர்ச்சியில் அப்படியே மயங்கிச் சரிய ஆரம்பித்தார் சுகந்தி.

தன் உடைமைகள், பாஸ்புக், சர்டிபிகேட்ஸ், லைசென்ஸ் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு அவள் வெளியே வந்தபோதும் அவர் எழுந்திருக்கவில்லை.

ஆனால் இது எதையுமே உணர்கின்ற மனநிலையிலே அவளும் இல்லை!

JUN 12 2010

வேகமாக வீட்டை விட்டு வெளியேறியவளுக்கு ஒரு கணம் எங்கே செல்வதென்றே புரியவில்லை.

பிறகு, நெருங்கிய தோழி மீராவின் ஞாபகம் வர, உடனே ஒரு ஆட்டோவை நிறுத்தி அவளுடைய வீட்டிற்குச் சென்றாள்.

அந்த மதிய நேரத்தில், அவளுடைய அம்மா பார்வதி மட்டுமே வீட்டிலிருந்தார்.

அவருக்கும், வர்த்தினியைக் கண்டதும் அவள் அழுதிருந்த கோலமும், சூட்கேஸும் ஏர்பேகுமாக வந்து நின்ற நிலையும் எதையோ உணர்த்துவதாய்!

உடனே தன் கணவருக்கும் மகளுக்கும் போன் செய்து இருவரையுமே வரவழைத்து விட்டார்.

மீரா வந்ததும், அவளிடம் எல்லா உண்மைகளையும் கூறியவள் உடைந்து அழ ஆரம்பிக்க, அந்தக் குடும்பமே அவளைத் தேற்றியது.

பிறகு, அவளுடைய பிடிவாதத்திற்கு பயந்து அவளைத் தேடி அங்கு வந்த மகாலிங்கத்திடமும் வர்த்தினி இங்கு இல்லை என்று கூறி அனுப்பி வைத்தனர்.

ஒரு வாரத்தில் அவள் சிறிது தேறியதும், மீரா அவளிடம் மனம் விட்டுப் பேச ஆரம்பித்தாள்.

"வர்த்தினி! அம்மாவும் மாமாவும் என்னதான் சொல்றாங்கன்னு அவங்க பக்கத்து நியாயத்தையும் கேக்கலாமே... ப்ளீஸ்."

மெதுவாக இறைஞ்சியவளிடம், தீர்மானமாக மறுத்து விட்டாள் அவள்.



"நான் இங்கே இருக்கறது உனக்கு கஷ்டமா இருந்தா இப்பவே நான் போயிடறேன் மீரா! எனக்கு ஏதாவது உதவி செய்யணும்னு நினைச்சின்னா, ஒரு வேலைக்கு ஏற்பாடு பண்ணு...! அதுபோதும்!

"அதுவும் எங்கேயாவது வெளியூரிலே... கண் காணாத இடத்துலன்னா பரவாயில்லை!"

ஓய்ந்த குரலில் பிடிவாதத்துடன் அவள் முடிக்க, உடனே தன் தந்தையுடன் பேசினாள் மீரா.

நல்லவேளையாக அதே நேரத்தில் சபாபதியின் நண்பருடைய மகன் தன் தாயையும் வீட்டையும் பார்த்துக் கொண்டு உதவியாக இருக்க ஒரு பெண் தேவைப்படுவதாகக் கேட்டிருந்ததாகத் தெரிய வந்தது.

அவள் இது பற்றி அவளிடம் கூற, உடனே சம்மதித்து விட்டாள் வர்த்தினி.

சபாபதியுடைய நண்பரின் மனைவி கோமா ஸ்டேஜில் இருப்பதாகவும், அவரைப் பார்த்துக் கொள்ள வீட்டுடன் ஒரு நர்ஸ் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் மீரா கூறியிருந்தாள்.

எல்லாவற்றையும் மேற்பார்வை இடவும், வீட்டை நிர்வகிக்கவும் ஒரு பெண் வேலைக்குத் தேவை என்றும் அவன் கூற, சபாபதிக்குத்தான் தயக்கமாய்!

இவ்வளவு நல்ல நிலையில் உள்ளவளை, இந்த வேலைக்கு அனுப்புவதாவென்ற சஞ்சலத்துடன் இருந்தார் அவர்.

ஆனால் தனக்கு ஒரு இடமாற்றம் தேவை என்று புரிந்திருந்ததால் இந்த வேலைக்கே செல்ல முடிவெடுத்தாள் அவள்.

பிறகு, அவர் போனிலேயே எல்லாம் பேசி முடித்து விட, இன்று அந்த வேலையை ஏற்பதற்காக வர்த்தினி ரயிலில் பயணிக்கிறாள்.

இந்த வேலையிலிருந்தபடி முதலில் 'எம்.பி.ஏ.'வை முடித்துவிட்டு பிறகு ஏதாவது ஒரு நல்ல வேலையில் சேர்ந்துவிட முடிவெடுத்திருக்கிறாள்.

சட்டென்று குலுங்கிய ரயிலின் அதிர்வில் நினைவுகளும் தடைப்பட, பழைய ஞாபகங்களின் தாக்கத்திலிருந்து விடுபட்டு விழிகளைத் திறந்தாள். ரயில் நின்றிருந்தது.

உடனே சாப்பாடு நினைவு வர, மீராவின் தாய் கொடுத்திருந்த பூரி கிழங்கை எடுத்துச் சாப்பிட ஆரம்பித்தாள்.

மனம் கசந்திருந்ததால் சரியாகச் சாப்பிடவும் முடியாமல் போக, முடிந்தவரை சாப்பிட்டாள்.

பிறகு தன்னுடைய பெர்த்தில் ஏறிப் படுத்தவளுக்கோ, வெகு நேரம் உறக்கமே வரவில்லை.

மாமாவின் துரோகச் செயலும், தான் பார்த்திராத தந்தையின் நினைவில் பொங்கிய ஏக்கமும், தாயின் நடத்தையும் பெரும் கேள்விக் குறியாய் கண் முன் நின்றன.

* * *

விடிகாலையில் யாரோ அவளை எழுப்புவது போல்!

மெல்ல விழித்தபோது, ''ஆத்தூர் நெருங்கிடுச்சிம்மா! பத்து நிமிஷத்திலே ஸ்டேஷன் வந்துடும்!'' டி.டி.ஆர். தான் நினைவு படுத்தினார்.

''ஓ! தேங்க் யூ சார்!'' என்றபடி எழுந்து தலை வாரி பல் துலக்கி முகம் கழுவி முடித்தபோது, ஆத்தூர் ஸ்டேஷன் வந்து விட்டது.



அங்கிருந்து உள்ளே இருபது கிலோ மீட்டர் சென்றால், அந்த கிராமம் இருப்பதாக சபாபதி கூறியிருந்தார்.

அந்த ஊரில் தனக்கு என்ன அனுபவம் காத்திருக்கிறதோ என்ற பயத்துடன் எழுந்தாள் அவள்.



# 4

தன்னுடைய சூட்கேஸைம், ஏர்பேகையும் எடுத்துக் கொண்டு அவள் இறங்கும்போதே, அவள் பெயர் பொறித்த பேப்பருடன் ஒரு வயதானவர் நின்றிருந்தார்.

நேரே அவரிடம் சென்றவள் ''நான் தாங்க சம்வர்த்தினி'' சிறு முறுவலுடன் தன்னை அறிமுகம் செய்து கொண்டாள்.

உடனே புன்னகையுடன் அவளை வரவேற்றவர், ''நான்தாம்மா தென்னவன் ஐயா வீட்டு மேனேஜர் சம்பந்தம்!'' என்றபடி அவளிடமிருந்த சூட்கேஸையும் ஏர்பேகையும் வாங்கிக் கொண்டார்.

பிறகு காரில் பயணித்தபோது, இருபுறமும் செழிப்பான வயல்கள் மனதைப் பசுமையுடன் நிறைத்தன.

தூரத்தே, பழங்கால ஓவியமாய் விரவித் தெரிந்த மலைத் தொடர்கள், ரம்யமாய்!

அரை மணி நேரம் கழித்து அந்த ஊருக்குள் கார் நுழைய, ''இதாம்மா நம்ம கிராமம்!'' பெருமையுடன் அறிமுகப்படுத்தினார் சம்பந்தம்.

JUN 12 2010

வழியில் பாக்குத் தோப்புகளும் தென்னந்தோப்புகளும் நிறைந்து கிடக்க, மெதுவாகத் தான் வேலை செய்யும் பண்ணை வீட்டைப் பற்றிப் பேசத் துவங்கினார் அவர்.

''தென்னவன் ஐயா தாம்மா இப்பக் குடும்பத் தொழிலை எல்லாம் பாத்துக்கறாங்க... போன வருஷம் வரைக்கும் மெட்ராஸிலதான் வேலை பாத்தாங்க!

''ஆறு மாசம் முன்னாடிதான் பெரியம்மா இறந்திட்டாங்க. எல்லாப் பொறுப்பும் சின்னய்யா, அம்மா தலையில விழுந்திடுச்சி... ஆனா மூணு மாசத்துல அம்மாவுக்கும் ஸ்ட்ரோக் வந்து கோமாவுல படுத்திட்டாங்க!

''குருவி தலையில பனங்காயை வச்சா மாதிரி, சின்னய்யா, தொழிலையும் வீட்டுப் பொறுப்பையும் சேத்துப் பாத்துக்க ஆரம்பிச்சாங்க!

''பாக்குத் தோப்பு, தென்னந்தோப்பு, பால் பண்ணை, சோப் பேக்டரி, ஜவ்வரிசி தொழிற்சாலை, சீவல் பாக்டரி, வயல் எல்லாத்தையும் இப்போ சுலபமா நிர்வகிக்கப் பழகிட்டாலும் வீட்டு நிர்வாகம் மட்டும் ஒரு பெண்ணால தான் முடியும்கிறதை நான் கூட சொன்னேன்!

''ஆனா இப்ப கல்யாணத்துல சின்னய்யாவுக்கு பெரிசா ஆர்வமில்லை... அதான் தெரிஞ்சவங்களாப் பாத்து வேலைக்கு அமர்த்தலாம்னு நினைச்சாங்க...

''நல்ல வேளை, பெரியப்பாவோட நெருங்கின நண்பரோட பொண்ணாமே நீங்க... பெரிய கவலை விட்டுச் சிம்மா!''

அவர் கூறும்போதே கோட்டை போல் உயர்ந்த மதிற் சுவருடன் கூடிய வீடு ஒன்று எதிரே தெரிய அமைதியானார் அவர்.



வாசலிலிருந்த காவலாளி முன்புறமிருந்த பெரிய கேட்டைத் திறந்து விட, எதிரே நீண்டு தெரிந்த தார்ப் பாதையில் சென்ற கார் திரும்பிப் போர்டிகோவில் நின்றது!

பழைய கால முறையில் கட்டப்பட்டிருந்த இரண்டு கட்டுப் பண்ணை வீட்டை அழகாக நவீனப்படுத்தி இருந்தனர்.

முன்புற ஹாலின் மேல், மரத்தில் தளம் அமைக்கப்பட்டிருந்தது.

தரையில் அந்தக் கால செட்டிநாடு ஆத்தங்குடி டைல்ஸ் பல வண்ணங்களில் பளபளத்து வரவேற்றன.

கலை நுணுக்கத்துடன் மரத்தில் செதுக்கப்பட்ட தூண்களும், வீட்டின் நடுவில் பரந்து விரிந்த கம்பிகளிடப்பட்ட பெரிய முற்றமும், கூடத்தில் தொங்கி மௌனமாய் ஆடிக் கொண்டிருந்த வெள்ளிப் பூணிட்ட ஊஞ்சலும் அவளை வெகுவாய்க் கவர்ந்தன.

சென்னையிலேயே வளர்ந்தவளுக்கு அந்த அழகும் அமைதியும் ஏதோ ஒரு புதிய உலகத்திற்கு வந்த உணர்வை ஏற்படுத்துவதாய்!

பெரும் வியப்புடன் எல்லாவற்றையும் அளவிட்டபடி அவள் உள்ளே வந்தபோது தான், ''வெல்கம்...'' என்ற ஆழ்ந்த குரல் அவளை வரவேற்றது.

சிறு முறுவலுடன் திரும்பினால், எதிரில் உயரமும் கம்பீரமுமாய் அந்த மனிதன் நின்றிருந்தான்.

இதயத்திற்குள்... மின்னலாய் அவன் முகம் பரிச்சயமாய் ஒளிர்ந்தது.

அவனைக் கண்டவுடனே ஞாபகங்கள் எங்கோ சென்று விடை தேடித் திரும்ப, ''இவனா...?'' மனம் யோசனையுடன் குலுங்கியது.

முன்பு, அவனைப் பார்த்த.... வாதிட்ட தருணங்கள் சட்டென்று மேலெழும்பின.

ஆனால் அவனிடமோ அவளைக் கண்டு கொண்ட அறிகுறியே சிறிதும் தென்படவில்லை.

முகம், உணர்ச்சிகளைத் தொலைத்திருக்க, கண்கள் கூர்மையாய் இடுங்கியிருந்தன.

''உனக்கு... அங்கிள் எல்லாம் சொல்லி இருப்பாருன்னு நினைக்கிறேன்... இந்த வீட்டில் எல்லா வேலைக்கும் ஆட்கள் இருக்காங்க... அதை எல்லாம் மேற்பார்வை பார்த்து சரியா நிர்வகிக்கணும்! அதான் உன் வேலை!

''நீ ரொம்பத் திறமையானவன்னு அங்கிள் சொன்னாங்க... அதை நிரூபிப்பேன்னு நினைக்கிறேன்.''

அழுத்தமான குரலில் முடித்தவன், சம்பந்தத்திடம் திரும்பினான்.

''சம்பந்தம் அண்ணன்! இவங்க தங்க வேண்டிய இடத்தைக் காமிச்சிடுங்க! என்னென்ன வேலைகள்னு சொல்லிடுங்க! நாளையிலருந்து ஆரம்பிக்கட்டும்.''

அவன் கம்பீரத்துடன் திரும்பி வெளியேற, ''தேங்க்யூ சார்'' என்றபடி நின்றிருந்தவளுக்குள் பெரும் சஞ்சலமும் தவிப்பும்!

அன்று அவனிடம் வாய் சவடாலாய் பேசிவிட்டு, இன்று அவன் வீட்டிற்கே வேலைக்கு வந்திருப்பது தர்ம சங்கடமாய்!

* * *



அந்த வீட்டின் மாடியிலிருந்த விருந்தினர் அறையில ஒன்று அவளுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது.

உள்ளேயே அட்டாச்டு பாத்ரூமும் தெரிய, நிம்மதியுடன் தன் துணிகளை எடுத்து அடுக்கியவள், குளித்துத் தயாராகி அழகிய காட்டன் புடவையில் கீழே வந்தாள்.

அதற்குள், தென்னவன் வெளியே கிளம்பிச் சென்றிருப்பது தெரிந்தது.

முதல் நாளென்பதால், அந்த வீட்டு நிலவரங்களை அறிந்து கொள்ளும் ஆர்வத்துடன் நேரே சம்பந்தத்திடம் சென்றாள்.

''ஏம்மா! இன்னிக்கு ரெஸ்ட் எடுத்துக்கங்க! நாளையிலிருந்து பார்க்கலாம்...''

அவர் கூறியவுடன் சிறு முறுவலுடன் மறுத்தவள், ''முதல்லே நான் பெரியம்மாவைப் பாக்கணும்! அப்புறம் என் வேலைகள் என்னென்னு சொல்லிட்டீங்கன்னா நல்லாருக்கும்...

''சும்மா இருந்தா மனசு துருப்பிடிச்சிப் போயி தேவை இல்லாததெல்லாம் நினைக்க ஆரம்பிச்சிடும்'' தீர்க்கமாக முடித்தாள்.

''சரிம்மா! வாங்க... நீங்களும் சின்னய்யா மாதிரியே பிடிவாதமா நினைச்சதை சாதிக்கறவங்கன்னு தோணுது!'' என்றபடி முன்னால் சென்றார் அவர்.

பிறகு, முற்றத்தை சுற்றிய வெராந்தாவில் நாற்புறமிருந்த அறைகளில் ஒன்றின் கதவைத் தட்டியவர் சிறிது நேரம் காத்திருக்க கதவு மெதுவாகத் திறந்தது.

ஒரு பெண்மணி இருவரையும் உள்ளே அழைக்க, மெதுவாக நுழைந்தாள் அவள்.

JUN 12 2010

அந்தப் பெரிய அறையில் நடுவே போடப்பட்டிருந்த அழகிய ரோஸ்வுட் கட்டிலில் ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி திறந்த விழிகளுடன் எங்கோ வெறித்தபடி படுத்திருந்தார்.

அந்த முகமும் அதிலிருந்த கம்பீரமும், அப்படியே காலையில் அவள் கண்ட தென்னவனை நினைவுபடுத்துவதாய்!

அவனுடைய கண்களில், ஒரு விதக் கடுமையும் கூர்மையும் உயிர்ப்புடன் தெரிய, மாறாக இவரின் விழிகள் உயிர்ப்பைத் தொலைத்திருந்தன.

பார்த்தவுடனே, ஏனோ அவரிடம் ஏதோ ஒரு விதப் பாசம் தோன்ற, வாஞ்சையுடன் அருகில் சென்று அமர்ந்து கொண்டாள் அவள்.

மெதுவாக அவருடைய கையைத் தன் பிடிக்குள் ஏந்தியவள், ''அம்மா! நான் வர்த்தினி வந்திருக்கேன்... இனிமே நான்... உங்க ப்ரெண்ட்!'' மெல்ல நிறுத்தினாள்.

''நான்தான் இவங்களைப் பாத்துக்கற நர்ஸ் கனகம்... அவங்களுக்கு நீங்க பேசறது கேட்காது...''

அசுவாரசியத்துடன் கூறிவிட்டு ஒதுங்கிச் சென்று ஒரு புத்தகத்துடன் அமர்ந்து விட்டாள் அந்த நர்ஸ்.

''வர்த்தினிம்மா! முதல் தடவையா, நீங்கதான் மூணு மாசம் கழிச்சி எங்கம்மாவையும் ஒரு மனுஷியா மதிச்சிப் பேச்சு குடுத்திருக்கீங்க! நன்றிம்மா...''

உணர்ச்சிகள் பொங்கக் கூறிய சம்பந்தத்தை ஏறிட்டவள், ''ஏன்... உங்க தென்னவன் ஐயா பேச மாட்டாரா?'' ஆர்வத்துடன் வினவினாள்.



''சின்னய்யா வருவாங்க... ஆனா அமைதியா அம்மாவோட கையைப் பிடிச்சிட்டு கொஞ்ச நேரம் உக்காந்திருந்துட்டுப் போயிடுவாங்க!''

''ஓ...!''

''எனக்கே அம்மாவை இப்படி பாக்கறப்ப கஷ்டமா இருக்கே?... அவருக்கு எப்படி இருக்கும்?

''ஒரு தேனி மாதிரி சுறுசுறுப்பா இந்த வீட்டை வளைய வந்து நிர்வாகம் செஞ்சவங்கம்மா அவங்க!''

உடைந்த குரலில் அவர் நிறுத்த, உடனே அந்த வீட்டைப் பழையபடி எந்த விதத் தடங்கலுமின்றி சீராக சுழல விடும் வேகம் வந்தது அவளுக்குள்!



## 5

சிறிது நேரம் அங்கிருந்தவள் மெல்ல வெளியேறி முன்னறையிலிருந்த சம்பந்தத்திடம் சென்றாள்.

''அண்ணன்! எனக்கு உங்க முதலாளி அம்மா காலையிலிருந்து எழுந்ததும் என்னென்ன செய்வாங்கன்னு தெரியணுமே...!

''அப்பதான் இந்த வீட்டைப் பழைய மாதிரி நான் மாத்த முடியும்! சொல்லுவீங்களா?'' ஆவலுடன் கேட்டாள்.

''நிச்சயமாம்மா! காலையில அஞ்சு மணிக்கு எழுந்து குளிச்சிட்டு முதல்லே பூஜை பண்ணுவாங்க...''

JUN 12 2010

"அப்புறம் சமையலறைக்குப் போயி அன்னிக்கு என்ன சமையல் அப்படின்னு சொல்லிடுவாங்க... தினம் ஒரு சமையல்னு மெனு போட்டே வெச்சிருப்பாங்க!

"தோட்டத்துக்கு போயி நீர் பாய்ச்சிப் பராமரிக்கறாங்களான்னு மேற்பார்வை செய்வாங்க! செடிங்கன்னா அவங்களுக்கு உயிர்!

"அதுக்குள்ளே பண்ணையிலிருந்து பால் கேனுங்க வந்துடும்! அதை நான் மேற்பார்வை பாத்து கணக்கு எழுதி வைப்பேன்!

"அதை சரி பார்த்து பதப்படுத்த அனுப்பிடுவாங்க! அப்புறம் ஐயாவை எழுப்பி அனுப்பற வரைக்கும் கூடவே இருப்பாங்க...

"அவங்க கிளம்பிப் போனப்புறம் வீடு சுத்தம் பண்ண வரவங்களை கவனிப்பாங்க!

"சில நேரம் தானே பிடிச்ச சமையலா செய்வாங்க... மதியம் ஐயா சாப்பிட வந்தவுடனே கவனிச்சி அனுப்பிட்டு ஓய்வெடுப்பாங்க!

"சாயந்திரம், மறுநாளைக்கு என்னென்ன காய்கறி, பழங்கள், மத்த சாமான்கள் வேணும்னு கேட்டு வாங்கி வரச் சொல்லி அனுப்புவாங்க!

"அப்புறம், முன்னறைக்கு வந்து பால் பண்ணைக் கணக்கு, தென்னந்தோப்பு, பாக்குத் தோப்புக் கூலி எல்லாம் சரி பார்ப்பாங்க."

"ஜவ்வரிசி தொழிற்சாலை, சோப் பேக்டரி, சீவல் பேக்டரி, வயல் கூலி எல்லாம் ஐயாவே பாத்துப்பாங்க...



"சாயந்திரமா அம்மா விளக்கேத்தி வச்சிட்டு ஐயாவுக்…
காகக் காத்திட்டிருப்பாங்க.

"ராத்திரி டிபன் முடிஞ்சி ஊஞ்சலில் உக்காந்து வெற்றிலை மடிச்சி போட்டுக்கிட்டே ரெண்டு பேரும் அன்னன்னிக்கி நடக்கிற விஷயங்களைப் பத்தி பேசிக்கறது பார்வதி பரமேஸ்வரனையே பாக்கற மாதிரி இருக்கும்.

"அவ்வளவு ஒத்துமையா கட்டுக்கோப்போட அன்யோன்யமா வாழ்ந்ததாலதான், ஐயாவோட பிரிவை அம்மாவாலத் தாங்க முடியலைன்னு நினைக்கிறேன்.

"இப்படி ஓய்ஞ்சு போயி சுயநினைவை இழந்து படுத்திட்டாங்க... நீங்க தாம்மா எல்லாம் பாத்துக்கணும்!"

கவலையுடன் அவர் முடிக்க, எல்லாவற்றையும் அவரைப் போலவே கவனித்து இந்த வீட்டைப் பழைய மாதிரி மாற்றுவேன் என்று மனம் சூளுரைத்தது.

உடனே, எங்கிருந்தோ ஒலித்த குரல் கேலியாய் வினா எழுப்பியது.

'அசட்டுப் பெண்ணே! உன்னால் அவனுடன் ஊஞ்சலில் அமர்ந்து வெற்றிலை பாக்கு மடித்துத் தர முடியுமா?'

குறும்பாய் உள்மனது கேள்வி கேட்க, "சே..." என்றபடி சட்டென்று பரவிய விதிர்ப்புடன் அதை விலக்கினாள்.

எந்த ஆணுடனும் இயல்பாய் இணைந்து குடும்பம் நடத்துவது இனித் தன்னால் முடியாதென்று புரிவதாய்!

மனதிலிருந்த மென்மையான உணர்வுகளும், சக மனிதர்களிடம் இருக்க வேண்டிய நம்பிக்கையும் தொலைந்து போயிருந்தன.

"என்னம்மா? முகம் என்னவோ போல மாறிடுச்சி?" அக்கறையுடன் கேட்டார் சம்பந்தம்.



JUN 12 2010

''ம்... ஒண்ணுமில்லைங்க! ஏதோ பழைய நினைப்பு... சரி... நாளையிலிருந்து நான் எல்லாத்தையும் பாத்துக் கறேன்!''

''சரிம்மா! ரொம்ப சந்தோஷம்... வாங்க... டிபன் சாப்பிடலாம்! அப்படியே உங்களை சமையல்காரம்மாவுக்கும் மத்தவங்களுக்கும் அறிமுகப்படுத்திடறேன்'' என்றபடி முன்னே சென்றார் அவர்.

டிபன் சாப்பிட்ட பிறகு சமையல் செய்யும் விசாலம் அம்மாவும், உதவிக்கு இருக்கும் அஞ்சம்மாவும் அறிமுகம் செய்யப்பட்டனர்.

வெளிவேலைக்கென்று ஒரு பெண்மணி இருப்பதாகவும், அவர் கணவரே தோட்ட வேலையும் செய்து வருவதாகவும் சம்பந்தம் கூறினார்.

பின்புறத்தில் வேலை செய்பவர்களுக்கென்று இரு அவுட் ஹவுஸ்கள் இருப்பதால், அனைவருமே அங்கு தங்கியிருந்தனர்.

அன்று முழுவதும் அந்த வீட்டின் நடப்பை அறிவதிலும், பிரகன் நாயகி அம்மாவின் அருகே இருந்ததிலும் பொழுது வேகமாகக் கழிந்தது.

* * *

அன்றிரவு... புது இடமென்பதால் உறக்கம் வர மறுத்து சத்தியாக்கிரகம் செய்ய, அவனை முன்பு கண்ட பழைய நினைவுகள் அலை போல் சுழன்று வந்தன.

ஒரு நாள், அவள் தன் கல்லூரித் தோழியுடன் சினிமாவிற்கு சென்றிருந்தாள்.

அவர்கள் சென்ற நேரம் 'ஹவுஸ்புல்' போர்டு மாட்டப்பட்டிருக்க, இருவருமே என்ன செய்வதென்று புரியாமல் விழித்துக் கொண்டு நின்றிருந்தனர்.



அப்போது, இந்தத் தென்னவன் அங்கு வந்து டிக்கெட் வேண்டுமாவென்று கேட்க, கொதித்துப் போனாள் வர்த்தினி.

''என்ன சார் கிண்டலா? ப்ளாக்குல டிக்கெட் வாங்கி சினிமா பாக்கற பழக்கம் எல்லாம் எங்களுக்குக் கிடையாது... வேற யார் கிட்டயாவது உங்க டிக்கெட்டை வித்துடுங்க!

அவள் சுள்ளென்று கூறிவிட்டுத் திரும்பிக் கொள்ள, வாய் விட்டுச் சிரித்து விட்டான் அவன்.

''ஒரு நிமிஷம் மிஸ்... என்னைப் பாத்தா ப்ளாக்குல டிக்கெட் விக்கற மாதிரியாத் தெரியுது... ப்ச்... சக மனுஷங்களை கணிக்கறதுக்கு நாமும் கொஞ்சம் புத்திசாலியா இருக்கணும்!'' குரலில் கேலியுடன் நிறுத்தினான்.

கோபத்துடன் திரும்பியவள் அப்போதுதான் அவனை நன்றாகக் கவனித்தாள்.

ஆனால் அதை ஒப்புக் கொள்ளவும் மனமின்றி அவள் திரும்பியபோது, ''என் ஃப்ரெண்ட் வரலையேன்னு வேஸ்டாப் போகப் போற டிக்கெட்டைக் குடுக்க வந்தா நல்லதுக்கே காலமில்லை'' என்றபடி திரும்பி நடக்க ஆரம்பித்தான் அவன்.

உடனே அவளுடைய தோழி ஓடிச் சென்று அவனிடம் பணத்தைக் கொடுத்து விட்டு டிக்கெட்டை வாங்கி வந்து விட்டாள்.

''ஏன்டி... அந்த ஆளுகிட்டப் போயி டிக்கெட் வாங்கினே?''

சிறு சினத்துடன் வேண்டா வெறுப்பாகக் கூறியபடி முகம் சுருங்கி அவள் நடக்க, தோளைக் குலுக்கிக்

கிண்டலாக நமட்டுச் சிரிப்பு சிரித்தபடி அவன் செல்வது கண்ணோரம் பட்டது.

பழைய ஞாபகங்களின் தாக்கத்தில், நித்திரை அவளை மெல்ல ஆக்கிரமிக்க தன்னையறியாமலே உறங்க ஆரம்பித்தாள் அவள்.

மறுநாளிலிலிருந்து அந்த வீட்டுடன் இயல்பாகப் பொருந்திப் போனாள் வர்த்தினி.

அங்கு பணிபுரிபவர்களும், அந்தக் குடும்பத்தில் நன்றி விசுவாசத்துடனும் பாசத்துடனும் இருந்தது அவளை ஈர்ப்பதாய்!

காலையில் எழுந்து குளித்ததும் பூஜை வேலைகளை முடித்து விளக்கேற்றிவிட்டு சம்பந்தம் கூறியபடி சமையலறைக்குள் சென்றாள்.

அவளைக் கண்டதும் அவசரயாகக் காபி கலந்து விசாலம் வாஞ்சையுடன் அளிக்க, மெதுவாகப் பருகியபடி டிபனுக்கான வேலைகளை மேற்பார்வையிட்டாள்.

பிறகு பிரகன்நாயகி அம்மாவிடம் சிறிது நேரம் அமர்ந்திருந்தவள், தோட்டத்திற்குச் சென்று பார்த்துவிட்டு பின்புறம் பால் கேன்களைப் பார்வையிடச் சென்றாள்.

சம்பந்தம் எழுதி வைத்திருந்தவற்றை சரிபார்த்து அனுப்பியவள், மதியம் சாப்பாட்டிற்கான மெனுவை அறிவதற்காக, தென்னவனின் வருகைக்காக காத்திருந்தாள்.

குளித்துத் தயாராகி பூஜையறைக்குள் நுழைந்த தென்னவனுக்கோ பெரும் வியப்பு!

அவனுடைய தாய் நன்றாக இருந்தபோது மிளிர்ந்த சுத்தமும் தேஜஸும்... இன்று புதிதாய் நிறைந்திருப்பது போல்!



ஒருவிதத் திருப்தியும் நிறைவுமாய் பூஜை செய்துவிட்டு வெளியே வந்தவன், சம்பந்தத்தை அழைத்தான்.

“அண்ணன்! இன்னிக்கு பூஜையறையில யாரு சுத்தம் செஞ்சி விளக்கேத்தினது?” வியப்புடன் வினவினான்.

“நம்ம வர்த்தினி அம்மாதாங்க! நேத்து நம்ம வீட்டிலே அம்மா எப்படி வீட்டைப் பாத்துப்பாங்கன்னு கேட்டாங்க... நான்தான் சொன்னேன்” பவ்யமாகக் கூறினார்.

“ஓ...” என்றபடி யோசனையுடன் தோளைக் குலுக்கியவன் ஹாலுக்கு வந்தபோது வர்த்தினி அவனுக்காகக் காத்திருந்தாள்.

“சார்.. இன்னிக்கு மெனு என்னன்னு சொன்னீங்கன்னா...”

அவள் முடிப்பதற்குள் வேகமாகக் குறுக்கிட்டவன், “இதெல்லாம் என்கிட்ட கேக்க வேண்டாம்... எப்பவும் போல செய்யச் சொல்லு!”

அசுவாரசியமாகக் கூறிவிட்டு முன்புறமிருந்த அலுவலக அறைக்குள் சென்று விட்டான்.

முகத்தில் அறைந்தாற்போல் வந்த பதிலில் ஒரு கணம் விதிர்த்து நின்றவளுக்குத் தன் நிலை புரிவதாய்!



## 6

தென்னவனுடைய அலட்சியமும், பாராமுகமும் உள்ளே ஆழப்பதிந்து முள்ளாய் நெருடியது!

JUN 12 2010

இப்போது, தான் இருக்கும் நிலையில் இந்த வேலையையும் விட்டு விட்டால் வேறு ஒரு பாதுகாப்பான வேலை கிடைக்குமாவென்ற தவிப்பு, அவளை வாய் மூடச் செய்வதாய்!

யோசனையுடன் சமையலறைக்குள் சென்றவள், விசாலத்தைத் தனியே அழைத்தாள்.

''விசாலம்மா! இந்த வீட்டிலே நீங்க ரொம்ப காலமா வேலை செய்யறதா சம்பந்தம் அண்ணன் சொன்னாங்க...

''தினப்படி மெனுவெல்லாம் எப்படி தயார் பண்ணீங்க?'' ஆவலுடன் கேட்டாள்.

''அம்மா முன்னாடி செய்யற மாதிரித்தாம்மா... பெரியப்பா, அம்மா, சின்னய்யாவுக்கு என்ன பிடிக்குமோ அதெல்லாம் தான் செய்யறேன்!''

அவர் கூறியதும் ஒரு கணம் யோசித்தவள், ''இனிமே உங்க சின்னய்யாவுக்கு என்னவெல்லாம் பிடிக்குமோ, அதையே தினப்படி மெனுவா மாத்திடுங்க!

''இப்பதான் பெரியய்யாவும் இல்லை... அம்மாவுக்கும் டிரிப்ஸ்தானே ஏறிட்டிருக்கு! அவருக்குப் பிடிச்ச மெனு உங்களுக்கும் தெரியும்கிறதால்தான் சொல்றேன்'' சிறு முறுவலுடன் முடித்தாள்.

''சரிம்மா... எப்பவுமே எங்களுக்குன்னு தனியா ஒரு குழம்பு காய் செய்வோம்... அதோட சேத்து ஸ்பெஷலா வீட்டில எல்லாருக்கும் பிடிச்ச மாதிரி சமைப்போம்!

''இனிமே நீங்க சொன்ன மாதிரி அந்த ஐட்டம் எல்லாம் சின்னய்யாவுக்கு பிடிச்சதாவே செஞ்சிடுறேன்'' உற்சாகத்துடன் சரியென்றார் விசாலம்.

* * *



அன்றிரவு...!

நேற்று உறக்கத்தின் வருகையால் எங்கோ ஆழத்தில் ஒளிந்து கொண்ட பழைய ஞாபகங்கள், மீண்டும் மேலெழும்பி வந்து மிதக்க ஆரம்பித்தன...

அந்த தியேட்டர் சந்திப்பிற்குப் பிறகு, மறு வாரமே அவனை பீச்சில் சந்தித்தாள் அவள்.

கடற்கரைக்குச் சென்று ஸ்கூட்டியை நிறுத்திவிட்டு உற்சாகக் கரவொலியுடன் வரவேற்று ஆர்ப்பரித்த அலைகளுக்குள் கால் பதிக்க, வேகமாக நடக்க ஆரம்பித்தாள் அவள்.

ஓரக் கண்ணில் யாரோ தன்னைப் பின் தொடர்வது புரிய கவனித்தபோது, அன்று தியேட்டரில் சந்தித்த அந்த உயரமான மனிதன்தான் அவளுக்குப் பின்னால் வந்து கொண்டிருந்தான்.

உள்ளூரப் பொங்கிய சினத்துடன் நின்று திரும்பியவள், ''என்ன மிஸ்டர்? அன்னிக்கு தியேட்டர்... இன்னிக்கு பீச்சா? அழகான பெண்களைப் பாத்தா பின் தொடர்ந்து வழியறதே இந்த ஆண்களுக்கு வழக்கமாப் போச்சு!'' படபடவென்று பொரிந்தாள்.

சட்டென்று அவனுடைய விழிகளில் குறும்புச் சிரிப்பொன்று தடம் பதிக்க, ''அழகான பெண்ணா? அப்படி யாரையுமே இங்கே காணோமே...'

தோளைக் குலுக்கியபடி சுற்றும் முற்றும் தேடுவது போல் பாவனை செய்தான் அவன்.

அதுவே, அவளுள் பெரும் சினத்தை விதைத்தது.

''போதும் சார் உங்க கிண்டல் கேலி எல்லாம்! வந்த வேலையைப் பாத்துட்டு கிளம்புங்க!''

JUN 12 2010

சுள்ளென்று கூறிவிட்டு அவள் திரும்ப, ''அப்போ உங்க ஸ்கூட்டி சாவி வேண்டாமா? திரும்பிப் போகும் போது நடந்து போறதா உத்தேசமா?''

நக்கலாகக் கேட்டுவிட்டு நடக்க ஆரம்பித்தான் அவன்.

''என்ன... என் ஸ்கூட்டி சாவியா?'' என்றபடி உடனே தன்னுடைய ஹேண்ட் பேகை ஆராய்ந்தவள், பதட்டத்துடன் அவனைப் பின் தொடர்ந்தாள்.

ஒரு விரலில், அவளுடைய ஸ்கூட்டி சாவியை ஸ்டைலாகச் சுழற்றியபடி சென்று கொண்டிருந்தவனை மூச்சு வாங்க வழிமறித்தாள்.

''என்னோட கீ... உங்ககிட்ட எப்படி?'' தவிப்புடன் கேட்டாள்.

''என்ன மேடம்? அன்னிக்கு தியேட்டர்லேயும் என்னைப் பத்தித் தப்பாவே கணிச்சீங்க! இப்போ பீச்சா? நான் என்னவோ உங்க ஸ்கூட்டி சாவியை திருடின மாதிரி கேக்கறீங்க... அழகா கம்பீரமா ஸ்மார்ட்டா ஒரு ஆணைப் பாத்தா போதுமே பின் தொடர்ந்து வர்றதே இந்தப் பெண்களுக்கு வழக்கமாப் போச்சு!''

அவள் கூறியதையே கிண்டலாக வழி மொழிந்தவன், ஒற்றைப் புருவத்தை குறும்பாக உயர்த்தினான்.

உள்ளூர மூண்ட எரிச்சலுடன் தர்ம சங்கடமாக முறுவலித்தவள், ''ப்ளீஸ்... என் சாவியைத் தர்றீங்களா?'' மெதுவாகக் கேட்டாள்.

''ஏன் மிஸ்? சாவியை ஹேண்ட் பேகுக்குள்ளே போடறமா, இல்லை கீழே போடறமான்னு கூட கவனிக்க மாட்



...ங்களா? பாய் ஃபிரண்டைப் ப... ...சமா?''

அவனுடைய கேள்வி அவளுள் பொங்கிக் கொண்டிருந்த கோபத்தை அதிகரிக்கச் செய்வதாய்!

''நான் ஒண்ணும் பாய் ஃப்ரெண்டைத் தேடிப் போகலை! என் சாவியைக் குடுங்க!'' சுள்ளென்று சீறினாள்.

''ஓ... தேங்க் காட்...''

சிறு குறும்புடன் இதழோரம் துடிக்க அவன் முடித்த போது, கோபமும் குழப்பமுமாய் அவனையே ஏறிட்டாள் அவள்.

''எதுக்கு தேங்க் காட்! எனக்குப் புரியலை...?''

''ம்.. பாக்கப் போனா நீ எனக்கு தேங்க்ஸ் சொல்லி இருக்கணும்! உனக்குப் புரியாம இருக்கறதே நல்லது... இந்தா கீ!''

அவள் கையில் சாவியைக் கொடுத்து விட்டு விலகிச் சென்றான் அவன்.

அன்று... ஆறு மாதங்களுக்கு முன்பு அவனைச் சந்தித்தது... அதற்குப் பிறகு இப்போது தான் பார்க்கிறாள்!

''ஆனால், அவனுக்குத்தான் எதுவுமே நினைவில்லை... மறந்து விட்டதா இல்லை அப்படி நடிக்கிறானா?''

பல குழப்ப வினாக்கள் அவளுள் மையம் கொண்டன.

ஆனால், அவள் இங்கு வந்தது முதல் இன்று வரை இருவருக்குமிடையே நிகழ்ந்த அந்த இரு சந்திப்புகளை இதுவரை அவன் நினைவு கூரவேயில்லை!

JUN 12 2010

அதுவும் நல்லது தானென்று தோன்றியது அவளுக்கு! சென்னையில் ஸ்கூட்டியில் மாடர்னாக சுற்றித் திரிந்தவள், இங்கு எதற்கு வேலைக்கு வந்திருக்கிறாளென்ற கேள்வியாவது எழாமலிருக்கும்!

பல குழப்பங்களுடன் அவள் உறங்க ஆரம்பித்த போது, நேரம் நள்ளிரவாகியிருந்தது.

* * *

வர்த்தினிக்கு, தொடர்ந்து வந்த நாட்கள் முழுவதும் வேலைக்கு உண்டான நேரம் போக மற்ற பொழுதுகள், பிரகன் நாயகியுடனே கழிந்தன.

அவருடன் கழித்த தருணங்கள் அவளுக்குள் பல புதிய சிந்தனைகளையும் அதை செயல்படுத்தும் உத்வேகத்தையும் கொடுத்தன.

முதலில் அவரின் உடை மற்றும் ஹேர்ஸ்டைலை மாற்ற வேண்டுமென்று தோன்றியது.

மறுநாளே அது பற்றி தென்னவனிடம் பேசுவதற்காக அவனைத் தேடி அலுவலக அறைக்குச் சென்றாள் அவள்.

கதவை மெலிதாகத் தட்டிவிட்டு அவன் அனுமதியளித்ததும் உள்ளே சென்றபோது, ஏதோ ஒரு பைலில் ஆழ்ந்திருந்தான் அவன்.

''என்ன அண்ணன்... சொல்லுங்க?'' என்று நிமிர்ந்தவன், அவளை அங்கு எதிர்பார்க்கவில்லையென்பதை வியப்பில் உயர்ந்த அவனது புருவங்கள் அறிவித்தன.

''சார்! அம்மாவுக்கு... ட்ரெஸ்லே ஹேர் ஸ்டைல்லே சில மாறுதல்கள் செய்யலாமின்னு இருக்கேன்... உங்க பர்மிஷனோட! அதான் வந்தேன்.''



''ப்ச்... இதுக்கு என் பர்மிஷன் எதுக்கு வர்த்தினி... யு கேரி ஆன்... நான் பிஸியா இருக்கேன்... பூஜை ரூம்... மெனு சேஞ்ச் மாதிரி! இதுவும் நல்ல மாற்றமாவே இருக்கும்னு நான் நினைக்கிறேன்... கோ அஹெட்!''

சிறு முறுவலுடன் கூறிவிட்டு அவன் மீண்டும் வேலையில் ஆழ்ந்துவிட, அந்த இளம் முறுவல், அவளுள் பெரும் உத்வேகத்தை விதைப்பதாய்!

இந்த வீட்டில் நிகழ்ந்த இனிய மாற்றங்களை அவன் கவனித்திருக்கிறான்... ஆனால் கண்டு கொண்டதாகக் காட்டிக் கொள்ளவில்லை.

வெளியே வரும்போதே நேற்று நடந்த ஒரு நிகழ்வு ஞாபகம் வருவதாய்!



## 7

முதல் நாள் மதியம் அவன் சாப்பிட்டுவிட்டு அறைக்குச் செல்லும்போதுதான், அவள் மாடியேற ஆரம்பித்தாள்.

அப்போதுதான், அங்கு வந்த சம்பந்தத்திடம் அவன் பேசுவதை அவள் கேட்க நேர்ந்தது.

''அண்ணன்! சாப்பாடு மெனுவெல்லாம் மாறி இருக்கே... திடீர்னு எல்லாமே எனக்குப் புடிச்ச மாதிரி பண்றாங்க விசாலம்மா! பாத்து... மத்தவங்கெல்லாம் பயந்து ஓடிடப் போறாங்க!''

JUN 12 2010

அவன், தன்னைக் குறித்தே அப்படிக் கூறுவது புரிய அப்படியே, நின்றிருந்தாள் அவள்.

''அதெல்லாம் வர்த்தினிம்மா ஏற்பாடுங்கய்யா... உங்களுக்குப் பிடிச்ச மெனுவை தினமும் ஸ்பெஷலா செய்யச் சொல்லி இருக்காங்க'' அவர் பெருமையுடன் பகிர்ந்தார்.

''ஓ!'' என்றவன், அதற்கு மேல் எதுவும் பேசாமல் தோளைக் குலுக்கியபடி செல்வது தெரிந்தது.

யோசனையுடன் மெதுவாக மாடியேற ஆரம்பித்தாள் அவள்.

* * *

மறுநாளே, தான் பிரகன்நாயகியின் அறையில் செய்ய வேண்டிய மாற்றங்களை வர்த்தினி செய்ய ஆரம்பித்தாள்.

அதற்காக, அவள் ஒரு நாள் ஆத்தூருக்கு ஷாப்பிங் செல்ல வேண்டியிருந்தது.

ஒரு மருத்துமனையின் அறையைப் போல் காட்சியளித்த அந்த அறையில் புதிதாய் அழகிய இயற்கைக் காட்சிகள், பூக்குவளைகள், மெல்லிய திரைச் சீலைகள் என்று மாற்ற விரும்பினாள்.

ஆனால் தென்னவன் அப்படிக் கூறிய பிறகு, அவனிடம் சென்று மீண்டும் நிற்க மனமில்லாததால், சம்பந்தத்தை அழைத்துக் கொண்டே ஒரு நாள் மதியம் கிளம்பினாள்.

முதலில் திரைச்சீலையை வாங்கி அளவு கூறி தைக்கக் கொடுத்து விட்டு மற்ற கடைகளுக்குக் கிளம்பினர்.



டவுனில் தேவையானவற்றை வாங்கியபோது அவள் செலவழிக்க முயல, சம்பந்தம் தீர்மானமாக மறுத்து விட்டார்.

எல்லாவற்றையும் வாங்கி முடித்த பிறகு, இருவரும் வீடு திரும்ப அன்றே நர்ஸ் கனகம், வேலைக்காரர்களின் உதவியுடன் அந்த அறையை மாற்றி விட்டாள் வர்த்தினி.

அழகிய இள நீல நிறத்தில் லேஸில் அமைந்த திரைச் சீலைகளும், அங்கங்கு மாட்டப்பட்டிருந்த இயற்கை ஓவியங்கள், வண்ண மலர்கள் நிறைந்த பீங்கான் குடுவைகள், அழகிய படுக்கை தலையணை உறைகள், என்று எல்லாமே மாறி அறை ரம்யமாகி உயிர்ப்புடன் ஒளிர்ந்தது.

அன்று, மாலையில் நேரம் கழித்தே வீட்டிற்கு வந்த தென்னவன், குளித்து விட்டுத் தாயின் அறைக்குள் சென்றபோதோ பிரமிப்பாய்!

ஒரே நாளில், அந்த அறையே ஒரு அழகிய கூடாய் மாறியிருந்தது.

மனதிற்குள் புன்னகைத்தபடி ப்ரகன்நாயகியைப் பார்த்துவிட்டு வெளியே வந்தபோதுதான், வர்த்தினி எதிர்ப்பட்டாள்.

''ஒரு நிமிஷம்..'' என்று அவளை நிறுத்தியவன், ''யு ஹேவ் டன் எ க்ரேட் ஜாப்! தேங்க் யூ'' என்றான் உணர்ச்சிகள் நிரம்பிய குரலில்!

''வெல்கம்!'' என்று முறுவலித்தவளுக்குள் அவன் முதல் புன்னகை வெகு இதமாய்!

முன்பு சென்னையில் பார்த்தபோது குறும்பும் உற்சாகமுமாகத் தெரிந்தவன், இப்போது [illegible] மாறிவிட்டிருப்பதை அவள் உணர்ந்தே இருந்தாள்.

சிறு புன்னகைக்கும் பஞ்சமாய், எப்போதும் கடுமையைச் சுமந்த முகத்துடன் அவனிருந்ததும், இன்று அது மாறி இயல்பாக உயிர்ப்புடன் புன்னகைத்ததும் வியப்பாய்!

அதற்குள், அவன் குரல் அவளைக் கலைத்தது.

''இந்த மாதிரி வீட்டில் இண்டீரியர்லே ஏதாவது மாற்றங்கள் செய்யறதுன்னா கூட பண்ணலாம்... சம்பந்தம் அண்ணனைத் துணைக்கு வச்சிக்க!''

ஆழ்ந்த குரலில் அவன் கூறியதும், ''இல்லை சார்! இந்த வீட்டில மத்த இடங்கள் எல்லாமே ஒருவித ஆண்டிக் எஃபெக்டோட பர்பெக்ட்டா அழகாவே இருக்கு!

''அம்மாவோட ரூம் மட்டும் வயசானவங்க அறைங்கிறதால எந்த அலங்காரமும் இல்லாமத் தெரிஞ்சது... அதான் மாத்தினேன்!

''அவங்க எதையும் உணர்ற மனநிலையில் இல்லைன்னாலும், சுய நினைவு வந்தப்புறம் இதைப் பாத்தா ரொம்ப சந்தோஷப்படுவாங்க... லைவ்லியா ஃபீல் பண்ணுவாங்க இல்லியா? அதான்!''

வர்த்தினி முடிப்பதற்குள் சட்டென்று நிமிர்ந்து அவளையே ஊடுருவியவனின் விழிகள், கனிந்து தெரிந்தன.

''தேங்க்யூ! முதல் தடவையா எனக்கு நம்பிக்கை தார்ற வார்த்தைகளைச் சொன்னதுக்கு நன்றி! இது வரைக்கும் அம்மா சரியாயிடுவாங்கன்னு யாருமே சொல்லலை... டாக்டர்ஸ் உள்பட!''

ஒரு பெருமூச்சுடன் நிறுத்தியவனைப் பார்த்தால் பரிதாபமாய்!

தனிமையில் தவித்து நிற்கும் சிறு குழந்தையாய்!



ஏனோ அப்படியே அவன் முகத்தைக் கையிலேந்தி கவலைப்படாதே... உனக்கு நானிருக்கிறேன்' என்று கூற வேண்டும் போல்!

சிலீரென்ற பனித் திவலைகள் முகத்தில் சிதறிய உணர்வில், உடனே தன் எண்ணங்களை அடக்கியவள் புரியாத் தவிப்புடன் நிமிர்ந்தாள்.

''என்ன... பதிலே காணோம்?''

அவன் மெல்லக் கேட்க, ''ம்... நம்பிக்கை தானே வாழ்க்கை! அப்துல் கலாம் சார் சொன்ன மாதிரி, ''நான் இப்படி ஆகணும்னு முயற்சியோட கனவு கண்டா நிச்சயமா ஜெயிச்சிடலாமே... எனக்கு பாசிடிவ் அப்ரோச்தான் ரொம்பப் பிடிக்கும்!''

உடனே, தான் பேசியது அதிகப்படியோ என்பது போல் உதட்டைக் கடித்து நிறுத்தினாள்.

''எனக்கும் ரொம்பப் பிடிச்சிருக்கு!''

அவன் குரல் புரியாச் செய்தியுடன் வர, பதறி அவள் நிமிர்ந்தபோது, அவன் உதடுகளின் ஓரம் சிறு குறுஞ்சிரிப்பு!

''எனக்கும்... உன் பாசிடிவ் அப்ரோச் ரொம்பப் பிடிச்சிருக்குன்னு சொல்றேன்!''

ஆழமாய் வந்த அவன் குரலில் புரியாத ஒரு செய்தி!

ஆனால், 'நீ என்னோடிருக்கின்ற பொழுதுகளில், என்னை நான் இழந்து கொண்டிருக்கிறேன்' என்று கூறவேண்டும் போல்!

''ஓ! அப்புறம்... அம்மாவுக்கு ஒரு வீல் சேரும் வாங்கணும்! கொஞ்சம் நைட் டிரஸ், [illegible]

JUN 12 2010

யிருக்கு! ஒரு ப்யூட்டிஷனும் வேணும்!'' அவள் குரல் அவனை உசுப்பியது.

''ஏன்... அம்மாவுக்கு எதுக்கு ப்யூட்டிஷியன்? உனக்கு வேணும்னா, அதை உனக்குன்னே கேக்கலாம்!'' அவன் குரலில் சிறு கூர்மையும் கோபமும்!

''எனக்கு இல்லை! அம்மாவுக்குத்தான்! தலைக்குப் பின்னாடி இருக்கற முடியெல்லாம் படுத்தே இருக்கறதால சடை பிடிச்சிருக்கு... ஹேர் கட் பண்ணி பாப் மாதிரி பண்ணிட்டா ஈஸி... அதான்!''

மறுகணமே யோசனையுடன் தலையசைத்தவன், ''சம்பந்தம் அண்ணன் கிட்டே சொல்றேன்... அவர் எல்லா ஏற்பாடும் செய்வாரு!''

தோளைக் குலுக்கியபடி விலகிச் சென்றான்.

இரண்டாம் நாள் காலையில் அவன் கூறியபடி வந்த அழகு நிலையப் பெண், பிரகன் நாயகியின் தலை முடியை வெட்டி மஷ்ரூம் கட் போல் செய்தபோது, அவரிடம் பெரும் வித்தியாசம் தெரிவதாய்!

அவர், படுக்கும்போது பின்புறம் உறுத்தாமலிருக்க முடியைக் குறைத்து வெட்டியிருந்தது வசதியாக இருந்தது.

அன்று மதியமே கடைத்தெருவிற்குச் சென்று நைட்டிகளை வாங்கி வந்தாள் வர்த்தினி!

மருத்துவமனை ஆடைகளைப் போலிருந்த நீண்ட வெள்ளை அங்கியை மாற்றச் செய்து, அழகிய இள நிறங்களில் பெரிய நைட்டியை உடுத்தியபோது, ஒரு மேல் நாட்டுப் பெண்மணியைப் பார்ப்பது போலிருந்தார் பிரகன் நாயகி!



அன்று மாலையே வீல் சேரும் வந்துவிட, வேலைக்காரர்கள், நர்ஸின் உதவியுடன் அவரைத் தூக்கி வீல் சேரில் உட்கார வைத்தவள், மெதுவாகத் தள்ளியபடி தோட்டத்திற்கு அழைத்து வந்தாள்.

தோட்டக்காரருக்கும், மற்றவர்களுக்கும் மூன்று மாதங்கள் கழித்து தங்கள் எஜமானி வெளியே வந்ததில் பெரும் உற்சாகம்!

எல்லோரும் சுற்றி நின்று அவரை அதிசயமாய்ப் பார்த்து வர்த்தினியைப் புகழ, விசாலம் நெகிழ்ந்து போய் அழவே ஆரம்பித்து விட்டார்.

''சரி... சரி... அவங்களுக்கு ஃப்ரெஷ் ஏர் கிடைக்கணும்னு தான் இங்கேயே அழைச்சிட்டு வந்தேன்... இப்படி சுத்தி நின்னா! போய் வேலையைப் பாருங்க... இனிமே அம்மா தினம் சாயந்திரம் இப்படி வெளியே வருவாங்க!''

சிறு முறுவலுடன் அவள் கூற, அனைவரும் நகர மனமின்றி உள்ளே சென்றனர்.

நர்ஸ் மட்டும் உடனிருக்க, அங்கிருந்த கார்டன் பெஞ்சின் அருகே சென்று வீல் சேரை நிறுத்திவிட்டு அதில் அமர்ந்தாள் வர்த்தினி!

தூரத்திலிருந்து தோட்டக்காரர் அவர்களைப் பரவசத்துடன் பார்த்துக் கொண்டிருக்க, அவரை மட்டும் அழைத்தாள்.

''கன்னையா! இந்தச் செடி மரமெல்லாம் அம்மா வச்சது தானே?'' ஆர்வத்துடன் வினவினாள்.

''ஆமாம்மா! எல்லாமே அவங்க தன் கையால நட்டு பராமரிச்சது... செடிங்கன்னா அவங்களுக்கு உயிரும்மா! வாடவே விடமாட்டாங்க...''

''எனக்கு ஒரு நாள் உடம்பு சரியில்லைன்னாக் கூட அவங்களே தண்ணீர் பாய்ச்சுவாங்க!

''அவங்க நட்ட ரோஜா, டேலியாவெல்லாம் இந்த சீசன்லே பூக்கவே ஆரம்பிச்சிடுச்சி... அதைப் பாக்கற நிலைமையிலே அம்மாதான் இல்லை!''

வாயைத் துண்டால் பொத்தியபடி குலுங்கி அழ ஆரம்பித்தார் அவர்.

''ப்ச்... அழக் கூடாது... எனக்கு ஆண்கள் அழறது பிடிக்காது! அம்மா கூடிய சீக்கிரமே சரியாகி பழைய மாதிரி ஆகிடுவாங்க பாருங்க!''

விழிகளில் சிறு மின்னலுடன் உறுதியாகக் கூறியவளை வணங்கிவிட்டு அவர் தளர்ந்த நடையுடன் விலகிச் செல்ல, அவளோ ப்ரகன்நாயகியிடம் திரும்பினாள்.

''அம்மா! நீங்க பாத்துப் பாத்து வளர்த்த மரமெல்லாம் உங்க முகம் பாத்து சிரிக்குது பாருங்க! போன சீசனுக்கு நீங்க வெச்ச ரோஜாச் செடியெல்லாம் எவ்வளவு அழகாப் பூத்திருக்கு!

''வெள்ளை, சிவப்பு, மஞ்சள், லேவண்டர்னு அழகா மலர்ந்திருக்கு... டோலியாவெல்லாம் பெரிசா தன் விழி மலர்த்தி சிரிக்கற மாதிரி இருக்கு!

''இதையெல்லாம் நீங்க உணரணும்... பழைய மாதிரி ஆகணும்... அந்தப் பூவெல்லாம் உங்க குழந்தைங்க தானே... அதெல்லாம், நீங்க பழைய மாதிரி திரும்பி வந்து தங்களுக்கு உயிர்த் தண்ணீர் பாய்ச்ச மாட்டீங்களான்னு ஏக்கத்தோட காத்திட்டிருக்கறது உங்களுக்கும் புரியுது தானே!''



அவரிடம் குனிந்து அவள் பேசிக் கொண்டிருக்கும் போதே, அருகில் ஏதோ விழுவது போல்!

என்னவென்று திரும்பினால், பின்புறம் தன் தாயையே ...ர்ந்த விழிகளுடன் பார்த்தபடி உறைந்து நின்றிருந்தான் தென்னவன்!



# 8

அவன் வரவை உணராது பேசிக் கொண்டிருந்தோமே என்ற குற்ற உணர்வுடன் அவள் எழ, உடனே அவளைக் கையசைவில் அமரச் செய்தான்.

பிறகு தன் தாயின் அருகில் சென்றவனால் எதையுமே நம்ப முடியவில்லை.

அவரிடம் தெரிந்த பெரிய மாற்றம்... அழகிய ஆங்கிலோ இந்தியப் பெண்ணைப் போல் அவர் மாறியிருந்த கோலம்... அவனை அப்படியே நெகிழ்த்தி வீழ்த்தின.

சட்டென்று அவர் முன்னால் சென்று மண்டியிட்டு அமர்ந்தவன், ''அம்மா...''வென்ற ஒற்றைச் சொல்லுடன் அவர் கைகளைத் தனக்குள் ஏந்திக் கொண்டான்.

இருவரும் தனித்திருக்கட்டும் என்று இங்கிதத்துடன் அவள் விலகிச் செல்ல, அவன் குரல் அவளைத் தடுப்பதாய்!

''வர்த்தினி! எப்படி இது சாத்தியமாச்சு! ஒரே நாளிலே எங்கம்மாவோட உலகமே தன[illegible]ழா.. வண்[illegible]யமா மாறினது எப்படி? உன்னால தானே..!

"ஒரு நிமிஷம் நில்லு... நான் உன்கூடப் பேசணும்!'' என்றவன், தாயை ஒரு நிமிடம் ரசித்துவிட்டு எழுந்து அவளிடம் வந்தான்.

அவளுடைய கரங்களை உற்சாகத்துடன் பற்றியபடி "தேங்க் யூ... இதுக்கு மேல என்கிட்ட எந்த வார்த்தையும் இல்லை! நீ பேச ஆரம்பிக்கும்போதே நான் வந்துட்டேன்...

"இது... எப்படி...? இது வரைக்கும் எங்க எல்லாருக்குமே தோணாத விஷயங்களெல்லாம் உனக்கு மட்டும் எப்படித் தோணுச்சி!

"இப்படி உயிர்ப்போட அழகா அவங்களை மாத்தணும்னு என்னால கூட நினைக்க முடிய'லையே! அம்மாவுக்காக நீ எவ்வளவு யோசிச்சிருக்கே! ஓ காட்... தேங்க்யூ சோ மச் வர்த்தினி!'' என்றான்.

பல உணர்ச்சிகளும், நன்றியும் பெரிதும் கசிந்தன அவன் விழிகளிலும், வார்த்தைகளிலும்!

அவன் வலியப் பிடித்திருந்த தன் கரத்தை உடனே விடுவித்துக் கொண்டாள் அவள்.

"வெல்கம்! அம்மா சரியாகணும்... அதுக்கு என்ன செய்யலாமின்னு யோசிச்சேன்... அவங்க ரூம், ட்ரெஸ், அட்மான்ஸ்பியர் எல்லாம் மாத்தணும்னு தோணிச்சி...!

"அதான் வீல் சேரும் கேட்டேன்... அம்மாவை இந்த மாதிரி வெளியே அழைச்சிட்டு வந்தா அவங்களுக்கு ஒரு புத்துணர்ச்சி கிடைக்கும்னு நான் நினைச்சேன்... அவ்வளவு தான்!''

சிறு முறுவலுடன் இயல்பாக முடித்தவளையே அவன் விழிகள் உச்சி முதல் பாதம் வரை வருடின.



கொடி போன்ற உடலமைப்பில் உயரமாய்... அழகின் மொத்த உருவமாய்... ஒரு தேவதையைப் போல் மனித நேயத்தின் மறு பதிப்பாய் நின்றிருந்தவளையே ஆழ்ந்து ரசித்தவன், மறுகணமே தலையைக் குலுக்கித் தன்னை அதிலிருந்து விடுவித்தான்.

'என் மனதை எப்படி உனக்கு அறிவிப்பேன்? வண்ணத்துப் பூச்சியிடம் வர்ணங்களையும், புல்லாங்குழலிடம் ஓசையையும் கடன் கேட்டிருக்கிறேன்' என்று கூற வேண்டும் போல்!

அவனுடைய பார்வை அவளை ஏதோ செய்ய வேறு புறம் திரும்பியவள், ப்ரகன் நாயகியை நோக்கிச் சென்றாள்.

அவனுடைய தந்தை இறந்ததிலிருந்து கடந்த ஆறு மாதங்களாக எந்தவித மென்மையான உணர்வுகளுக்கும் இடம் கொடாமல் இறுகிப் போயிருந்தவனுடைய இதயத்திற்குள், மெல்லிய மழைச் சாரலாய் சலனத் துளிகள்!

வீல் சேரை மெதுவாகத் தள்ளியபடி தன் தாயிடம் மென் குரலில் பேசிக் கொண்டு அவள் தோட்டத்தை இயல்பாய் வலம் வர ஆரம்பிக்க, அவனுள் எதுவோ பிறழ்வது போல்... உள்ளூர எங்கோ பல ஆர்ட்டீஷியன் ஊற்றுகள் பீறிட்டுக் கிளம்பவது போல்!

முன்பு, இதுபோல் தான் முதன் முறையாக உணர்ந்த ஒரு தருணம் ஞாபகம் வர அவனறியாமல் இதழோரம் ஒரு ரகசியச் சிரிப்பு ஜனித்தது!

பிரகன் நாயகி மீண்டும் பழைய நிலைமைக்கு வந்து இயல்பாகி விடுவாரென்று... மனதோரம் ஒரு மாயப் பட்சி கூறுவது போல்!

JUN 12 2010

வேகமாக வீட்டிற்குள் சென்றவனுக்குள், மலரும் ஞாபகங்களாய் கடந்த நாட்களின் அணிவகுப்பு!

* * *

தன் சுயநினைவின்றி சக்கர நாற்காலியில் சாய்ந்தபடி ஒரு குழந்தையைப் போல் வந்த ப்ரகன்நாயகியைப் பார்த்த வர்த்தினிக்கோ பெரும் பரிதாபமாய்!

உடனே தன் தாயின் நினைவில் மனம் கசங்க, இவர் தன் குடும்பத்திற்காகவே வாழ்ந்தது, மற்றவர்களின் வாய் மொழியால் புரிவதாய்!

ஒரு பெரிய குடும்பத்தை எடுத்து நடத்தி திறமையாக நிர்வகித்து வந்தவர், இன்று ஓய்ந்து படுத்திருப்பதைப் பார்த்தால் பெரும் சங்கடமாய் இருந்தது.

அவரை எப்படியாவது குணமாக்கி விட வேண்டுமென்ற தவிப்பு அவளிடம்!

ப்ரகன்நாயகி உணர்கிறாரோ இல்லையோ, மெதுவாகப் பேசியபடி நடந்தபோது, அவரை இயல்பாக்க முடியுமென்ற நம்பிக்கை வருவதாய்!

மறுநாளிலிருந்தே அதை முழுமையாகச் செயல்படுத்த ஆரம்பித்தாள் அவள்.

தினமும், அவருடன் பல விஷயங்களைப் பற்றிப் பேசுவதும், மெல்லிசைப் பாடல்கள், பக்திப் பாடல்கள் என்று சி.டி.யில் போடுவதும், வீல் சேரிலேயே தோட்டத்தை சுற்றிக் காண்பிப்பதும் வாடிக்கையாயிற்று.

அந்த மாற்றங்களை அவர் உணர்ந்தாரோ இல்லையோ, அந்தப் பண்ணை வீட்டிலிருந்த மற்றவர்கள் அவளை நேசிக்க ஆரம்பித்தனர்.

* * *



ஒருமுறை அவள் டவுனுக்கு சென்றிருந்தபோதுதான் அங்கு பழைய தோழி ஒருத்தியை சந்தித்தாள் அவள்.

சிறு வயது முதல் அவளுடன் கான்வென்ட்டில் ஒன்றாகப் படித்த ஆர்த்தி, இப்போது திருமணமாகி ஆத்தூரில் தான் இருப்பதாகக் கூறியபோது அவளுக்கு மிகுந்த சந்தோஷமாய்!

இருவருமே பழைய கதைகளைப் பேசிப் பிரியும்போது தான், இங்கு பக்கத்து கிராமத்தில் தான் வேலை செய்கின்ற விபரத்தைக் கூறினாள் வர்த்தினி!

அப்போது ப்ரகன்நாயகியைப் பற்றி அவள் கூற, ஆர்த்தியின் தாயும் அதுபோல் கோமாவில் இருந்து தீவிர மருத்துவ சிகிச்சையாலும், ''ப்ரானிக் ஹீலிங்'' என்கின்ற ப்ராண சிகிச்சையாலும் இப்போது பூரண குணமடைந்திருப்பதை உற்சாகத்துடன் உரைத்தாள் அவள்.

உடனே அந்த முறையில் முயற்சித்துப் பார்க்கலாமே வென்று தோன்ற, அன்றே தென்னவனிடம் பேசினாள் அவள்.

தன் தாயின் மீதுதான் அவளுக்கு எவ்வளவு அக்கறை? இதயம் இதமாய் மலர்ந்தது.

உடனே நேசத் தூண்டில் போட்டது மனது... இன்றாவது அதில் நீ சிக்குவாயா என்று!

அவன் பார்வையில் தான் வந்த காரணத்தை மீண்டும் நினைவு படுத்தினாள் வர்த்தினி!

அவனோ மறுப்பின்றி ஒத்துக் கொள்ள, தினமும் ஒரு ''ப்ரானிக் ஹீலர்'' ப்ரகன் நாயகியை வந்து பார்த்து சிகிச்சையளிக்க ஆரம்பித்தார்.

JUN 12 2010

நோயாளிகள் இழந்திருக்கும் பிராண சக்தியை அளித்து, அவர்களுடைய 'ஹெல்த் ஆரா'வை சரி செய்து எல்லா சக்கரங்களுக்கும் சக்தியூட்டி... நோயை குணமாக்கும் அற்புத சிகிச்சை அவருக்கு அளிக்கப்பட்டது.

உடலை குணப்படுத்தும் சக்தியின் ஓட்டம் சீராக இல்லாமல் தடைப்படும்போது நோய் ஏற்படுகிறது! பிராண சிகிச்சை சக்தி ஓட்டத்தை சீர் செய்து, சக்கரங்களின் மூலமாக நம் உடலை குணப்படுத்துகிறது என்பதை உணர்ந்தாள் அவள்!

மருத்துவ சிகிச்சை... ப்ராண சிகிச்சை... வர்த்தினியின் அன்பான அணுகுமுறை என்று மும்முனை சிகிச்சையில் ஆட்படுத்தப்பட்டார் பிரகன்நாயகி!

நாட்கள்... சிறகு விரித்து விரைந்தன!

அந்த வீட்டிலிருந்த அனைவருமே ஒருவித எதிர்பார்ப்புடனும் தவிப்புடனும் காத்திருக்க ஆரம்பித்தனர்.

குணமளிக்கும் நேரம் குறைவாகும் என்றாலும் உணர்விழந்த பிரகன் நாயகி அம்மாவுக்கும் சிகிச்சை பலன் தரும் என்றார் அந்த பிராண சிகிச்சையாளர்!

மற்றவர்கள் எப்படியோ, ஆனால் வர்த்தினி மட்டும் பெரும் நம்பிக்கையைச் சுமந்திருந்தாள்.

எப்போதும் போல் உற்சாகத்துடன் அவருடன் பேசியபடி தோட்டத்தைச் சுற்றி வலம் வந்தாள். 'மாஸ்டர் சோவா காக் சுயி' அவர்களின் பிராண சிகிச்சையில் பெரும் நம்பிக்கை வந்திருந்தது அவளுக்கு!

நல்ல பாடல்களை சி.டி.யில் போட்டு ஹெட் போனில் அவர் கேட்குமாறு ஒலிக்க வைத்தாள்.



ஒரு 'மெடிகல் மிராகிள்' நடந்து அவர் இயல்பாக வேண்டும் என்ற ப்ரார்த்தனை அவளிடம் அதிகமாய்!

காலம், தனக்குள் பெரும் அதிசயங்களையும் ரகசியங்களையும் ஒளித்தபடி பயணிக்க ஆரம்பித்தது.



## 9

ஒரு நாள் மாலையில் தோட்டத்தில் வீல் சேரில் அவரை வைத்துத் தள்ளியபடி நடந்து கொண்டிருந்தாள் வர்த்தினி.

எப்போதும் போல் மலர்களைப் பற்றியும், மனிதன் சுவாசிக்க ப்ராண வாயுவைப் பரிசளிக்கும் மரங்களைப் பற்றியும் பேசியபடி வந்தவள், சட்டென்று நின்று விட்டாள்.

வீல் சேரின் மேலிருந்த பிரகன் நாயகியின் விரல்களில், மெல்லிய அசைவு!

உடனே, குதூகலத்துடன் ''அம்மா...''வென்று அவர் விரலைப் பிடித்து அவள் வருட, விழி இமைகளில் மெல்லிய சலனம் தெரிவது போல்!

உடனே தோட்டக்காரரை அழைத்தவள், ப்ரகன் நாயகியைப் பார்த்துக் கொள்ளும்படிக் கூறிவிட்டு, ஓடிச் சென்று உடனே அவர்களின் குடும்ப டாக்டருக்குப் போன் செய்தாள்.

பிறகு தென்னவனுக்கும் போனில் விபரத்தைக் கூற, அவன் உடனே கிளம்பி வருவதாகக் கூறினான்.

JUN 12 2010

பிறகு இருவருமே வந்துவிட, ப்ரகன் நாயகியைப் பரிசோதித்த டாக்டரும் அவளுடைய சந்தேகத்தை மெய்ப்படுத்தினார்.

உடனே அவரை சென்னைக்கு அழைத்துச் சென்று, மருத்துவமனையில் அனுமதித்து உரிய சிகிச்சையளித்தால், சீக்கிரம் அவர் நிலையில் நல்ல மாற்றம் வரலாமென்றும் கூறினார்.

திடீரென்று அவனைப் பார்த்த விழிகளில் மெல்லிய அசைவும் சலனமும் வர, தென்னவனுக்கோ தாங்க முடியாத மகிழ்ச்சியும் உற்சாகமும்! வர்த்தினிக்கோ விண்ணில் பறக்கின்ற உணர்வு!

அன்றிரவு... தோட்டத்து அழகை நிலவொளியில் ரசித்தபடி மெல்ல நடந்து கொண்டிருந்தாள் அவள்.

திடீரென்று எதிரே வந்து நின்ற தென்னவனின் விழிகளில் புரியாத ஒரு உணர்வு! வேதங்களின் அர்த்தமாய்த் தோன்றியது... அவளைப் பார்த்தபோது!

"வர்த்தினி... தேங்க் யூ சோ மச்" என்றவன், எதிர்பாராத விதமாக அவளை இழுத்து இறுக அணைத்து விட்டான்.

உடலிலிருந்த ஒவ்வொரு செல்லும் தவித்து நிற்க, சட்டென்று விலகி உள்ளே ஓடி விட்டாள் அவள்.

* * *

அந்த வாரமே ஆம்புலன்ஸ் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு, நர்ஸ் கனகத்துடன் தென்னவனும் சென்னைக்குக் கிளம்பினான்.

அவன் திரும்பி வந்ததும் என்ன சொல்லப் போகிறானோ வென்ற கவலையும், வேறு வேலை தேட வேண்டுமே வென்ற சஞ்சலமும் அவளைப் பெரிதும் ஆக்ரமித்தன.



ஆனால், ப்ரகன்நாயகி அம்மாள் குணமாக வேண்டுமென்ற ப்ரார்த்தனையும் அவளிடம் அதிகமாய்!

இரு நாட்கள் எதிர்பார்ப்புடன் கழிய, மூன்றாம் நாள் காலையிலேயே வந்து விட்டான் தென்னவன்.

ப்ரகன்நாயகியை ஒரு பெரிய மருத்துவமனையில் அனுமதித்து விட்டதாகவும், அவர் தன்னுடைய குடும்ப நண்பர் என்பதால் நன்றாகப் பார்த்துக் கொள்வாரென்றும் கூறினான்.

அவளுடைய வேலையைப் பற்றி அவன் ஒன்றுமே கூறாததால், தவிப்புடன் அவனையே ஏறிட்டாள் அவள்.

"என்ன அப்படிப் பாக்கறே? இப்ப ரெண்டு கவலை உனக்கு, இல்லை? அம்மா ஹாஸ்பிடலுக்கு போயிட்டாங்களே... அவங்க நல்லபடியா நார்மலாகித் திரும்பணும்னு ஒரு எதிர்பார்ப்பு...

"இன்னொண்ணு... நம்ம வேலை என்னாகுமோன்னு! இப்பத் தான் உன் தேவை இங்கே அதிகம்! அம்மா சுய நினைவே இல்லாம இருந்தாலும், இங்கே அவங்க இருக்கறதே ஒரு பலம்!

"இல்லேன்னா, எவ்வளவுதான் வேலைக்காரங்க நல்லவங்களா இருந்தாலும், நம்ம பார்வை அவங்க மேல இருந்துட்டே இருக்கணும்னு அம்மா சொல்லுவாங்க! அதனால உன்னோட ப்ரசென்ஸ் இப்பதான் அதிகமாத் தேவை!"

ஆழ்ந்த குரலில் கூறிவிட்டுத் தன் அலுவலக அறைக்குள் சென்று விட்டான் அவன்.

* * *

JUN 12 2010

நாட்கள்... மெல்லக் கடந்தன.

இப்போதெல்லாம், எல்லா விஷயங்களையுமே அவளிடம் கலந்தாலோசிக்கும் அளவிற்கு, தென்னவனுக்கும் அவளுக்குமிடையே ஒருவித நட்பு இழைகோர்த்திருந்தது.

வீட்டு நிர்வாகம், பால் பண்ணை கணக்குகள் எல்லாமே இப்போது அவள் வசமிருந்தன.

அந்த வீடு ஒரு விதத் தடையுமின்றி இலகுவாகச் சுழல, வர்த்தினியும் முக்கியக் காரணமாகி இருந்தாள்.

ஒரு நாள் தோட்டத்தில் அமர்ந்து பழைய விஷயங்களை யோசித்தபடி இருந்தாள் அவள்.

மாலைக் காற்று ரம்யமான குளிருடன் அவளை வருட, சிலிர்த்தது இதயம்!

திடீரென்று மனக் கிளையில் பால்ய நினைவுகளின் மலர்வு!

காட்டுச் செடிகள்... மயக்கும் மலர்கள்... மண் மணம் எல்லாவற்றையும் ஒன்றாய் சேகரித்து நாசிக்கு அறிமுகம் செய்தது வாடைக் காற்று!

சுந்தர மகாலிங்கம், தன் வாழ்க்கையில் நுழைந்த தருணங்கள் மெல்லிய புகைப்படலமாய் உள்ளே பரவின.

அவளுக்கு நினைவு தெரிந்து வந்த ஐந்தாவது பிறந்த நாள்... அன்று தான் அந்தத் திருப்பம் நிகழ்ந்தது.

பார்சலில், புது கவுனும், பிறந்த நாள் வாழ்த்தும் முதன் முதலில் அன்பளிப்பாக வந்தது அவளுக்குப் புதிதாய்!

'சிவம்' என்ற பெயருடன் வந்த அந்தப் பொருட்களுடன் ஒரு கடிதமும் இருந்ததாக அப்போது சுகந்தி தான் கூறினார்.



தான் சுகந்தியின் தூரத்து உறவென்றும், வெளியூரில் இருப்பதால் அவளுக்கு அண்ணன் முறை என்பதால், குழந்தைக்கு இந்தப் பொருட்களை அனுப்பியிருப்பதாகவும் அதில் எழுதியிருந்தது.

ஒவ்வொரு பண்டிகையிலும் விசேஷ நாட்களிலும் இதுவே தொடர, வர்த்தினியின் பிஞ்சு மனது அவளறியாமலே அவரிடமிருந்து பரிசுகளை எதிர்பார்க்க ஆரம்பித்தது.

அவளுடைய ஏழாவது பிறந்த நாளன்று அவர் தொலைபேசியிலும் அவளை வாழ்த்த, தந்தையின் அரவணைப்பின்றி இருந்தவளுக்கு அது பெரும் இதமாய்!

அவருடைய குரலும், கனிவான பேச்சும் அவளுக்குள் பெரும் மாயம் செய்ய, அன்றிலிருந்து ஒரு நண்பனாய், இழந்த தந்தையின் மறுபதிப்பாய் ஏற்க ஆரம்பித்தது இதயம்!

அன்றிலிருந்து மாதம் ஒரு முறையாவது அவளிடம் போனில் பேசி அவளைப் பற்றியும் படிப்பு, பொழுது போக்குகள் பற்றியும் விசாரிப்பதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தார் அவர்.

அவருடைய பரிசுகளை விட, அவருடன் பேசும் தருணங்களுக்காக அந்த இளம் பிஞ்சு காத்திருக்க ஆரம்பித்ததுதான் நிஜமாய்!

பள்ளியில் எல்லாப் பிள்ளைகளுடனும் வருகின்ற அவரவர் தந்தையினை ஏக்கத்துடன் கவனிப்பவளுக்கு அவர் பேச்சு, ஒரு பெருமருந்தாய்!

அப்போதுதான் அவளுடைய எட்டாவது பிறந்த நாளும் நெருங்கியது.

JUN 12 2010

அன்று காலையில் எழுந்து தயாராகி ஆவலுடன் காத்திருக்க, அழைப்பு மணி ஒலித்ததும் பார்சல் வந்திருக்குமென்ற எதிர்பார்ப்பில் ஓடிச் சென்று கதவைத் திறந்தாள் அவள்.

அங்கு புன்னகையுடன் சுந்தரமகாலிங்கம் நின்றிருக்க, அவளுக்கோ யாரென்று புரியவில்லை.

பிறகு அவர் தன்னை அறிமுகம் செய்து கொள்ள, அன்று முழுவதும் அவள் அவரை விடவேயில்லை!

மாமா... மாமாவென்று பாசத்துடன் ஒட்டிக் கொண்டாள்.

ஆனால், சுகந்தி மட்டும் பெரிதும் ஒதுங்கியே இருந்தார்.

அன்றிலிருந்து அவளுக்கு ஒரு கார்டியனாய், காட்ஃபாதராய் அவர் மாறிப் போனார்.

மறு மாதமே ஒரு புது வீட்டுக்கு அவர்கள் குடிபுக, அவள் படிக்கும் பள்ளிகூட மாற்றப்பட்டு வசதியானவர்களின் பிள்ளைகள் படிக்கின்ற பள்ளியில் சேர்க்கப்பட்டாள்.

அன்றிலிருந்து, இங்கு வருவதற்கு முன்பு அந்தக் கொடூரமான உண்மை தெரியும் - வரை, அவள் உலகமே சாந்தியும், மகாலிங்கமும் தானென்று இருந்தது.

ஆனால் உண்மை தெரிந்த பிறகுதான், அவளுக்கும் இருவர் மீதும் பெரும் வெறுப்பாய்,

தன் தந்தையைக் கொன்றது அவர்தானென்று தெரிந்ததும், அதை மறைத்த தாயின் மீது வந்த வெறுப்பும், ஒரே நாளில் எல்லாவற்றையும் தூக்கி எறிந்து விட்டு இருவரையும் பிரிந்து வந்து விட்டாள்!



தன் தாயின் உறவினர் கூறியதைப் போல், அவர்களிருவருக்கும் ஏதாவது தவறான தொடர்பு இருக்குமோ...? நினைத்துப் பார்க்கவே கூசியது.

தன் கடந்த கால வாழ்க்கையை நினைத்தால் இன்று அவளுக்கே வேதனையாய்!

கொலையுண்டு இறந்து போன தந்தையை நினைத்தால் உடலெங்கும் ஒருவிதக் குளிர் பரவி, சிறு நடுக்கம் ஓடியது.

விழிகள் கலங்கி கண்ணீர்த் துளிகள் மெல்ல ஜனிக்க ஆரம்பித்தன.

"என்ன... இங்கே வந்து உக்காந்திருக்கே?"

திடீரென்று ஒலித்த ஆழ்ந்த குரலில் திடுக்கிட்டுத் திரும்பியவள், தன் கண்ணீரை மறந்து விட்டாள்.

ஆனால், அவனுடைய கூர்மையான விழிகள் அதை உடனே கண்டுவிட புருவங்களிரண்டும் யோசனையுடன் நெறிந்தன.

"ஏன்... என்னாச்சு? உனக்கு இங்கே ஏதாவது ப்ராப்ளமா?"

அக்கறையுடன் அவன் வினவ, அவள் உடைந்து சிதற அந்தக் கேள்வி ஒன்றே போதுமானதாய்!

ஒரு விம்மலுடன் அவள் திரும்பி வேகமாக நடக்க ஆரம்பிக்க, சட்டென்று வழி மறித்து அவளை ஏந்தி ஆறுதல் கூற ஆரம்பித்தான் அவன்.

அந்தத் தருணம் தன் நிலை மறந்து அவனுடைய பரந்த வலிய மார்பில் ஒடுங்கி தன் துயரங்களை அழுகையில் கரைத்தவளுக்கு, திடீரென்று தன்னிலை உறைப்பதாய்!

JUN 12 2010

பதறி விலகியவளை ஒருவித இயலாமையுடன் விடுவித்தான் தென்னவன்.

"என்ன வர்த்தினி? ஏன் இவ்வளவு அழுகை? ரொம்ப தைரியமானவ நீன்னு நினைச்சேன்!" மெல்லிய குரலில் கேட்டு விட்டு நின்றவனிடம் எதுவும் கூறாமல் விலகிச் சென்று தன் அறைக்குள் நுழைந்தவளுக்குள், ஏனோ பலமிழந்த உணர்வு!



# 10

மறுநாளிலிருந்து, அவன் அவளிடம் இயல்பாய் நெருங்க, வர்த்தினியோ வெகுவாய் ஒதுங்க ஆரம்பித்தாள்.

தன்னுடைய ரிஷிமூலம் தெரிந்து விடுமோவென்ற பயமும், ஒரு பலவீனத் தருணத்தில் தன்னைப் பற்றி பிறர் அறிய வழி செய்து விடுமோவென்ற தயக்கமும் அவளை இறுகச் செய்திருந்தன.

தொடுவானமாய் அவளிருக்க, அதைத் தீண்டத் தொடர்ந்து ஏமாறிய ஓட்டப் பந்தய வீரனாய், அவன் தனித்து நின்றிருந்தான்.

ஒரு நாள் மாலையில், வீட்டைச் சுற்றியிருந்த தோப்பில் வர்த்தினி வாக்கிங் சென்று கொண்டிருந்தாள்.

பின்புறம் திடீரென்று வேகமாக சருகுகள் மிதிபடும் ஒலியில் திரும்பினால், பெண் ஒருத்தி ஓடி வர ஒருவன் அவளைத் துரத்தி வந்து கொண்டிருந்தான்.



என்னவென்று யோசிக்கும்போதே அவளிடம் வந்து பருந்தைக் கண்ட சிறு பறவையாய் ஒடுங்கினாள் அந்தப் பெண்!

உடனே அவளை மறைத்துத் திரும்பி சீற்றத்துடன் முறைத்தவளை, கோபத்துடன் எச்சரித்தான் அந்த மனிதன்!

"ஏய்! மரியாதையா அவளை என் கூட அனுப்பிடு... என்ன விஷயம்னு தெரியாம என் கூட வம்பு வெச்சுக்காதே."

"என்ன... தனியா இருக்கற பொண்ணுங்களை மிரட்டறியா? யாரும்மா இவன்?"

அந்தப் பெண்ணிடம் திரும்பிக் கேட்டாள்.

"அவன், என்னைக் கல்யாணம் செஞ்சுக்கணும்னு துரத்தறான்க்கா... நான் வேற ஒருத்தரை விரும்பறேன்னு தெரிஞ்சும் என்னை விட மாட்டேன்னு தப்பா நடக்க வர்றான்."

அழுகைக்கிடையே வந்த அந்தக் குரலில் வெகுண்டவள், உடனே திரும்பி தனக்குத் தெரிந்திருந்த கராத்தேயின் உதவியால் அவனை சரித்து வீழ்த்தினாள்.

ஒரு பெண்ணிடம் இதை எதிர்பாராத்திராத அவன் எழுந்து பயந்து ஓட, திடீரென்று யாரோ கை தட்டும் ஒலி கேட்டது.

திரும்பினால் தென்னவன்தான், தன் வழக்கமான கம்பீர நடையுடன் வந்து கொண்டிருந்தான்.

"வெல்டன்! புலியை முறத்தால விரட்டின தமிழச்சி பத்தி படிச்சிருக்கேன்...



JUN 12 2010

"ஆனா கராத்தேயால தைரியமா ஒரு முரடனை விரட்டின தமிழ்ப் பெண்ணை முதன் முதலாப் பாக்கறேன்... குட்!" சிறு குறும்புடன் மெச்சினான்.

"ஹூம்! இந்தத் தென்னவனோட ராஜ பரிபாலனத்துல, ஒரு பெண்ணோட பாதுகாப்பு கேள்விக்குறியானது வருத்தமில்லையா?"

அவளும் ஏளனமாகவே கேட்க, "மிகுந்த வருத்தமே அம்மணி! இனி பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டு இது போன்ற அசம்பாவிதங்கள் தவிர்க்கப்படும்!" உதட்டோரம் துடிக்க அவனும் அவள் பாணியிலேயே உரைக்க, சட்டென்று சிரித்து விட்டாள் அவள்.

அவள் இமை மூடி ரசித்துச் சிரித்ததும், சட்டென்று பிரகாசமானது அவன் உலகம்!

பிறகு அந்தப் பெண்ணை அழைத்துக் கொண்டு இருவரும் வீட்டிற்குச் சென்றனர்.

அங்கு விசாரித்ததும்தான், அவளுடைய தந்தை அவனுடைய சோப் பேக்டரியில் வேலை செய்வது தெரிய வந்தது.

உடனே அவரை வரவழைத்து, அந்தப் பெண் அன்னக்கிளியை பத்திரமாக அனுப்பி வைத்தனர்.

பிறகு அவளிடம் திரும்பியவன், "வர்த்தினி! இது மாதிரித்தான் புத்திசாலித்தனமா நடந்துக்கணும்! ஆனா எதிராளியோட பலத்தையும் கணிச்சி செயல்படணும்! இல்லேன்னா ரிசல்ட் வேற மாதிரி ஆகிடும்!"

சிறு புன்னகையுடன் கூறிவிட்டு உள்ளே சென்று விட்டான் அவன்.

* * *



மறுநாளிலிருந்தே வாழ்க்கை தெளிந்த நீரோடையாய் செல்ல ஆரம்பித்தது.

ஒரு நாள் அவளை அழைத்த தென்னவன், ப்ரகன் நாயகியிடம் நல்ல முன்னேற்றம் தெரிவதாகவும், அவர் மெதுவாகக் குணமடைந்து வருவதாகவும் தெரிவித்தான்.

அவளுக்குள்ளே... சந்தோஷ மின்னல்கள் பிரகாசமாய்ப் பரவின.

"ஓ! தேங்க் காட்! ரொம்ப மகிழ்ச்சியா இருக்கு! அம்மா எப்ப இங்கே வருவாங்க?" ஆர்வத்துடன் கேட்டாள்.

"ம்! எப்படியும் முழுசா குணமாக ரெண்டு மூணு மாசமாவது ஆகும்னு டாக்டர் சொல்றாரு! அவங்க வரும் போது, இங்கே தன்னை குணப்படுத்தின தேவதையைப் பாத்தா எவ்வளவு சந்தோஷப்படுவாங்க தெரியுமா?"

அவன் விழிகள் மின்மினிகளாய் ஒளிர, என்றுமில்லாத பெரும் தேஜஸ் இன்று அவன் முகத்தில்!

இரவிற்கு ஒரு வண்ண நிலவாய் தனக்கு அவள் மட்டுமே இருப்பதை உணரும் போதே அவள் குரல் கலைத்தது.

"அப்படி எல்லாம் இங்கே யாரும் இல்லை... நான் இங்கே வேலை செய்ய வந்திருக்கற ஒருத்தி... அவ்வளவு தான்!"

மெல்லிய குரலில் தன் தலை குனிந்தபடி அவஸ்தையாக முணுமுணுத்தாள்.

"இல்லை! என்னைப் பொறுத்த வரைக்கும் நீ என் தேவதை மட்டும் இல்லை! என்னை... என் உணர்வுகளை இனிதா ஆக்ரமிச்சு எனக்குள்ளே கலந்துட்ட [illegible]ரிய சகி."

JUN 12 2010

எப்போது அருகே வந்தானென்றே தெரியாமல் பக்கத்தில் வந்து திடீரென்று கைபிடித்தபடி அவன் கூற, உடனே மிரண்டு விட்டாள் அவள்.

''நோ...''வென்று அலறியபடி அங்கிருந்து ஓடித் தன் அறைக்குள் அவள் புக, செய்வதறியாது திகைத்தவனின் விழிகள் சட்டென்று இடுங்கின.

மறுகணமே அவளுடைய அறைக்குச் சென்று கதவைத் தட்டியவன், அவள் திறக்காமலே போக கடும் சினத்துடன் தன் அறைக்கு வந்தான்.

அன்று முழுவதும் தீவிரமாய் யோசித்தவனுக்குள் இறுதியாய் ஒரு முடிவு!

ஒரு வித நிம்மதியுடன் அன்றிரவு உறங்க ஆரம்பித் தான் அவன்.

* * *

மறுநாள் காலையில் தென்னவன் வெளியேறும்வரை, வர்த்தினி அவன் கண்ணில் படவே இல்லை!

இன்றே அவனிடம் இது பற்றிப் பேசி விட்டு நாளையே கிளம்பி விட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தாள் அவள்.

அன்றிரவு அவன் தாமதமாகவே வீட்டிற்கு வர, அவ ளால் எதுவும் பேச இயலாது போயிற்று!

ஆனால், மறுநாள் காலையில் அவன் வாக்கிங் கிளம்பும்போது, அவனைத் தேடிச் சென்றாள்.

அவன் தோட்டத்தில் இறங்கி நடக்க ஆரம்பிக்கும் போதே அழைத்தவள், ''சார்! நான்.. இன்னிக்கு ஊருக்குக் கிளம்பலாமின்னு இருக்கேன்! நீங்க வேற யாராவது



ஒருத்தரை, இங்கே அப்பாயிண்ட் பண்ணிடுங்க! என்னைத் தப்பா நினைக்க வேண்டாம்!'' மெல்லிய குரலில் பகர்ந் தாள்.

அதைக் கேட்டவுடன் அவன் விழிகள் பளிங்காய் ஒளிர, முகம் சுருங்கி இறுகியது.

தெருக்கோடியிலிருக்கும் ஒற்றை விளக்குக் கம்பமாய், தார ஒளிர்ந்தன அவளைப் பற்றிய ஞாபகங்கள்!

இதை அவன் எதிர்பார்த்திருக்கவில்லை என்பதை, அவனுடைய முக மாற்றமே கூறுவதாய்!

தான் ஒன்று நினைத்திருக்க, திடீரென்று அவள் இப்படிக் கூறியதும், இப்போது மனம் என்ன செய்யலா மென்ற தவிப்பில் ஆழ்ந்தது.

ஆனால் மறு கணமே தெளிந்து நிமிர்ந்தவன், ''ம்... இன்னிக்கு நைட் ட்ரெயின்லே டிக்கெட் புக் பண்ணிட றேன்... நீ ரெடியா இரு!''

மறு பேச்சு பேசாமல் அங்கிருந்து விரைந்து அகன்று விட்டான் அவன்.

அன்று முழுவதும், அனைவரிடமும் பிரியாவிடை பெறுவதிலும், தோட்டத்தில் சுற்றுவதும் தூரத்து மலைத் தொடர்களுக்கு மௌன விடை கொடுத்தலுமாய் கழிந்தது.

பின்புற வெராந்தாவில் கூடு செய்திருந்த அணில், இரு குஞ்சுகள் இட்டு குடித்தனம் நடத்தி வந்ததை அவள் அறிவாள்.

இப்போது அவற்றை சுதந்திரக் காற்றை சுவாசிக்க பழக்கி விட்டதில், காலம் பறந்து இப்போது வெறுமையாகி யிருந்தது அந்தக் கூடு!

JUN 12 2010

மெல்ல உள்ளே வந்தபோது, வீட்டு வேலைக்காரர்கள் அனைவருமே கண்ணீருடன் விடை கொடுக்க, தென்னவனுடன் ரயில் நிலையத்திற்குக் கிளம்பினாள் அவள்.

தொடர்ந்த பயணம் மௌனத்திலேயே கழிய, அவளுக்குத் தான் மிகவும் தர்ம சங்கடமாய்!

மாலை, வந்ததிலிருந்தே அவளுடன் அவன் எதுவுமே பேசவில்லை.

ஏதோ தீவிர யோசனையுடன், இறுகியிருந்தது அவன் முகம்.

''ஐயாம் சாரி! நான் இப்படி திடீர்னு கிளம்பிட்டேன்... உடனே வேற யாரையாவது அப்பாயிண்ட் பண்றது கஷ்டம்தான்!''

நலிந்த குரலில் தயக்கத்துடன் அவள் உரைக்க, உடனே பதிலிறுத்தான் அவன்.

''அது ஒண்ணும் ப்ராப்ளம் இல்லை... அன்னிக்கு நீ காப்பாத்தினியே அன்னக்கிளி... அவளே இந்த வேலைக்கு வர சம்மதிச்சிட்டா!''

இலக்கின்றி வெறித்த பார்வையுடன் ஆழ்ந்த குரலில் அவன் கூற, அப்பாடா என்றிருந்தது அவளுக்கு.

''ஓ! தேங்க் காட்!'' இதழ்கள் மெல்ல முணுமுணுத்தன.

பயணம் நீண்டு கொண்டே செல்ல, திடீரென்று எதிரே உயர்ந்து தெரிந்த சுற்றுச் சுவருடன் பெரிய கிரில் கதவொன்று எதிர்ப்பட, யோசனையுடன் அவனிடம் திரும்பினாள்.

''இங்கே... எதுக்கு...? இது என்ன இடம்?'' குரலே எழும்பவில்லை.



''ம்... நைட் பதினோரு மணிக்குதான் ட்ரெயின்! இது எங்க கெஸ்ட் ஹவுஸ்! எப்பவாவது இங்கே வந்து தங்குவோம்! ஒரு சின்ன வேலையிருக்கு.. பாத்துட்டுப் போயிடலாம்!''

அவன் கூறும்போதே, வாசலில் இருந்த காவலாளி கேட்டை புன்னகையுடன் சல்யூட் அடித்து விரியத் திறந்து விட்டான்.

கார் எதிரே தெரிந்த பாதையில் சென்று ஒரு பெரிய வீட்டின் முன் நின்றது.

கார் வரும் சப்தம் கேட்டதுமே வீட்டின் கதவு திறக்கப்பட, மத்திய வயது ஆணும் பெண்ணும் புன்னகையுடன் ஓடி வந்து அவர்களை வரவேற்றனர்.

ஒருவரை கேர்டேக்கர் என்றும் மற்றவரை சமையல் செய்பவரென்றும் அறிமுகம் செய்தவன், ''வா...'' என்ற ஒற்றைத் தலையசைப்புடன் முன்னே செல்ல, பின் தொடர்ந்தாள் அவள்.


அந்தப் பெரிய ஹாலிலிருந்த சோபாவில் அவளை அமரும்படிப் பணித்தவன், எதிரிலிருந்த அறைக் கதவைத் திறந்து உள்ளே சென்றான்.

சிறிது நேரத்தில் அந்தப் பெண்மணி ஒரு டம்ளரில் பாலை எடுத்து வந்து தர, நன்றியுரைத்துவிட்டு மெல்லப் பருக ஆரம்பித்தாள் அவள்.

குங்குமப் பூ, ஏலக்காய் மணத்துடன் நல்ல சுவையுடனிருந்தது அந்த பானம்!

ஆனால், பருகிய சில நிமிடத்திலேயே உணர்வுகள் மயங்க, அப்படியே சரிந்து விட்டாள் அவள்.

JUN 12 2010



# 11

அழகு நிலவாய் அவள் படுத்திருக்க அந்தப் பெண்மணியின் முகத்திலோ தவிப்பும், படபடப்பும்!

உடனே உள்ளே சென்று அந்தப் பெண்மணி தென்னவனை அழைக்க, புருவ மத்தியில் முடிச்சுடன் வெளியே வந்தான் அவன்.

அவளை ஒரு பூங்குவியலாய் தன் கையில் ஏந்தியவன், அவனுடைய அறைக்கு அடுத்த அறையிலிருந்த பெரிய படுக்கையில் அவளைக் கிடத்தினான்.

''உன் முகத்திரையையும், மனத் திரையையும் ஒரு நாள் விலக்கி, அங்கு நானிருப்பதை எப்போது கூறுவாய்?'' அவளிடம் மௌனமாய் கேட்டது நெஞ்சம்!

பிறகு அந்த அறைக் கதவை உள்புறமாகப் பூட்டியவன், இரு அறைகளுக்குமிடையே இருந்த ஒரு கதவைத் திறந்து தன் ரூமிற்குள் வந்தான்.

சிறிது நேரம் கழித்து வெளியே வந்தவன், அந்தப் பெண்மணியை அழைத்து, வர்த்தினியுடைய பொருட்களை காரிலிருந்து எடுத்து வரச் செய்தான்.

அதை அவளுடைய அறைக்குள் சென்று வைத்தவன், ஒரு முடிவுடன் உறங்கச் சென்றான்.

* * *



மறு நாளைய விடியல்...

இரவின் கண்ணீராய்... புற்களின் மேல் பனித் துளிகள் சிதறி இருந்தன.

மெல்லிய வெளிச்சத்துடன் சோம்பலாய் உதயமாகிக் கொண்டிருந்தான் கதிரவன்.

விழிகளுக்கு மேல் பாறாங்கல்லாய் கனத்த உணர்வை விலக்கி, மெதுவாக விழிக்க ஆரம்பித்தாள் வர்த்தினி!

முதலில் தான் எங்கிருக்கிறோமென்றே புரியவில்லை.

கண் மலர்த்தியவுடன் எதிரே தெரிந்த புதிய அறையும் சூழ்நிலையும், நேற்றைய இரவை புகைப்படலமாய் ஞாபகக் கிடங்கிற்குள் புகச் செய்தன.

பதறி எழுந்தபோது, உடல் தள்ளாட யாரோ அவளைப் பிடித்து அமர வைப்பது புரிந்தது.

திரும்பினால், உணர்ச்சிகளைத் தொலைத்த முகத்துடன் அங்கு நின்றிருந்தான் தென்னவன்.

அதற்குப் பிறகே எல்லாம் விளங்க, முள்ளில் மாட்டிய சிறகாய் இதயம் துடித்தது.

''ஏன்... தன்னை அவன் இப்படி?'' புலன்கள் விழிக்க உள்ளுணர்வுகள் அபாய அறிவிப்பு கொடுத்தன.

சீற்றத்துடன் அவனையே நோக்கியவள், ''ஏன் என்னை இங்கே அழைச்சிட்டு வந்தீங்க? எதுக்கு அடைச்சி வைச்சிருக்கீங்க?'' நடுக்கத்தை மீறிய குரலில் வினவினாள்.

''ம்... குட்... நீ புத்திசாலிதான்! கண்டு பிடிச்சிட்டியே!'' சிறு குறும்புடன் நிறுத்தினான்.

பொறுமையை இழுத்துப் பிடித்தபடி அவள் காத்திருக்க, அவளையே கூர்ந்தபடி தொடர்ந்தான்...

JUN 12 2010

"எனக்கு உன்னை ரொம்பப் பிடிச்சிருக்கு... எங்கம்மாவை எனக்கு மீட்டுத் தந்த தேவதை நீ! நீ தான் எனக்கு மனைவியா வரணும்னு நான் விரும்பறேன்... அதைச் சொன்னா உனக்குப் புரியலை... அதான்!"

"அப்படின்னா?" அவள் குரலோ கடுங் கோபமாய்!

"அப்படின்னா... நீ என்னைப் புரிஞ்சிக்கிற வரைக்கும் இங்கே தான் இருக்கணும்!"

"என் மனைவியாத்தான் இந்த இடத்தை விட்டு நீ வெளியே போக முடியும்கிறதை உனக்கு உணர்த்தத்தான் இந்த ஏற்பாடு!"

அழுத்தமான குரலில் அவன் முடித்ததும், அவள் வெடித்தாள்.

"நோ என்னால யாரையும் விரும்ப முடியாது... ஒரு மனைவியா வாழ முடியாது... என் மனசு முழுக்க கல்யாணம், குடும்பம், உறவுகள் மேல வெறுப்பும் கசப்பும் தான் அதிகமா இருக்கு! என்னால யாருக்கும் மனைவியா வாழ முடியாது!" படபடவென்று பொரிந்தாள்.

"யாருக்கும் இல்லை... எனக்கு மனைவியாத் தான் இங்கிருந்து நீ போக முடியும்..." இடியென முழங்கினான் அவன்.

"ஒரு பொண்ணை, அவ விருப்பமில்லாம அடைச்சி வைக்கறது உங்களுக்கு தப்பாத் தெரியலை? ஐ ஹேட் யூ!"

"தேங்க் யூ! ஆனா நீ மாறுவே... உன்னை என்னால மாத்த முடியும்..."

ஆழமாக வந்த அந்த வார்த்தைகளை இடை மறித்தவள், "நோ! முடியாது... பாவம் நீங்க தோற்கப் போறீங்க!" ...டித்த பற்களிடையே சீறினாள்.



"ம்... பாப்போம்! அப்புறம் இந்தக் கராத்தே வேலையெல்லாம் என்கிட்ட வேண்டாம்!

"நான் அதிலே ப்ளாக் பெல்ட்! ஓ.கே.!"

ஏளனமாகக் கூறிவிட்டு அவன் கதவை அழுந்த மூடி வெளியேற, செய்வதறியாது தொப்பென்று படுக்கையில் அமர்ந்தாள் அவள்.

சோர்வில் கண்கள் இருட்டிக் கொண்டு வர, மெதுவாக சாய்ந்து கண் மூடினால் மனதிற்குள் பல வினாக்கள்!

"எப்படி... இந்த மாதிரி ஒரு சூழலில் வலிய வந்து மாட்டிக் கொண்டேன்... இவனிடமிருந்து எப்படித் தப்புவது?"

குழப்ப மேலீட்டில் விழிகள் நிறைந்தன.

இந்தப் ப்ரச்னையிலிருந்து எப்படி விடுபடப் போகிறோமென்ற பரிதவிப்புடன் யோசிக்க ஆரம்பித்தாள் அவள்.

சிறிது நேரத்திற்குப் பிறகு கதவு திறக்கப்பட, ஒரு ட்ரேயில் டிபனுடன் நின்றிருந்தான் அவன்.

"என்ன? இன்னும் எழுந்திரிக்க மனசு வரலையா? குளிச்சிட்டு வா... டிபன் ரெடி... ரெண்டு பேருமே சாப்பிடலாம்..." உற்சாகத்துடன் அழைத்தான்.

"எனக்கு வேண்டாம்...! எல்லாத்தையும் நீங்களே சாப்பிடுங்க... நான் பட்டினியா இருந்தா உங்களுக்கென்ன... இப்படியே செத்துப் போறேன்!" எரிச்சலுடன் மொழிந்தாள்.

"அப்படியெல்லாம் விட முடியாதே! நீ என் வருங்கால மனைவியாச்சே! நீ தெம்பா நல்லா இருந்தாத்தானே என் விருப்பம் எல்லாம் நிறைவேறு...

JUN 12 2010

அவன் கூறியவுடன் ''சே...'' என்றவள், ''பகல் கனவு காணாதீங்க... என்கிட்ட தோத்துப் போகும்போது ரொம்ப வலிக்கும்... அதுக்குத் தயாரா இருங்க!''

வெறுப்புடன் கூறிவிட்டு உடனே எழுந்து குளியலறைக்குச் செல்ல, தோளைக் குலுக்கியபடி வெளியேறினான் தென்னவன்.

பிறகு தொடர்ந்த நிமிடங்கள் அவளுக்கு பெரும் சோதனையாய்!

உடல் சோர்வு போகக் குளித்து விட்டு வந்து அமர்ந்தவளுக்குள், இவனிடமிருந்து எப்படித் தப்புவதென்ற பெரும் யோசனை!



## 12

அந்த நிமிடமே அறைக் கதவு திறக்கப்பட, தென்னவனே உள்ளே வந்தான்.

அவனைக் கண்டதும் வெறுப்புடன் திரும்பியவள் தனக்குள் ஏதோ முணுமுணுப்பதை உணர்ந்ததும், வேகமாக அருகே வந்து ஒற்றை விரலால் அவள் முகத்தை நிமிர்த்தினான்.

''ஏய்... இப்ப என்ன சொன்னே?''

சீறலாக வந்த குரல் அவளை வெகுவாய் சீண்ட, ''ம்... டெவிலை நினைச்சா அது மறு நிமிஷமே எதிர்லே வந்து ...க்கும்பாங்களே... உண்மைதான்னு சொன்னேன்'' ...சப்பாக மொழிந்தாள்.



''ஓ! தேங்க் யூ!''

அவன் குறும்புடன் கூறப் புரியாமல் நிமிர்ந்தவள், ''எதுக்கு தேங்க்ஸ்...'' என்றாள் யோசனையுடன்.

''ம்... என்னை நினைச்சேன்னியே அதுக்கு... அப்புறம் ஒரு சின்ன திருத்தம்... நான் டெவில் இல்லை... ஆழ்ந்த பக்தியோட கடவுளை நினைச்சா, உடனே அவர் கண் முன்னாடி வருவாரு... என்னை மாதிரி!''

அழுத்தமாகக் கூறிவிட்டு, ட்ரேயிலிருந்த டிபனை தட்டில் எடுத்து வைக்க ஆரம்பித்தான்.

''எனக்கு வேண்டாம்!''

அவள் சுள்ளென்று கூற, ''ம்... என்கிட்டே போராடி ஜெயிக்க உனக்கு மனசிலேயும் உடம்புலேயும் தெம்பு வேண்டாமா? அதுக்காகவாவது சாப்பிடலாமே! பார்ப்போம், யார் வின் பண்றாங்கன்னு.''

அமர்த்தலாக மொழிந்தவன் டிபனை எடுத்துச் சாப்பிட ஆரம்பிக்க, அவளும் எடுத்து அவசரமாக உண்ணத் துவங்கினாள்.

''குட்! பசிதானே... என் பேச்சைக் கேட்டா எப்பவுமே நன்மைதான்... இப்ப புரிஞ்சுதா?''

குறும்பாக வந்த கேள்விக்கு, எதிர்த்து பதில் கூறத் துவங்கியவளுக்கு சட்டென்று புரையேறத் துவங்கியது.

உடனே அதை அவள் அடக்க முயல, வேகமாகத் தலையில் தட்டியவன், ''பாத்து... பாத்து! என் பேச்சுக்கு எதிர்ப் பேச்சு பேசாதேன்னு உன்னோட தொண்டையே உனக்கு அறிவுறுத்துது பாரு!''

நமட்டுச் சிரிப்புடன் கூறி [illegible] அவன் [illegible]விடுவதைத் தொடர, அவளுக்கோ கடும் கோபமாய்!

"ம்... எத்தனை நாள் உங்க தொழிலை எல்லாம் விட்டுட்டு இங்கேயே உக்காந்து என்னைப் பாதுகாக்க முடியும்? பாக்கறேன்!"

வீம்பும் வெறுப்புமாய் அவள் கூற, "நான் இங்கேயே உன் கூடவே இருக்கணும்னு நீ எவ்வளவு ஆசைப்பட றேன்றது எனக்குப் புரியுது டியர்! ஆனா பாரு... எனக்கும் கடமை பொறுப்புகள் இருக்கு இல்லையா?"

"உன்னோட இங்கேயே இருக்க எனக்கும் ஆசைதான்! ஆனா அது முடியாதே... பிசினஸ் எல்லாம் என்னை நம்பிக் காத்திட்டிருக்கே!

"அதனால வீக் எண்டுலே மட்டும் நான் வருவேன்... உன் மனசு மாறுற வரைக்கும் இதே ஏற்பாடுதான்! ஓ.கே.!"

அவன் தலை சரித்துக் கேட்க, "மண்ணாங்கட்டி!" வெறுப்பாகச் சீறினாள் அவள்.

"ஓ! உன் தலைக்குள்ளே இருக்கறதை எல்லாம் இப்ப ஏம்மா ஞாபகப்படுத்தறே? அது அங்கேயே இருக்கட்டும்!" என்றவனுடைய குரல் சட்டென்று மாறியது.

"அப்புறம்... இங்கேயிருந்து என் பர்மிஷன் இல்லாம சிறு துரும்பு கூட வெளியே போக முடியாது...! வாட்ச் மேன் ஜேக்கப் ரொம்ப ஸ்ட்ரிக்ட்!

"என்னோட பெட்ஸ், க்ரிப்டோவும், ஆண்ட்டோவும் உன்னை வெளியே போக விட மாட்டாங்க! ரெண்டுமே ஜெர்மன் ஷெப்பர்ட்ஸ்!

"இனிமே முழு நேரமும் கட்டிப் போடப்படாம தோட்டத்துல தான் ரெண்டும் இருக்கும்...



"இந்த வீட்டு வேலைக்காரங்க எனக்குக் கட்டுப்பட்ட வங்க... அவங்களை உன்னால விலைக்கு வாங்க முடியாது!

"அப்புறம்... உன் கிட்ட இருந்து செல்போன் சார்டிபி கேட்ஸ், பணத்தை எல்லாம் நான் எடுத்து வச்சிட்டேன்... ஒரு பைசா கிடையாது! உன் 'எம்.பி.ஏ.' புக்ஸ் மட்டும் தான் இங்கே இருக்கு... நீ வெளியே போனாலும் எதுவும் செய்ய முடியாது..."

அவன் கூறியதைக் கேட்டபடி, பற்களைக் கடித்து நின்றிருந்தாள் அவள்.

"இவ்வளவு கஷ்டப்படறதுக்கு பதிலா, பேசாம எனக்கு சம்மதம் சொல்லிடலாமின்னு தோணுதுல்லே!"

குறுஞ் சிரிப்புடன் கேட்டவனிடம், "ம்... அப்படியே உங்களை ஏதாவது செஞ்சுட்டு தப்பிடணும்னு தோணுது!" சுள்ளென்று கூறினாள்.

"ஏதாவதுன்னா எப்படி? ரொமான்ட்டிக்காவா...? ஆஹா... இதை முன்னாடியே சொல்லி இருக்கக் கூடாது... ஐ ஆம் அட் யுவர் சர்வீஸ் மேடம்!"

இடைவரை குனிந்து நிமிர்ந்தவனை சீற்றத்துடன் ஏறிட்டவள், "சே..." என்றபடி திரும்பிக் கொண்டாள்.

பேனாவில் மையூற்றி எழுதிய கவிதையாய்... அவள் விழிகளில் மையின்றி ஒரு கவிதை தெரிய, அதை வெகுவாய் ரசித்தான். அவன்!

* * *

அன்று மதியமே தென்னவன் கிளம்பிச் சென்று விட, அவளுக்கோ கண்ணைக் கட்டி காட்டில் விட்டாற் போல்!

JUN 12 2010

வீட்டிற்குள் மட்டும் அவள் வலம் வர, அனுமதி அளிக்கப்பட்டிருந்தது.

அவன் சென்றதும், மெதுவாகப் போய் சமையல் செய்பவரிடம் பேச ஆரம்பித்தாள் அவள்.

ஆனால், பதிலுக்கு அவர் பேசிய கன்னட பாஷை அவளுக்குச் சற்றும் புரியவில்லை.

எல்லாருமே அதே மொழியில் பேச, அவளுக்கோ தலையைப் பிய்த்துக் கொள்ளலாம் போல்!

வெளியில் சுற்றிக் கொண்டிருந்த இரு நாய்கள் வேறு அவளை மிரட்டின.

* * *

அந்த வாரம் முழுவதும் சாப்பிடுவதும், பாடங்களைப் படிப்பதும், உறங்குவதும் என்றே பொழுது சென்றது.

என்ன செய்வதென்று புரியாமல் தவித்திருந்தபோது தான், அங்கு தொலைபேசி இருப்பது நினைவிற்கு வந்தது.

ஒரு நாள் நள்ளிரவு எல்லோரும் உறங்கும்போது எழுந்து சென்று, ஹாலிலிருந்த போனை எடுத்துப் பேச முயன்றாள்.

ஆனால் எண்களை அழுத்திய உடனே, ''இந்த வசதி உங்கள் தொலைபேசியில் இல்லை...'' என்ற வாசகங்கள் ஒலித்தன.

லோக்கல் கால் போடக் கூட முடியாமல் அந்த வசதி முடக்கப்பட்டிருப்பது புரிய, அதற்கான கோட் நம்பர் தெரியாமல் தவித்துப் போய் திரும்பி அறைக்கு வந்தாள் அவள்.



உறக்கம் வராமல் ஜன்னல் வழியே பார்த்தபோது, க்ரிப்டோவும், ஆண்ட்டோவும் துடிப்புடன் அலைந்து கொண்டிருப்பது தெரிந்தது.

சோர்வுடன் படுக்கையில் சாய்ந்தவளுக்கோ, தென்னவன் மேல் பெரும் கோபம் வருவதாய்!

இவன் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான்... இப்படி அடைத்து வைத்தால் பயந்து போய் காலில் விழுந்து விடுவேனென்றா?

அது ஒரு நாளும் நடக்காது... இதை என்னால் மறக்கவே முடியாது... இதற்கு அவன் பதில் சொல்லியே ஆக வேண்டும்'' இதயம் சவால் விட்டது.

கோபமும், வெறுப்புமாய் இமை மூடியவளை, வெகு நேரத்திற்குப் பிறகே உறக்கம் தழுவ ஆரம்பித்தது.

* * *

ஞாயிறன்று காலை!

சோம்பலுடன் அவள் விழிக்க ஆரம்பிக்கும் போதே, ஏதோ ஒரு வித்தியாசமான நறுமணம் நாசியில் புக, சட்டென்று கண் விழித்தாள் வர்த்தினி!

அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்தபடி காபியைப் பருகிக் கொண்டிருந்தான் தென்னவன்!



## 13

JUN 12 2010

மறு கணமே தான் எப்படிப் படுத்திருக்கிறோமோ வென்ற எச்சரிக்கை உ...

பார்த்தால், கால் முதல் கழுத்து வரை போர்வையால் மூடியே இருந்தது.

ஒரு நிம்மதிப் பெருமூச்சுடன் எழுந்து அமர்ந்தவள், ''ஒரு பெண்ணோட ரூமுக்கு வரும்போது கதவை தட்டிட்டு வரணும்கிற கர்ட்டஸி கூட உங்களுக்குத் தெரியாதா?'' அடிக்குரலில் சீறினாள்.

''ம்! தெரியும்! ஆனா, யாரோ ஒரு பெண்ணுக்கு தான் அது பொருந்தும்... நான் என் வுட்பி வொய்ஃபோட ரூமுக்கு வரதுக்கு, யாரோட அனுமதியும் எனக்குத் தேவையில்லை!''

ஆழ்ந்த குரலில் விழிகள் இடுங்க அவன் முடிக்க, மனதில் பொங்கியெழுந்த கோபத்தில் அருகிலிருந்த தலையணையை எடுத்து அவன் மேல் கோபத்துடன் வீசி எறிந்தாள் அவள்.

ஒரு கையாலேயே அதை லாவகமாகக் கேட்ச் பிடித்தவன், ''ஓ! நம்ம எதிர்கால வாழ்க்கை இது மாதிரி பில்லோ பைட்டோட ரொம்ப சுவாரசியமா இருக்கும்னு தெரிவிச்சதுக்கு ரொம்ப நன்றி!

''சீக்கிரம் குளிச்சிட்டு வா... தோட்டத்துல வாக்கிங் போகலாம்!''

நமட்டுச் சிரிப்புடன் கூறிவிட்டு எழுந்து செல்ல, ''சே...'' என்று தலையணையைக் குத்திவிட்டு அவளும் குளியலறைக்குள் சென்றாள்.

குளித்து விட்டு வந்தபோது, அவனுடைய ஆஃப்டர் ஷேவ் லோஷனின் நறுமணம், மெலிதாய் அந்த அறையில் பரவி அவனை நினைவுபடுத்துவதாய்!



தலையைக் குலுக்கி அதிலிருந்து விடுபட்டு, வேண்டுமென்றே மெதுவாகத் தயாராகிய போது, மெலிதாக அறைக் கதவு தட்டப்பட்டது.

எரிச்சலுடன் திறந்தவள் பதில் கூறும் முன்பே, சாப்பிட வரும்படி அழைத்தார். சமையல் செய்யும் கவுரம்மா!

தென்னவன் என்று நினைத்து வன்மையாக மறுக்க முயன்றவள், மெதுவாக வெளியே வந்தாள்.

அன்று முழுவதும் அவனுடனே பொழுது கழிய, இதிலிருந்து எப்படித் தப்புவதென்று எரிச்சலாய்!

மனம் கணக்குப் போட்டுக் கொண்டேயிருக்க, அங்கிருந்து தப்புவது மிகவும் கஷ்டமென்பது புரிவதாய்!

''கடவுளே! நான் இங்கிருப்பது ஒருவருக்கும் தெரியாதே! மீராவும் நான் பத்திரமாக இருப்பதாகத் தானே எண்ணியிருப்பாள்.

''மாமாவும், அம்மாவும் என்னைத் தேடிக் கொண்டிருக்கிறார்களாவென்றும் புரியவில்லையே... பூகம்பத்திற்குத் தப்பி சுனாமியில் சிக்கிய கதையாகி விட்டதே என் நிலை...''

மனம் பலப்பல எண்ணிப் புலம்ப, தென்னவனை நினைத்தால் கடும் வெறுப்பாய்!

ஆண்கள், காதல், திருமணம், குடும்பம் என்ற நினைவே பெரும் கசப்பும் வேதனையும் தர, அவனுடைய விருப்பமும் செய்கையும் அவளை ரௌத்ரமாக்கின.

* * *

அன்றிரவு, கிளம்பும்போது அவளுடைய அறைக்கு வந்தவன் மீண்டும்

"வர்த்தினி! நான் இப்ப கிளம்பறேன்! அடுத்த வாரம் வரும்போது நீ ஒரு முடிவுக்கு வந்துடுவேன்னு நினைக்கிறேன்!"

ஆழ்ந்த குரலில் அவன் கூற, விழிகள் அதீத ஒளியுடன் மின்னின.

உடனே நிமிர்ந்தவள், "ஹூம்... பாவம்... ஏமாறப் போறீங்க! என்னிக்குமே நீங்க விரும்பற மாதிரி என்னால மாற முடியாது..." உதடு சுழித்து ஏளனமாக உரைத்தாள்.

"இல்லை... நான் ஏமாறப் போறதில்லை. மாறப் போறது நீ தான்... அதையும் பாக்கலாம்!"

"தோத்துப் போகப் போறீங்க! முதல் தோல்வி ரொம்பவே பாதிக்கும்... அதனால மனசை திடப்படுத்திக்கங்க..."

நக்கலாக அவள் கூற விழிகள் சிவந்து முகம் இறுகி, "ஏய்..." என்றபடி அருகில் வந்தவன் என்ன செய்திருப்பானோ, அறைக் கதவு தட்டப்பட்டது.

உடனே விலகிச் சென்று கதவைத் திறந்தவன் படாரென்று அதை அடித்து மூடிச் செல்ல, நொந்து போய் அருகிலிருந்த நாற்காலியில் தொப்பென்று அமர்ந்தாள் அவள்.

பிறகு அவன் கிளம்பிச் செல்லும் சப்தம் கேட்டு மெதுவாகக் கதவு திறந்து வெளியே வந்தாள்.

இப்போது, அவளுடைய அறைக் கதவு பூட்டப்படுவதில்லை.

வீட்டிற்குள் சுதந்திரமாகச் சுற்றிவர அனுமதியும் வழங்கப்பட்டிருந்தது.



தோட்டத்திற்குள் கால் வைத்தாலே, எங்கிருந்தோ ஓடி வந்து அரணாய் நிற்கும் இரு நாய்களையும் கண்டு பயந்தே வெளியில் வருவதில்லை.

ஹாலுக்கு வந்தால், மெல்லிய இரவு விளக்கொளியில் அந்த இடமே ரம்யமாய்!

விடுதலையாகி நிற்கும் கூண்டுக் கிளியாய் உள்ளே பரவசம் எழ, அங்கிருந்த சோபாவில் அப்படியே சாய்ந்து அமர்ந்தவள், தன்னையறியாது உறங்கி விட்டாள்.

திடீரென்று யாரோ அவளை உசுப்பி எழுப்புவது போல்!

சோம்பலாக விழித்தாள். எதிரே தென்னவனின் உருவம்!

அவள் சுதாரிக்கும் முன்பே இரு பக்கமும் கைகளை ஊன்றிக் குனிந்தவன், சட்டென்று அவளை முத்தமிட்டு விட்டான்.

ஈர இதழ்கள் குறுகுறுப்பாய் பதிந்து அவளை விதிர்க்கச் செய்ய, "நோ..."வென்று அலறியபடி அவனைப் பிடித்துத் தள்ளிவிட்டு எழுந்தால், எல்லாமே கனவென்பது புரிவதாய்!

"ஏன் தனக்கு இப்படி ஒரு கனவு வந்தது... அவன் இந்த அளவுக்கு இறங்கினால் தன்னால் அவனை எதிர்க்க முடியுமா?"

முத்துச் சரங்களாய் வியர்த்திருந்த முகத்தில் பெரும் சஞ்சலமும்... தவிப்பும்!

மெல்ல எழுந்து தன் அறைக்குள் வந்து பூட்டிக் கொண்டு படுத்தபோதும், விழிகள் ஒரு வித இயலாமையுடன் இடையிலிருந்த கதவை வெறித்தன.

* * *

JUN 12 2010

அந்த வாரத்தில் வேலையாட்களிடம் சைகையில் பேசியே, ஓரளவு நட்புடன் பழக ஆரம்பித்து விட்டாள் அவள்.

சனிக்கிழமை இரவு... தென்னவன் வந்து விடுவானே வென்ற தவிப்பும் படபடப்புமாய் நிமிடங்கள் கடந்தன.

அந்தக் கனவு வேறு அவளை வாட்டி வதைக்க, விதிர்ப்புடன் காத்திருந்தாள் அவள்.

ஆனால், ஏனோ பத்து மணி வரை அவன் வரவில்லை.

பிறகு உறங்கச் சென்றவள், பதினோரு மணிக்கு அவன் வந்ததையோ, உறங்கும் அழகி போல் ஒரு பூவாய் அவள் கண் துயில்வதை குறும்புடன் ரசித்துவிட்டுச் சென்றதையோ அறியவில்லை.

இப்போதெல்லாம் அடிக்கடி வருகின்ற அதிகாலைக் கனவுகளில், அவள் முகம் பூபாளம் பாடி எழுப்புவதை, நினைவு கூர்ந்தபடி படுக்கச் சென்றான் தென்னவன்!

மறு நாளைய விடியல்...

மெல்லிய பூங்குயில்கள், செம்போத்துகளின் திருப் பள்ளி எழுச்சியுடன் புலர ஆரம்பித்தது.

''வர்த்தினி!''

மெல்லிய அழைப்பு அவளைத் தீண்டி உசுப்ப, மனமின்றி விழி மலர்த்தியவளுக்கு அருகில் தென்னவனின் முகம்!

பதறி எழுந்து அமர்ந்தால், ட்ராக் சூட்டில் சிரித்துக் கொண்டிருந்தாள் அவன்.

''ம்... கெட் அப்! வாக்கிங் போகலாம்... வா...'' ஆணையிடும் குரலில் அழைத்தான்.



சட்டென்று பொங்கிய சினத்துடன், ''ம்... நான் வரமாட்டேன்னு மறுத்தா...?'' கூர்மையாகக் கேட்டாள் அவள்.

''ஓ! அப்ப என் விருப்பப்படி நடக்க உனக்குக் கத்துக் குடுப்பேன்'' அமைதியாக வந்தது அவன் குரல்!

''எப்படி?''

அவளும் விடாமல் கேட்க, ''அப்படியே தூக்கிட்டுப் போய் பல் விளக்க வச்சி, ட்ரெஸ் மாத்தி அழைச்சிட்டுப் போயிடுவேன்! இப்ப நீ என் அடிமை பெண்ணே!'' கண்கள் குறும்புடன் இடுங்கக் கூறினான்.

''சே... இப்படிப் பேச உங்களுக்கு வெக்கமாயில்லை!''

அவள் அடிக் குரலில் சீற, ''இல்லையே... எப்படியும் கொஞ்ச நாள் கழிச்சி செய்யப் போறது தானே? அதுக்கு இப்பவே ரிகர்சல் பாக்கலாமின்னுதான்...!''

அதற்கு மேல் கேட்க அவள் அங்கிருக்கவில்லை... வெறுப்புடன் குளியலறைக்குள் சென்றிருந்தாள்.

பிறகு ஜீன்ஸும் குர்த்தாவுமாய் அவள் வெளியே வந்தபோது ஹாலில் காத்திருந்தான் அவன்.

இருவருமாகத் தோட்டத்தில் மெல்ல ஓட ஆரம்பித்த போது, ஆதவன் தன் கிரணங்களில் மெல்லிய கதகதப்பை பரிசளிக்க ஆரம்பித்திருந்தான்.

தோட்டத்து மலர்கள் மெல்லிய தலையசைப்புடன் விடியலை வரவேற்றுக் கொண்டிருந்தன.

க்ரிப்டோவும், ஆண்ட்டோவும் லாவக நடையுடன் பின் தொடர, அந்த இளங்காலை நேரத்து ஏகாந்தம், அவளுக்குமே பிடித்தமாய்!

JUN 12 2010

எதுவுமே பேசாமல் அவன் அமைதியாகவே வர, அவளும் யோசனையுடன் தொடர்ந்தாள்.

மனம் முழுவதும், இவனிடமிருந்து எப்படித் தப்புவதென்றே நினைவே!

"என்ன... நான் கூப்பிட்டதே கேக்கலை போலருக்கு... இந்த அரக்கன் கிட்டருந்து எப்படித் தப்பிக்கலாமின்னு யோசனையா?"

அவன் குரல் திடீரென்று அவளை உசுப்பியது.

உடனே விதிர்த்து நிமிர்ந்தவளுக்குள், அவன் தன் உள்ளத்து உணர்வுகளை அறிந்து கொண்டு விட்டானே என்ற படபடப்பு!



## 14

அந்த நிமிடம் தென்னவனின் முகம்... ஒளியுடன் மின்னியது.

"என்ன... கண்டு பிடிச்சிட்டேனேன்னு பாக்கறியா?" அவளையே கூர்ந்தபடிக் குறும்பாகக் கேட்டான்.

"இல்லை! உண்மையை தைரியமா ஒத்துக்கிட்டீங்களேன்னு பாத்தேன்!"

"என்ன உண்மை?"

"ம்.. நீங்க 'அரக்கன்'கிற உண்மையைத்தான்!"

நமட்டுச் சிரிப்புடன் கூறிவிட்டு அவள் நகர, ஒரு கையை ஓங்கி அடிப்பது போல் பாவனை செய்தவன், சட்டென்று தலை சரித்து சிரிக்க ஆரம்பித்தான்.



அவனுடன் மல்லுக்கட்டி எதிருக்கு எதிர் நின்று வாதாடும் முதல் பெண்ணைச் சந்தித்த குறுகுறுப்பு அதில்!

அவளுக்கோ அவன் புன்னகை, மாயக் கண்ணனின் குறும்புச் சிரிப்பாய்!

"அது சரி வர்த்தினி! இவ்வளவு ஜாலியா என்கிட்ட ஆர்க்யூ பண்றியே? அப்புறம் ஏன் என்னை மணக்க மறுக்கிறே?" எதிர்பாராமல் கேட்டான்.

மறுகணமே, அதுவரை இருந்த உற்சாகத்தைத் தொலைத்தவள், வேகமாக முன்னே நடக்க ஆரம்பித்தாள்.

திடீரென்று அவள் கை வலிமையுடன் பற்றி நிறுத்தப்பட, மறு நொடி அவள் முன்னால் நின்றிருந்தான் அவன்.

"எனக்கு பதில் வேணும்! நான் உன்கிட்ட தான் கேட்டேன்" இடியாய் முழங்கினான்.

"பதில் சொல்லலைன்னா விருப்பமில்லைன்னு அர்த்தம்!" அதே தொனியில் வந்தது பதில்!

"ம்... என்னதான் உன் ப்ரச்னை? ஏன் விருப்பமில்லை...? எனக்கு என்ன குறைச்சல்... என்கிட்ட என்ன குறை கண்டே?" ஆழ்ந்த குரலில் கேட்டான்.

"ம்... உங்களைப் பிடிக்குது பிடிக்கலைங்கிறதில்லை இப்ப ப்ரச்னை! என்னால யாரையுமே விரும்ப முடியாது... கல்யாணம் செஞ்சுக்க முடியாது!"

"அதான் ஏன்?"

"ஏன்னா.. நான் நிறைய காயப்பட்டுருக்கேன்... என்னால யாரையுமே நம்ப முடியாது!"

JUN 12 2010

''நோ! வாழ்க்கையே பரஸ்பர நம்பிக்கையிலயும் அன்பிலயும்தான் ஓடிட்டிருக்கு! உங்கப்பா யாருன்னு உங்கம்மா சொன்னப்ப நம்பினே இல்லையா? அது மாதிரித்தான் இதுவும்!''

''ஒவ்வொரு மனுஷனும் தன் ரிஷி மூலம் தெரிஞ்சிக்க 'டி.என்.ஏ.' பண்ணிட்டிருக்க முடியாது! நம்ம உறவுகள் தான் நம்ம பலமே!''

''இல்லை...''

அவள் போட்ட சப்தத்தில்... அருகிலிருந்த மரத்தில் அமர்ந்திருந்த பறவைகள், சடசடவென்று சிறகு விரித்துப் பறந்தன.

மறு கணமே, வில்லிலிருந்து புறப்பட்ட அம்பாய், வீட்டுக்குள் விரைந்து சென்று விட்டாள் வர்த்தினி.

'உன் வேராய் நான் இருக்க, அதில் வெந்நீரை ஏன் வார்க்கிறாய் அன்பே! அதனால் அழிவு உனக்குத் தானே' என்று கேட்க வேண்டும் போல்!

தென்னவனின் முகத்திலோ பெரும் மாற்றம்! அவளை எப்படி மாற்றுவதென்ற சிறு கவலை புதிதாய் வந்து எட்டிப் பார்த்தது.

'திருமணம், உறவுகள் இவற்றின் அருமையை எப்படி இவளுக்குப் புரிய வைப்பது... ஆனால் இவளை மாற்றியே தீருவேன்...

'மயிலே மயிலே என்றால் இறகுகள் கிடைப்பதில்லை... வலிக்குமே என்று நினைத்தால் நாம் விரும்பியதை அடையவும் முடிவதில்லை...' மனம் ஒரு முடிவுடன் இறுகியது.

* * *



அன்று காலையில் டிபன் சாப்பிட அவளை அழைப்பதற்காக அறைக்குச் சென்றான் அவன்.

எங்கோ இலக்கின்றி வெறித்தபடி ஜன்னலருகே நின்றிருந்தாள் வர்த்தினி.

''சாப்பிட வரலையா?''

அழுத்தமாக வந்த குரல் அவளைக் கலைக்க, ''நான் வரலை?'' அலட்சியமாக மொழிந்தாள்.

திடீரென்று அவளுடைய கரம் அழுத்தமாகப் பற்றி இழுக்கப்பட, வெறுப்புடன் திரும்பியபோது, இறுகிய முகத்துடன் எதிரில் நின்றிருந்தான் அவன்.

''இந்த அலட்சியமெல்லாம் என்கிட்ட வேண்டாம்... இப்ப நீ ஒரு சிறைப் பறவை... அதுவும் என்னோட பாதுகாப்பில இருக்கிறவ! நான் சொல்றதைத் செய்யறதுதான் உன் கடமை!''

''ஹூம்! கடமையைப் பத்தி உங்களுக்கு என்ன தெரியும்? தன்னை நம்பி வந்த ஒரு பெண்ணை எப்படி நடத்தணும்கிற ஒரு ''பேசிக் கர்ட்டஸி'' கூடத் தெரியாத ஒரு காட்டுமிராண்டி நீங்க!'' சட்டென்று வாய் தவறிக் கூறிவிட்டாள்.

ஆனால், மறுகணமே வேகமாகச் சுழன்று, அவன் அணைப்பிலிருந்தாள்.

பதட்டத்துடன் நிமிரும்போதே கடும் சினத்துடன் குனிந்தவன், அவளை வன்மையாக முத்தமிட்டு விட்டான்.

ஒரு க[illegible]கமே இருண்ட[illegible]போல்... இ[illegible]
போல் உ[illegible]தவருமே சுய நினைவிற்கு[illegible]
மணித்[illegible]ின.

முதலில் மீண்டது, வர்த்தினிதான்!

அவனுடைய வலிய அணைப்பும், அழுத்தமாய் பதிந்து விலகிய உதடுகளும், தன் நிலையைப் புரிய வைக்க, பதறி விலக ஆரம்பித்தாள்.

அவனுக்குமே இது முதல் அனுபவமென்பதால் சிலிர்த்து உறைந்து நின்றிருந்தவன், மெதுவாக அவளை விடுவித்தான்.

''சீ! உங்களுக்கே இது வெக்கமாயில்லை... கட்டிப் போட்டு அடிக்கற மாதிரி... ஒரு பெண்ணை அடைச்சி வச்சி அவ கிட்ட அத்து மீறுற செயலைச் செஞ்சு... ஐ ஹேட் யூ!''

அவனுக்குள் மெல்ல முகாமிடத் துவங்கியிருந்த கழிவிரக்கமும், குற்ற மனப்பான்மையும் அவள் வார்த்தைகளினால் உடனே மறைந்தன.

''நீ பேசினதுக்கு தண்டனை அது! என்னைக் காட்டுமிராண்டின்னு சொன்னே இல்லையா? அதுக்கான சாம்பிள்தான் இது!

''அப்படி இல்லைன்னு முதல்லே ஒத்துக்க! அந்த வார்த்தைகளை நீ உடனே வாபஸ் வாங்கியாகணும்'' அடிக்குரலில் கர்ஜித்தான்.

''முடியாது... நீங்க ஒரு காட்டுமிராண்டி... சாடிஸ்ட்!''

அவள் முடிக்கும் முன்பே இடைமறித்தவன், ''அப்படின்னா இது மாதிரி நிறைய அனுபவங்கள் ஃப்யூச்சர்லே உனக்கு கிடைக்கும். பீ ரெடி ஃபார் தட்!''

அலட்சியமாகக் கூறிவிட்டு கதவை அறைந்து சாற்றிவிட்டு வெளியேறினான் அவன்.



அப்படியே தொய்ந்து அமர்ந்தவளுக்குள் அவனுடைய ஸ்பரிசம் பட்ட இடங்கள் ஒரு கணம் தீயாய்... மறு கணம் குறுகுறுப்பாய்!

தன்னையே கட்டுப்படுத்திக் கொள்ள அவள் சிரமப்பட்டுக் கொண்டிருக்கும்போதே, மீண்டும் புயலென அறைக்குள் நுழைந்தான் அவன்.



## 15

வெளிப்புறம் ஹாலுக்குச் செல்கின்ற அவளுடைய அறைக் கதவைப் பூட்டியவன், ஒரு வித வேங்கையின் லாவகத்துடன் சென்று, தன் அறைக் கதவை அறைந்து சாத்திக் கொண்டான்.

இனி, தான் ஒரு சிறைக் கைதி என்பது அவளுக்குப் புரிவதாய்!

அவனுடைய அறையின் வழியாக மட்டுமே, அவளால் வெளியே செல்ல முடியும்.

அவளாக விரும்பி அங்கு செல்ல மாட்டாள் என்பதால், நிச்சயம் இது ஒரு தனிமைச் சிறைதானென்பது புரிந்தது.

அன்று முழுவதும் அவள் சாப்பிட மறுத்து விட, இரவு சாப்பாட்டை அறைக்கே எடுத்து வந்தார் சமையல்கார கவுரம்மா.

காலையிலிருந்தே பசியுடனிருந்தவளுக்கு மயக்கம்

மறுநாளைய விடியல்...

யாரோ அவளை உசுப்பி எழுப்ப, விழிக்க மனமின்றி இமைகளைத் திறந்தவளின் எதிரே, தென்னவன் ஜாகிங் சூட்டில் நின்றிருந்தான்.

நேற்றைய நினைவுகள் கிள்ளியெழுப்ப, வேகமாக எழுந்து அமர்ந்தவளின் முன் சொடுக்குப் போட்டு அழைத் தான்.

"கெட் ரெடி! உனக்கு அஞ்சு நிமிஷம்தான் டைம்! அதுக்குள்ளே ரெடியாகி என் கூட வரே!"

ஒருவித அதிகாரத் தன்மையுடன் அவன் உரைக்க, அதுவரை சோம்பியிருந்த புலன்கள் சட்டென்று விழித்தன.

"என்ன மிரட்டலா?"

"அப்படியும் வெச்சிக்கலாம்! இப்ப நீ என் அடிமை!"

"ஓ! நான் வர மாட்டேன்னு மறுத்தா?" ஏளனமாக அவள் கேட்டதுமே, நறுக்குத் தெறித்தாற் போல் வந்தது பதில்!

"மறுத்தா, இப்படியே உன்னைத் தூக்கிட்டுப் போயி தோட்டத்தில என் கூட நடக்க வைப்பேன்... சம்மதமா?"

கண்கள் இடுங்க ஒரு விதக் கூர்மையுடன் அவன் கேட்கும்போதே, சிலிர்த்து எழுந்தாள் அவள்.

அடுத்த ஐந்தாவது நிமிடம், இருவரும் தோட்டத்தில் இருந்தனர்.

மெதுவாக ஓட ஆரம்பித்தபோது, வாலாட்டியபடியே இரு நாய்களும் அவர்களைப் பின் தொடர்ந்தன.

"இதுக்கெல்லாம் ஒரு நாள் நீங்க நல்லா அனுபவிப் பீங்க?" பற்களைக் கடித்தபடி அடிக்குரலில் கூறினாள் அவள்.



"எதுக்கு... வாக்கிங் அழைச்சிட்டு வரதுக்கா? ஹூம்... இப்படி உடம்பை ட்ரிம்மா வச்சிக்க எக்சர்சைஸ் செய்ய வைக்கிறது... நேரா நேரத்துக்கு சாப்பாடு குடுக்கறது எல்லாம் ரொம்ப நல்ல விஷயம்மா!

"நிச்சயமா இதுக்கு அனுபவிக்கணும்னா ஏதாவது நல்லது தான் நடக்கும்... நல்லா அனுபவிக்கறதுன்னா எப்படி... நம்ம ஹனிமூன்லே என்ஜாய் பண்ணப் போறதைப் பத்தி சொல்றியா?" குறும் சிரிப்புடன் கண் சிமிட்டியபடி கேட்டான்.

"சே... உங்களை..." வேகமாகக் கையை ஓங்கியபடி கோபத்துடன் அவளருகில் வந்தவளை ஒரு உறுமல் சப்தம் உறைய வைப்பதாய்!

அடுத்த நொடியே இருவருக்கும் இடையே வந்து நின்று "உர்"ரென்று உறுமியபடி முறைத்த ஆண்ட் டோவைப் பார்த்து அவள் பயந்து பின் வாங்க, சப்தமாக சிரிக்க ஆரம்பித்தான் தென்னவன்!

"பாத்தியா என் மெய்க் காப்பாளர்களை! என் மேல ஒரு சின்னத் துரும்பு படறதைக் கூட ரெண்டு பேரும் அனுமதிக்க மாட்டாங்க! பாவம் நீ!" விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தான்.

"சே யூ கோ டு ஹெல்!" சீற்றத்துடன் கூறிவிட்டு வேகமாக விலகிச் சென்றவளை அதே தீவிரத்துடன் வழி மறித்தன இரு நாய்களும்!

முன்னால் செல்லவும் முடியாமல், திரும்பி அவனிட மும் வர மனமின்றி அசையாமல் நின்றிருந்தவளின் செவி யோரம், செல்லமாய் உரசியது தென்னவனின் குரல்!

"என்ன... பயமாருக்கா? திரும்பி என் கிட்ட வர வேண்டியதுதானே? என்னோ...

காத்துட்டிருக்கு... எந்த நிமிஷம் வேணாலும் நீ என் கைகளுக்குள்ளே வந்து சரணடையலாம்.. நீ சாஞ்சுக்க என் தோள்கள் எப்பவுமே தயாரா இருக்கும்!''

மென்மையான குரலில் மயிலிறகாய் அவன் வார்த்தைகள் வருட, விதிர்த்து நிமிர்ந்தாள் அவள்.

''நோ! அது ஒரு நாளும் நடக்காது...''

வீம்பும் வெறுப்புமாய் அவள் வெடிக்க, ''இல்லை... நடக்கும்! நீயா வந்து என்னைச் சேர்ற நாள் வெகு தூரத்திலே இல்லை!'' மென் குரலில் சவால் விடுத்தான் அவன்.

''பாப்போம்! நடக்காத விஷயத்தைப் பத்தி இவ்வளவு நம்பிக்கையோடப் பேசற ஒருத்தரைப் பாத்தா பாவமா இருக்கு'' எகத்தாளமாக முடித்தாள்.

''ஓ! எனக்கும் அப்படித்தான்! தனக்குள்ளே உண்டான மாற்றத்தை உணராம தான் காதல் வயப்பட்டிருக்கோம்கிறதையே புரிஞ்சுக்காம தன்னைச் சுத்தி ஒரு பொய் வேலி போட்டிருக்கிற ஒரு பெண்ணை நினைச்சா, எனக்கும் பரிதாபமாகத் தான் இருக்கு!'

உதட்டை ஏளனமாகச் சுழித்தபடி கூரிய விழிகள் பளபளக்க, அதே நக்கல் வாசனையுடன் வார்த்தைகளைச் சிதற விட்டான்.

''ப்ச்...'' என்றபடி அவள் திரும்பிக் கொள்ள, மெதுவாக நடக்க ஆரம்பித்தவனைப் பின் தொடர்ந்தன, க்ரிப்டோவும், ஆண்ட்டோவும்!

முன்பு ஒரு நாள் அவள் புன்னகைப் பூக்களை உதிர்த்த போது, அதை உடனே பத்திரப்படுத்தி மாலையாக்கியிருந்தது அவன் இதயம்!

* * *



நாட்கள் வேகச் சுழற்சியுடன் விரைந்து, எந்த மாற்றமுமின்றிக் கடந்தன.

ஒரு நாள் காலையில் அவன் டிபன் சாப்பிடத் தன் அறைக்கு நுழைந்தபோது, மறுக்கத் தோன்றினாலும் ஒரு முடிவுடன் அங்கு சென்றாள் வர்த்தினி!

அமைதியாகச் சாப்பிட்டு முடித்ததும் நிமிர்ந்தவள், ''மிஸ்டர் தென்னவன்! இது மாதிரி ஒரு பெண்ணை அடைச்சி வச்சி சித்ரவதை செய்யற அளவுக்கு நீங்க கீழ்த்தரமானவர் இல்லைங்கிறது என் அபிப்ராயம்!''

அவள் முடிக்கும் முன்பே, குலுங்கிக் குலுங்கி சிரிக்க ஆரம்பித்தான் அவன்.

''ஓ! சாம தான பேத தண்டம்''பாங்களே! அதைப் பிரயோகம் பண்றியா? முதல்லே மறுப்பு, கோபம், இப்ப கொஞ்சலா?

''ஆனா நீ நினைக்கிற மாதிரி இல்லை டியர்... நான் கொஞ்சம் மோசமானவன் தான்... நான் நினைச்சதை அடையாம விட்டதில்லை! ஐயம் எ பேட் பாய்!''

உதட்டோரங்கள் குறும்புடன் துடிக்க, சிரிக்காமல் பகர்ந்தான் அவன்.



## 16

JUN 12 2010

அவனுடைய கேலியைப் புரிந்து கொண்டவளுக்கோ, கோபம் தலைக்கேறியது

''இது உங்கம்மாவுக்குத் தெரிஞ்சா... என்னாகும் தெரியுமா? உங்க மேல அவங்க எவ்வளவு நம்பிக்கை வெச்சிருப்பாங்க?''

பிரம்மாஸ்திரத்தை எய்த திருப்தியுடன், அவனை நோக்கினாள் அவள்.

''அவங்க நம்பிக்கையை எப்பவுமே நான் பொய்யாக்க மாட்டேன்... என் செய்கையில இருக்கற நியாயத்தை அவங்க புரிஞ்சிப்பாங்க!''

''எது? இது மாதிரி ஒரு சின்னப் பொண்ணை அடைச்சி வச்சி மிரட்டி பணிய வைக்கிற நியாயத்தையா?

''ஆனா அவங்க மன்னிச்சாலும் கடைசி வரைக்கும் நான் உங்களை மன்னிக்க மாட்டேன்!''

''தேங்க் யூ! வாழ்க்கையில கடைசி வரைக்கும் என் கூட இருப்பேன்னு சொன்னதுக்கு!''

விழிகள் கூர்மையுடன் இடுங்க, பொருள் விளங்காப் பார்வையுடன் அவளையே பார்த்தபடி கூறினான் தென்னவன்!

''நோ! நான் அந்த அர்த்தத்தில சொல்லலை! உங்களோட இருக்கற கடைசி நிமிஷத்தை நான் சொன்னேன்!''

பிடிவாதத்துடன் அவள் கூற, ''அது உன்னோட... நம்ம வாழ்க்கையின் இறுதிக் காலம் வரைக்கும் தொடரும்கிறது என் நம்பிக்கை!'' அழுத்தமான குரலில் அவனும் முடித்தான்.

''ஹூம்..! பாவம்... ரொம்ப ஏமாறப் போறீங்க... முதல் தோல்வி எல்லாருக்கும் கொஞ்சம் கஷ்டம்தான்! பழகிக்கங்க!''



''அதை நான் சொல்லணும்! நீ என்னை ஏத்துக்கப் பழகிக்க... அப்புறம் மத்ததெல்லாம் சுலபமாயிடும்!'' ஆணித்தரமான குரலில் ஆணையிட்டான் அவன்.

''மாட்டேன்! இங்கேயிருந்து தப்பிக்க சந்தர்ப்பம் கிடைச்சா மறு நிமிஷமே தப்பிப் போயிடுவேன்!''

அவளும் அதே வீம்புடன் முடித்துவிட்டுத் தன் அறைக்குள் சென்று விட்டாள்.

அவளையே தொடர்ந்த அவன் பார்வையில் கசிந்த சிறு வலியை அவள் கவனிக்கவில்லை!

நெஞ்சமெனும் கட்டுத் தறியில் சிக்கிய நூலாய் நேசத்தை நெய்து பரிசளித்திருந்த காதல், இன்று கூரிய முள்ளாய் மாறி அதைக் கிழித்ததை உணர்ந்த காயம் அவனிடம்!

* * *

அன்று மதியம் சாப்பிட்ட பிறகு அவளைத் தன் அறைக்கு கேரம் விளையாட அழைத்தான் அவன்.

தன் மறுப்பிற்கும் விலகலுக்கும் மதிப்பின்றிப் போவதைப் புரிந்து கொண்டவளாய், அமைதியாகச் சென்று அவனெதிரில் அமர்ந்தாள்.

கேரம் விளையாட்டில் அவன் ஒரு சாம்பியன் என்பதைப் புரிந்து கொண்டவள், கால் மணி நேரத்திலேயே தோல்வியை ஒப்புக் கொள்ள மனமின்றி எழுந்து விட்டாள்.

உடனே, அவளுடைய கையைப் பிடித்து இழுத்து அமர வைத்தவன், ''ஏய்... எங்[illegible] ஓடு[illegible]? [illegible]துடுவோம்னு பயமாருக்கா? லை[illegible] ஜெயிக்கற வரைக்கும் போராடணும்... தெரியுமா?'' இயல்பாகக் கே[illegible]

"ஆமாம் சார்... நானும் ஜெயிக்கற வரைக்கும் விடப் போறதில்லை!"

புரியாத செய்தியுடன் வந்த குரலில் திரும்பி ஓரக் கண்ணால் அவளையே கூர்ந்தவனுடைய விழிகள், சட்டென்று சிவப்பு வரிகளாய்!

"என்னை நீ ஜெயிக்க முடியாது வர்த்தினி! சும்மா மனக் கோட்டை கட்டாதே! நான் இந்தக் கேரம் விளையாட்டை சொன்னேன்...

"ஆனா நாம விளையாடிட்டிருக்கற அந்த கேம் ரொம்பக் கஷ்டமானது... அதிலே ஒரு பர்சன்ட் கூட நான் விட்டுத் தர மாட்டேன்!"

உலர்ந்த குரலில் அவன் கூறியபோது அவளுக்குள் சில்லென்று ஒரு குளிர் பரவுவதைப் போல்!

ஆனாலும் பிறகு தொடர்ந்த கேரம் விளையாட்டிலும், அவளை வெற்றி பெற அவன் விடவேயில்லை!

* * *

அன்றிரவு... கிளம்புவதற்கு முன் அவளுடைய அறைக்கு வந்தான் தென்னவன்!

"வர்த்தினி! இந்த இடத்துலயிருந்து நீ தப்ப முடியாது... வீணா முயற்சி பண்ணி கஷ்டப்படாதே!

"நான் அடுத்த வாரம் வருவேன்... அப்புறம்... அம்மாவுக்கு இப்ப கொஞ்சம் பரவாயில்லையாம்... இப்ப தான் போன் வந்தது!"

அவன் முடிக்கும் முன்பே, "ஓ... தேங்க் காட்!" என்றவளின் முகத்தில் இயல்பான மகிழ்ச்சித் துளிகள்!

அந்த முத்துச் சிரிப்பு ஏனோ அவனுள் கவிதைச் சரம் கோர்த்தது!



"ம்... அம்மாவுக்காகவாவது கடவுளை ப்ரே பண்ணியே! நான் கிளம்பறேன்... ஆனா என் நினைவுகள் உன்னைச் சுற்றி இங்கேயேதான் இருக்கும்... அதை மறந்துடாதே!"

அடிக்குரலில் எச்சரித்துவிட்டு அவன் கிளம்ப, சிறு எரிச்சலுடன் திரும்பி இருண்ட வானத்தை வெறிக்க ஆரம்பித்தாள் அவள்.

அவளைப் போலவே, அந்தப் பரந்த வானப் பின்னணியில் மேகச் சிறைக்குள் அடைபட்டிருந்தாள் நிலவுப் பெண்!

இங்கிருந்து எப்போது... எப்படி விடுபடப் போகிறோம் என்ற கேள்வி மனதை முள்ளாய் உறுத்த, கண் மூடி அருகிலிருந்த ஜன்னல் கம்பிகளில் முகம் புதைத்தாள்.

ஏனோ, பிரகன் நாயகி அம்மாவின் நினைவுகள் உள்ளே ஊடுருவின.

அவர் சுய நினைவுடன் சீக்கிரம் திரும்பி வர வேண்டுமென்று இதயம் ப்ரார்த்தித்தது.

அன்றாவது, இந்தத் தனிமைச் சிறையிலிருந்து தனக்கு விடுதலை கிடைக்குமாவென்ற தவிப்பு, விரவிப் பரவுவதாய்!

* * *

அந்த வாரம் முழுவதும், அந்த அறைக்குள்ளேயே அடைபட்டிருந்தாள் அவள்.

அவனுடைய அறை வழியே சாப்பாடு கொண்டு வந்து தர ஆரம்பித்தனர் வேலையாட்கள்!

அவர்களுடைய பார்வையில் தெரிகின்ற சிறு எதிர்பார்ப்பும், சுவாரசியமும் அவ[illegible]ம் சோர்[illegible] அதிகரித்தன.

JUN 12 2010

அன்றும், அது போல் கதவு திறக்கப்பட, திரும்பாமல் ஜன்னல் வழியே வெறித்தபடி அமர்ந்திருந்தாள்.

எதிரே நிலவொளியில் ஒற்றைப் பறவையொன்று அவளைப் போலவே திக்குத் தெரியாமல் சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தது.

உறவுக் கூட்டிற்குள், தாய்ப் பறவையின் கதகதப்பு சிறகிற்குள் இருந்தபோது, தான் பாதுகாப்பாக உணர்ந்ததை, ஏனோ இன்று நினைவு கூர்ந்தாள் அவள்.

எல்லாவற்றையும் தொலைத்துவிட்டு, இன்று அநாதையாக நிற்கும் உணர்வு பெரும் மாய தாகத்துடன் மனதை ஆக்ரமித்தது.

விழியோரம் சிறு அரும்புகள் மலரத் திரும்பியபோது, எதிரில் நின்றிருந்தான் தென்னவன்!

சட்டென்று, உணர்வுகள் வீணைத் தந்தியாய் அதிர, மிரண்டு விழித்தவளின் கன்னத்தில் வீழ்ந்து பயணித்தது... அந்த ஒற்றை வேதனைத் துளி!

அதைக் கண்டதுமே அவன் முகம் பெரிதும் இறுகி, கண்கள் சிவந்து கூர்ந்தன.

"வர்த்தினி..." பெரும் உணர்ச்சிப் பெருக்குடன் தடைபட்டு நின்றது அவன் குரல்!

"என்னாச்சு..?" மென் குரலில் கேட்டான் அவன்.

தன்னுடைய சுய பச்சாதாபத் தருணத்தில், அனுமதியின்றி அவன் உள்ளே நுழைந்ததைப் போல்!

தன் இயலாமையை... பலவீனத்தை அவனிடமிருந்து மறைக்க வேண்டுமென்ற தவிப்பு!



வேகமாகத் திரும்பி ஜன்னல் வழியாக வெளியே பார்க்கத் துவங்கியவளுக்குள், ஏனோ காட்டாறாய் பொங்கிப் பெருகியது துக்கம்!

சிறு விசும்பலுடன் ஆரம்பித்த அந்த அழுகையை ஒரு வித இயலாமையுடன் வெறித்திருந்த தென்னவன், மறுகணமே அவளை இழுத்துத் தன் மார்பில் ஏந்தி மென்மையாக ஆசுவாசப்படுத்தினான்.

'கடலை விட ஆழமானவள் நீ என்று தெரிந்தும், அந்த ஆழத்திற்குள் சென்று அதன் ரகசியமறிந்து காதல் முத்தெடுக்க விரும்புகிறதே மனது!' அவன் உள்ளூர சலித்துக் கொண்டான்.

சில நொடித் துளிகளே மௌனமாய்க் கரைந்திருக்க, பதறி விலகியவளின் விழிகளிலோ கடும் ரௌத்ரம்!

"என்னை நீங்களே அடைச்சி வச்சிட்டு, இப்ப என் மேல பரிதாபம் காட்டற மாதிரி நடிச்சி, என்னை இம்ப்ரெஸ் பண்ணப் பாக்கறீங்களா?"

ஊசியாய் உரசிய அவளுடைய கேள்வியில், அவனுக்குள் உடைந்து சிதறின... அதுவரை படர்ந்திருந்த குற்றவுணர்வும், பரிதாப உணர்ச்சியும்!

"இப்ப நீ அழுதது இதுக்காகவா? உண்மையைச் சொல்லு?"

ஆழ்ந்த குரலில் வந்த அவனது கேள்விக்குத்தான் அவளிடம் பதிலில்லை.

"உனக்கு... உங்க வீட்டு ஞாபகம் வந்துடுச்சி இல்லையா?" மெல்லக் கேட்டான் அவன்.

அந்த நொடியே இதயத்திற்குள் அடைபட்டிருந்த ஏக்க உணர்வுகள், தண்ணீர்ப் பந்தாய் வெடித்துச் சிதறின.

"ஆமாம்..." வார்த்தைகள் அவளின் அனுமதியின்றியே வெளிவந்தன.



# 17

"ஏன் வர்த்தினி? அவங்க பக்கம் இருக்கற நியாயத்தை நீ கேக்க விரும்பலையா?"

அம்பாய் வீசப்பட்ட வார்த்தைகள், அவளுள் பெரும் குழப்பத்தையும் சஞ்சலத்தையும் விதைக்க பரிதவிப்புடன் அவனையே கூர்ந்தாள்.

"இது... எங்க குடும்ப விஷயம்... உங்களுக்கு எப்படி?" திகைப்புடன் கேட்டாள்.

உடனே, அவன் உதடுகளில் சிறு குறுஞ்சிரிப்பொன்று தடம் பதித்தது.

"ம்.. அங்கிள் எங்க பேமிலி ஃப்ரெண்டாச்சே... எல்லாம் சொன்னாங்க... உன்னைப் பத்திரமா பாத்துக்கச் சொன்னாங்க!"

"இதுதான் நீங்க பத்திரமா பாத்துக்கற லட்சணமா?" அடக்கமாட்டாமல் பொங்கினாள் அவள்.

"ஆமாம்! இங்கே நீ பத்திரமாத் தானே இருக்கே... எல்லா வசதிகளோடவும்?"

"ம்... இருக்கேன்! ஒரு ஜெயில் கைதியா... உணர்வுகள் ஒடுக்கப்பட்டவளா...!"



அவளுடைய குமுறல் புரிய முகம் கசங்கித் திரும்பியவன், "அதான் உனக்கொரு ஆப்ஷன் இருக்கே... இப்பக்கூட நீ எனக்கு மனைவியாக சம்மதிச்சா, சுதந்திரமா இருக்கலாமே?" அமர்ந்த குரலில் கேட்டான்.

"நோ!" மறுகணமே வெடித்தாள் அவள்.

"முடியாது! திருமணம், உறவுகள், குடும்பம் எல்லாமே பொய்... வேஷம்! ஏமாத்தற அந்தப் பொய் முகமூடி எனக்குத் தேவை இல்லை!"

"ஏன் இப்படி ஒரு வெறுப்பு? குற்றவாளிக்குக் கூட அவங்க பக்க நியாயத்தைச் சொல்ல ஒரு சந்தர்ப்பம் குடுப்பாங்க!"

"அதை ஏன் அந்த நிரபராதிகளுக்கு நீ தரலை?" வன்மையாகக் கேட்டான்.

"அவங்க நிரபராதிகள்னு உங்களுக்கு எப்படித் தெரியும்?" வார்த்தைகள் திராவகச் சிதறலாய்!

"ம்... அங்கிள்தான் சொன்னாங்க! முன்னே பின்னே தெரியாத எங்கம்மா மேல நீ காட்டின அக்கறை, ப்ரியம் எல்லாமே அப்ப பொய்யா? உங்கம்மாவை... அவங்க உணர்வுகளையே மதிக்காத நீ... மத்தவங்களை எப்படி...?" இழுத்தாற்போல் நிறுத்தினான்.

"ம்... உங்களுக்கு என்ன தெரியும்? நான் பட்ட காயங்கள் வேதனைகள் எல்லாம்?"

கொதிப்பும் வேதனையுமாய் சிதறிய வார்த்தைகள், அந்த அறையெங்கும் தணலாய் தகிப்பாய் பரவுவதைப் போல்!

மறுகணமே அவனுடைய [illegible]பிடிக்குள் சிறைப்பட்டிருந்தாள் அவள்.

JUN 12 2010

'ஒவ்வொரு இதயத் துடிப்பும் உனக்காகவே துடித்தாலும், அதை உணரும் நிலையில் நீயில்லையே!' அவன் மனம் மறுகியது!

அவளுடைய முகத்தை இரு கைகளிலும் மென்மையாக ஏந்தியவன். ''நம்ம உறவுகளை மன்னிச்சி ஏத்துக்கறது தான் நல்லது வனிம்மா! தப்பு பண்ணாதவங்க இந்த உலகத்திலேயே இல்லை தெரியுமா?'' இளகிய குரலில் கேட்டான்.

உடனே அவன் பிடியிலிருந்து வேகமாக விலகியவளுக்குள், பெரும் படபடப்பும், தவிப்பும்!

'இவனுடைய அணைப்பும், ஸ்பரிசமும் என்னை ஏன் இவ்வளவு பலவீனப்படுத்துகின்றன?

'இனி இதை அனுமதிக்கக் கூடாது! இவனிடமிருந்து முடிந்தவரை விலகியே இருக்க வேண்டும்!

'சபாபதி அங்கிள் வேறு தன் குடும்பத்தைப் பற்றி இவனிடம் என்னென்ன கூறியிருக்கிறாரோ?' பலப் பல குழப்பங்கள் உள்ளே மாய வலை பின்னின.

''கண்ணால் காண்பதும் பொய்... காதால் கேட்பதும் பொய்... தீர விசாரிப்பதே மெய்.. அப்படின்றது எவ்வளவு சத்திய வார்த்தை தெரியுமா?''

அவன் குரல், அவளுள் பெரும் சஞ்சலத்தையும், பலவீனத்தையும் ஜனிக்கச் செய்வதாய்,

''வேண்டாம்! ப்ளீஸ்... என் குடும்பத்தைப் பத்தி நீங்க பேசறது, இதுவே கடைசியாக இருக்கட்டும்! அதை மறக்கவே நான் விரும்பறேன்...''

தர்ம சங்கடத்துடன் வந்த அவளுடைய குரல், அவனுக்குள் பெரும் கீறலாய்!



''நம்ம சுற்றங்களை மன்னிக்கக் கத்துக்கணும் வனி! குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லைன்னு நீ படிச்ச தில்லையா?''

''இல்லை! எனக்கு அதைப் பத்தித் தெரியவும் வேண்டாம்! இந்த அறிவுரை எல்லாம் வேற எங்கேயாவது வச்சிக்கங்க!

''அப்புறம்... இன்னொரு விஷயம்! இந்த அட்வைஸ் எல்லாம் மத்தவங்களுக்குத் தானா? உங்களுக்கு யார் சொல்றதாம்?

''ஒரு வயசுப் பொண்ணை இப்படி அடைச்சி வைக்கிறது தப்புன்னு இதுவரைக்கும் யாருமே சொல்லலையா?''

''ம்... நான் ஒரு வயசுக் குழந்தையை இங்கே அடைச்சி வெக்கலையே... என் வருங்கால மனைவியைத் தானே சிறை பிடிச்சிருக்கேன்'' சிறு குறும்புடன் முடித்தான் அவன்.

''ப்ச்... எனக்கு எப்போ இங்கேருந்து விடுதலைன்னு நான் தெரிஞ்சிக்கலாமா?''

''ம்... உன் மனசுக்குள்ளே நான் குடி புகுந்தப்புறம்!''

''அப்படி ஒரு பொய் சொல்லிட்டு நான் இங்கேருந்து தப்பிச்சிட்டா...?'' கூர்மையுடன் கேட்டாள் அவள்.

''முடியாதே! நான் கட்டின தாலியோட தான் நீ வெளியே போகவே முடியும்... அப்புறம் எங்கே தப்பிக்கறது!'' இலகுவாக வந்தது அவன் குரல்!

'கவிதைக்குப் பொருளாய்... அன்றே நீ எனக்குள் கலந்து விட்டாய்' எனக் கூற வி[illegible]து அ[illegible]ன் [illegible]ம்! ஆனால் மௌனமே அங்கு நேச வார்த்தைகளாய்...!

JUN 12 2010

திடீரென்று... அவள் குரல் இ... ஒலித்தது.

"ம்... பார்ப்போம்!"

ஒற்றை விரலுயர்த்தி குறும்புடன் எச்சரிக்கும்போது தான், அவனுடன் தான் ரசனையுடன் வார்த்தைகளில் மல்லுக் கட்டுவது புரிந்தது.

"ஏன் வனி... என்னோட ஒத்துப் போகக் கூடாதா? உன் சிறைவாசம் சீக்கிரம் முடிஞ்சிடுமே?"

"முடியாது! இந்தக் கொஞ்ச நாள் சிறையிலிருந்து தப்பிக்க, நிரந்தரமா வாழ்க்கை முழுக்க திருமண விலங்கை மாட்டிக்க என்னால முடியாது!"

வீம்புடன் அவள் முடிக்க, "ஆனா அன்னிக்குப் பாத்தப்ப அப்படித் தெரியலையே?' கண்களில் குறுகுறுப்புடன் வினவினான் தென்னவன்.

"என்னிக்கு?" குழப்பத்துடன் விழித்தாள் அவள்!

"ம்... நீ காட்டு மிராண்டின்னு சொன்னதும் நான் உன்னை... அன்னிக்கு! அப்போ அப்படியே உறைஞ்சு கிறங்கி ரசனையோட நின்னுட்டிருந்தியே... அதைச் சொன்னேன்...

"அப்போ நல்லாத்தானே இருந்தது... அதுக்குள்ளே எப்படிப் பிடிக்காமப் போச்சு?"

நமட்டுச் சிரிப்புடன் கேட்க, "சீ! ஐ ஹேட் யூ!" வெறுப்புடன் பகர்ந்தாள் அவள்.

"பெண்கள் வேண்டாம்னு சொன்னா வேணும்னு அர்த்தம்னு... அதுவும் இப்படி ரொமாண்டிக் டைம்லே மட்டும் யாரோ சொல்லிக் கேட்டிருக்கேன்!"



"இந்த "ஐ ஹேட்யூ"வுக்கே பொருளை எதி... எடுத்துக்கலாமா?" உல்லாசக் குரலில் வினவினான்.

"ப்ச்... கோ டு ஹெல்!"

வெறுப்புடன் கூறியபடி அவள் திரும்ப கைப்பற்றி அவன் இழுத்த வேகத்தில் அவனுடைய மார்பில் ஒரு பூங்கொத்தாய் சரிந்தாள் வர்த்தினி!

அவனுடைய ஆண்மையின் வலிமையும், அந்த இரண்டாவது தீண்டலும், அவளுக்குள் பழைய ஞாபக மடல் விரிந்தது.

இதழின் யுத்தமாய் அன்று நடந்த முத்த அரங்கேற்றம் நினைவுக்கு வர, கன்னங்களில் புதிதாய் ஒரு இளஞ் சிவப்பு ரோஜா... அவளின் அனுமதியின்றியே உதயமானது.

"ம்... இதை... இதைத் தான்.. இந்த வெட்கத்தைத் தான் எதிர்பார்த்தேன்! உன் வார்த்தைகளை நான் மாத்திப் பொருள் கொண்டது சரிதானே?

"அதனால உனக்கும் சொர்க்கம் தானே பரிசாக் கிடைச்சது... என்னைத் தேடி உனக்குள்ளே ஒளிச்சி வச்சிட்டு, ஏன்டி இப்படி வம்பு பண்றே? என் மேல காதலே இல்லைன்னு பொய் சொல்றே?"

தீராக் காதலில் கசிந்துருகி மெல்லக் குனிந்து, அவள் கழுத்தில் தன் உதடுகளை உரச, வேகமாகப் பிடித்து அவனைத் தள்ளி விட்டாள் வர்த்தினி!

முட்களிடையே சிக்கித் தவிக்கும் ரோஜாவாய் தான் இருப்பதை, அன்று தான் உணர்ந்தாள் அவள்.

"தென்னவன்... இதுதான் உங்களுக்கு நான் தர்ற லாஸ்ட் வார்னிங்! இனிமே என் அனுமதியில்லாம உங்க விரல் நுனி கூட என் மேல படக் கூடாது!"


JUN 12 2010

ஒற்றை விரலுயர்த்தி எச்சரிக்கை விடுத்தவளையே ஆழமாய்க் கூர்ந்தவன்,

''பட்டா என்ன பண்ணுவே?'' ரகசியக் குரலில் கேட்டான்.

''ம்... என் உயிரை நான் மாச்சுப்பேன்! மாடியிலிருந்து குதிச்சி... ப்ளக்கிலே கைவச்சு... இப்படி ஏதாவது செஞ்சு!''

அழுத்தமாக முடித்துவிட்டு திரும்பிச் சென்று, குளியலறைக்குள் புகுந்து கதவை அழுந்த சாற்றினாள் அவள்.



# 18

அந்த நொடி தென்னவனின் முகத்தில் ஜனித்த உணர்ச்சிகள், வார்த்தை வரங்களைத் தொலைத்த தவிப்புடன்... சொல்லாத பல சொற்களின் அர்த்தங்களாய்! சிறிது நேரம் உலைக்களமாய் ஒருவித வெப்பம் உள்ளே பரவியபடியே இருந்தது.

முகம் கசங்கி, விழிகள் சிவந்து, கைகள் இறுகி உள்காயப்பட்ட மனதின் உணர்வுகளை கண்ணாடியாய் அறிவித்தன.

உடனே திரும்பி வெளியே சென்றவன், கேர் டேக் கரிடமும் சமையல் செய்யும் பெண்மணியிடமும் ஏதோ கூறிவிட்டு, வேகமாகக் காரைக் கிளப்பிச் சென்றான்.



அன்றிரவு சரியாக உறங்காததால், விடிந்தும் விழிக்க மனமின்றி படுக்கையிலேயே புரண்டு கொண்டிருந்தாள் அவள்.

முன்பொரு நாள் நடந்தது... இன்று மெல்லிய புகைப் படலமாய்... கனவாய் கண் முன் வர ஆரம்பித்தது.

அவள் இங்கு வந்து ஒரு வாரம் ஆகியிருந்த நிலையில், இரவு படுத்து வெகு நேரம் அவள் உறங்கவே இல்லை.

மனம் விழித்திருக்க, கடும் யோசனையிலிருந்தவளை, கதவு திறக்கும் ஒலி கலைப்பதாய்!

கண்களை சுருக்கி அவள் மெல்ல விழித்துப் பார்க்க, இரவு விளக்கின் மெல்லிய ஒளியில், அவன் அதை அறியவில்லை.

அவளருகில் வந்து நின்றவனுடைய பார்வை, அருகில் மடித்து வைக்கப்பட்டிருந்த போர்வையில் பதிய உடனே அதை எடுத்தான்.

அவளோ, மூச்செடுக்கொமல் கவனமாக அவன் என்னதான் செய்கிறானென்று கவனித்திருந்தாள்.

இதயத்தில் எச்சரிக்கை மணி ஒலித்தபோதும் அவள் தடதடப்புடன் காத்திருக்க, அந்த கனத்த போர்வை அவளை மெல்லத் தழுவி மூடியது.

மறுகணம் திரும்பி அவன் வெளியேற, அவளுக்கோ மிகுந்த ஆச்சர்யம்!

சென்ற வாரத்திலும் அப்படித்தான்... அவள் வேண்டுமென்றே சாப்பிட மறுக்க, அவனும் அன்று சாப்பிடவில்லை என்பதை, சமையல்கா[illegible]வின் மூலமாகத் தான் பிறகு அறிந்து கொண்டாள்.

இவன் ஏன் என்னை இப்படி வதைக்கிறான்...? முன்பு ஒரு நாள் கூட இப்படித்தான்...!

அன்று, குளித்து முடித்து பெரிய டவலை அணிந்து அறைக்குள் வந்தவள், தலை முடியை ஹேர் ட்ரையர் மூலம் உலர்த்த ஆரம்பித்திருந்தாள்.

எப்போதுமே அவன் சனிக்கிழமை இரவே வருவது வழக்கமென்பதால், மற்ற நாட்களில் அவள் சுதந்திரமாகச் சுற்றி வருவாள்.

அன்றும் அது போல் தனக்குப் பிடித்த பாடலை மென்மையாக முணுமுணுத்தபடி நின்றிருந்தபோதுதான், எதிர்பாராத விதமாக அறைக் கதவைத் திறந்து கொண்டு தென்னவன் உள்ளே வந்து விட்டான்.

மறுநொடியே அவள் பதறி விதிர்த்து உறைந்து நிற்க, அவனும் சிலையென சமைந்து நின்றது, சில வினாடிகள் தான்!

உடனே தன்னை உயிர்ப்பித்து பார்வையைத் தழைத்துத் திரும்பியவன், ''சாரி!'' என்ற ஒற்றை வார்த்தையுடன் திரும்பி கதவை அழுந்த சாற்றிவிட்டு, வெளியேறி விட்டான்.

அவனிடம் இந்தச் செயலை எதிர்பார்க்காததால், பெரும் நன்றியுணர்வுடன் வெகுநேரம் பனிச் சிற்பமென உறைந்து நின்றிருந்தாள் அவள்.

அதற்குப் பிறகு நேற்று வரை, கதவைத் தட்டாமல் அவன் உள்ளே வந்ததே இல்லை.

முதன் முதலாக, அவனைப் பற்றிய நல்ல விஷயங்கள்... மனதிற்குள் மெல்லத் தலை தூக்குவதை இன்று அவளால் உணர முடிந்தது.



அவன் சென்ற முறை வந்தபோது கூட, அவளுக்குத் தேவையான பாடப் புத்தகங்கள் சப்தமின்றி வந்து அவளுடைய மேசையில் அமர்ந்திருந்த ஞாபகம் இன்று அழியாக் கோலங்களாய்!

முன்பு அவனுடைய வீட்டில் தங்கியிருந்தபோது நடந்த ஒரு விஷயம், இன்றும் விலகாமல்...!

அவனுடைய பால் பண்ணையில் வேலை செய்து வந்தவருடைய மகளின் திருமணம் பணப் பற்றாக்குறையால் நிற்கும் நிலை!

அதையறிந்த தென்னவன் மாப்பிள்ளை வீட்டாரிடம் சென்று பேசி அந்தச் செலவைத் தான் ஏற்று அந்தத் திருமணத்தை நிற்க விடாமல் நடத்திக் கொடுத்தது. இன்று நடந்ததைப் போல்!

ஏனென்றால் அதற்கான பணத்தை அந்தப் பெண்ணின் தந்தையிடம் அவளை விட்டே அன்று அளிக்கச் செய்திருந்தான் அவன்!

இன்று... ஏன் அவனைப் பற்றியே நினைக்கிறேன்... தவித்தது இதயம்.

ஏனோ, இன்று அவனுடைய விசுவரூபப் பரிணாமம் அவளை வெகுவாய் ஆக்ரமித்து சிந்தை தடுமாறச் செய்வதாய்!

தொழிலில் கெட்டிக்காரன்... தாயிடம் மிகுந்த பாசம் கொண்டவன்... மனித நேயத்தில் உயர்ந்தவன்... ஏன் தன்னிடம் மட்டும் இப்படி...? உள்ளம் கேள்வி கேட்டது.

ஆனால், அதற்குக் கிடைத்த விடைதான் அவளைத் தூக்கி வாரிப் போடச் செய்தது.

JUN 12 2010

தன்னை விட்டு விலக முடியாமல், மாறாக் காதலின் விளைவாகவே அவன் இப்படி நடந்திருக்க வேண்டும் என்பது, தாமதமாகப் புரிவதாய்!

ஆனாலும், உறவுகளால் வெகுவாகக் காயப்பட்டிருந்த நெஞ்சிற்குள், யாரையும் ஏற்றுக் கொள்கின்ற பக்குவமும், தைரியமும் தொலைந்து போயிருந்தன.

அவனுடன் இணைந்திருந்த மாயத் தருணங்களை இன்று நினைத்தாலும், அதில் கோப நெடியே அதிகமாய்!

மெதுவாக எழுந்து குளித்துத் தயாரானவளுக்குள், திடீரென்று ஒரு யோசனை வருவதாய்!

எப்போதுமே அவளை ஜாகிங் செல்ல அழைப்பவன், இன்று ஏன் வரவில்லை என்ற கேள்வி புதிராய்!

நேற்றைய அவனுடைய ''வனிம்மா...'' என்ற அழைப்பும், காதலில் உருகி முத்தமிட்டதும், தான் தீயாத் தகித்து வார்த்தைகளை சிதற விட்டதும், மெலிதாய் நினைவுப் படலங்களை ஆக்ரமித்தன.

அந்தக் கோபம்தான் போலும்... இன்று காலையில் அவன் தன்னை வாக்கிங் செல்ல அழைக்கவில்லை யென்பது புரிந்து, தனக்குள் புன்னகைத்துக் கொண்டாள்.

முன்பு, முதன் முதலாக அவன் முத்தம் சிந்திய வேளை யும், அன்று தன்னுள் பெரும் மின்சாரம் பாய்ந்ததும், நாணம் வரைந்த கவிதையாய் இன்று அவளுக்குள்!

முதன் முதலாக ஒரு பெண்ணாக... மெல்லியளாகத் தன்னை உணர ஆரம்பித்தவளுக்குள் புதிராய் ஒரு வெட்கப் பரவல்!

இதயச் சுடராய்... மேகப் பொழிவாய்... ஒளி நிறைந்த எதிர் காலமாய் உள்ளே அவன் உருவம்!



இனி அவனை தைரியமாக எப்படி எதிர்கொள்வ தென்ற குழப்பமும், வெட்கமும் அவளை ஆட்கொள்வதாய்!

அவனுடைய தீவிர நேசத்தை உணர்ந்த மனதிற்குள், பலவிதமான குழப்ப அலைகளின் அணி வகுப்பு!

ஆனாலும், தன்னால் உறவுகள், குடும்பம் இல்லறம் இவற்றின் மீதெல்லாம் நம்பிக்கை வைக்க முடியாதென் பதும், ஒரு ஓரத்தில் மௌன முணுமுணுப்பாய்!

''எங்கிருந்து வந்தாய் தென்னவனே? எனை என்ன செய்தாய் என்னவனே?''

அதே யோசனையுடன் அமர்ந்திருந்தவளை, சமையல் காரம்மாவின் குரல் கலைத்தது.

''அம்மா! உங்களை அழைச்சிட்டுப் போக கார் வந்திருக்கும்மா!''

அவளையே யோசனையுடன் அளவிட்டபடி, கவலை யுடன் கூறினார் அவர்.

''தென்னவன் எங்கே?''

அவளின் கேள்விக்கு வந்த பதில், சிறு அதிர்ச்சியை அவளுள் ஜனிக்கச் செய்வதாய்!

''சின்னய்யா ராத்திரியே கிளம்பிப் போய்ட்டாங் களேம்மா! காலையில கார் அனுப்பறதா சொன்னாங்க... அதிலே நீங்க உங்க விருப்பப்படி சென்னைக்குப் போகலா மின்னு சொல்லச் சொன்னாங்க!''

அவர் முடித்ததும் வேகமாக எழுந்தவள், ''அப்படியா சொன்னாரு?'' வியப்புடன் கேட்டு விட்டு வெளியே வந்தாள்.

JUN 12 2010

வாசலில், காருடன் டிரைவர் அவளுக்காகக் காத்திருப்பது தெரிந்தது.

அவளைக் கண்டதும் பவ்யத்துடன் வணங்கியவர், "அம்மா! கார் ரெடியா இருக்கு! நீங்க தயாரானதும், எங்கே போகணும்னு விரும்புறீங்களோ, அங்கே அழைச்சிட்டுப் போய் விடச் சொன்னாங்க ஐயா!"

"அநேகமா சென்னைக்குத் தான் போவீங்கன்னு தெரிஞ்சதாலே, பெட்ரோல் டாங்க்கை ஃபுல் பண்ணிட்டுத்தான் வந்திருக்கேன்! எப்பம்மா கிளம்பலாம்?"

அவர் கேட்டதும், ஒரு கணம் என்ன செய்வதென்றே புரியவில்லை.

இதுவே முன்பு கேட்டிருந்தால் துள்ளிக் குதித்திருப்பாள் அவள்.

இன்று ஏனோ தவிப்பாய்... தென்னவனுடைய திடீர் மாற்றமும், ஒதுக்கமும் வியப்பைத் தூண்டுவதாய்!

"உங்க... தென்னவன் ஐயாவோட செல் நம்பர் கொஞ்சம் தர முடியுமா?" ஆவலுடன் கேட்டாள்.

ஏனோ, அவனிடம் உடனே பேச வேண்டும் போல்!

"சாரிம்மா... எனக்குத் தெரியாது... வீட்டு நம்பர் வேணாத் தரேன்."

ஒரு தொலைபேசி எண்ணை எழுதி அவர் நீட்ட, வாங்கிக் கொண்டு உள்ளே வந்தாள் அவள்.

கூண்டை விட்டு விடுதலையாகப் போகும் சிறு பறவையின் உற்சாகம், ஏனோ வர மறுத்தது.

இந்த திடீர் முடிவிற்குக் காரணம் என்னவென்று புரியாமல் தவித்தவளுக்கு, நேற்றைய பேச்சு நினைவுக்கு வர, மூச்சு முட்டியது!



உடனே தன் உடைமைகளை எடுத்து வைத்தபோது, ஒரு பெரிய கவரை எடுத்து வந்து நீட்டினார் அந்தப் பண்ணை வீட்டின் கேர் டேக்கர்.

"அம்மா! இதிலே உங்க செல்போனும், சர்டிபிகேட்டும் பணமும் இருக்கு... நீங்க கிளம்பும்போது சின்னய்யா குடுக்கச் சொன்னாங்க!" என்றார்.

தீவிர யோசனையுடன் அதை வாங்கியவளுக்குள், எதிலோ தோற்றுப் போன உணர்வு!

தென்னவன் தான் அப்படி உணர வேண்டும்... ஆனால், தான் ஏன் இப்படிப் பரிதவிக்கிறோமென்பது அவளுக்கே புரியாத புதிராய்!

அவனிடமிருந்து... அந்த வீட்டிலிருந்து எப்படித் தப்பிப்பதென்ற யோசனையிலிருந்தவள், இன்று அந்த வாய்ப்பு கிடைத்ததும் துள்ளிக் குதித்திருக்க வேண்டும்!

ஆனால், அப்படியின்றி ஒரு புரியாத தவிப்பும் சஞ்சலமும் அவளை ஆட்கொண்டது உண்மையாய்!



## 19

மெதுவாகக் கிளம்பி வெளியே வந்தபோது, மனம் கனத்திருக்க, ஏனோ இதயத்தில் சிறு பிரிவாற்றாமை உணர்வு!

காரில் செல்லும்போது, எதிர்பாராத வருகையாய் ஒரு சிறு கவிதையின் உதயம்!

JUN 12 2010

அன்று
நீ கூறினாய்...
''நான் மாறுவேன் என்று!
இன்று
நானே சொல்கிறேன்...
''நான் மாறிவிட்டேன்'' என்று!
ஆனால்...
அதைக் கேட்கத் தான்
என்னருகில்
நீயில்லை!
என்
உள்ளமெங்கும் சிலிர்ப்பாய்
உன் முத்தச் சலசலப்பு...
எப்படி மறப்பேன் உன்னை..?

எங்கிருந்து என்னுள் வந்தது இந்தத் திடீர் மாற்றம்?

நொடிப் பொழுதில் உதயமாகி மறுகணமே மறையும் வானவில்லின் வர்ணமா காதல்?

பெரும் குழப்பமும் கேள்விகளும் அவளை ஆட்கொள்ள, எல்லாவற்றையும் தனக்குள்ளேயே புதைத்தபடி, மௌனமாய் பயணிக்க ஆரம்பித்தாள் வர்த்தினி!

மதியம் சாப்பிடுவதற்கென்று டிரைவர் ஹோட்டலில் நிறுத்த, பசியில்லாததால் மறுத்து விட்டாள் அவள்.

அவரோ சாப்பிட்டு விட்டு பார்சல் ஒன்றை வாங்கி வந்து அவளிடம் நீட்ட, ஏனோ மறுக்க முடியவில்லை.



மாலையில் சென்னைக்கு வந்து சேர்ந்தபோது, ஏதோ ஒரு புதிய உலகத்திற்கு வந்ததைப் போல்!

இங்கிருந்து கிளம்பிச் சென்று ஆறு யாதங்களே ஆகிறதென்றால் நம்பவே முடியவில்லை!

சென்னைக்கு வந்ததும்தான், எங்கு செல்வதென்ற குழப்பமும் பயமும் அவளை ஆக்ரமித்தன.

உடனே, மீராவின் நினைவு தான் வந்தது.

அவளுடைய வீட்டிற்குச் சென்றபோது, உற்சாகத்துடன் அந்தக் குடும்பமே வரவேற்க, ஏனோ வெகு இதமாய்!

''ஏன்டி.. ரெண்டு மூணு மாசமா போனே பண்ணலை... எங்களை எல்லாம் மறந்திட்டேன்னு நினைச்சேன்... இப்ப நேராவே வந்து நின்னு இன்ப அதிர்ச்சி தரே!''

முகம் நிறைந்த புன்னகையுடன் அணைத்துக் கொண்ட தோழியைக் கண்டவுடன், அவளுடைய காயங்களெல்லாம் சற்று ஆறுவதைப் போல்!

''வேலை அப்படி மீரா! நான் பாத்துக்கப் போயிருந்த பிரகன் நாயகி அம்மாவுக்கு கொஞ்சம் உடம்பு சரியாகற மாதிரி ஆனவுடனே இங்கே ட்ரீட்மெண்டுக்காக சென்னைக்கு அழைச்சிட்டு வந்திட்டாங்க!''

''அதுக்குப் பிறகு நான் தங்கியிருந்த பண்ணை வீட்டிலே... போன் வசதி இல்லை... அதான்!'' தர்ம சங்கடத்துடன் முடித்தாள்.

''வர்த்தினி! அந்தக் கார் டிரைவர், தான் கிளம்பலாமான்னு உன்கிட்ட கேக்கச் சொன்னாரும்மா!'' சபாபதி தான் அவளை அழைத்தார்.

உடனே வெளியே வந்தவள், ''ரொம்ப தேங்க்ஸ்ங்க! இவ்வளவு தூரம் ஓட்டிட்டு வந்துட்டு உடனே கிளம்ப வேண்டாமே! இங்கே பக்கத்துல ஹோட்டல்லே அங்கிளை விட்டு ரூம் புக் பண்ணித் தரச் சொல்றேன்... தங்கிட்டு காலையில போகலாம்!'' அக்கறையுடன் மொழிந்தாள்.

''இல்லைம்மா! சின்னய்யா அம்மாவைப் போயி ஹாஸ்பிடல்லே பாத்துட்டு கிளம்பிடச் சொன்னாங்க! நான் வரேம்மா!'' என்று கைகூப்பி வணங்கி விட்டுக் கிளம்பினார்.

''ஒரு நிமிஷம்ங்க! அம்மா எந்த ஹாஸ்பிடல்லே அட்மிட் ஆகியிருக்காங்க?''

அவள் கேட்டதும் அவர் பெயரைக் கூற, சட்டென்று உடல் குலுங்கியது!

அவளுடைய மாமா மகாலிங்கத்தின் மருத்துவமனை தான் அது!

அவள் அந்த அதிர்ச்சியிலிருந்து விடுபடும் முன்பே, கிளம்பியிருந்தார் டிரைவர்!

* * *

மறுநாள்... எதிர்பாராத ஒரு விருந்தாளியை அவள் சந்திக்க நேர்ந்தது.

காலையில் எழுந்து குளித்து உடை மாற்றும்போதே அறைக் கதவு தட்டப்பட, திறந்தால் எதிரில் நின்றிருந்தார் அவளுடைய தாய் சுகந்தி!

''அம்மா... நீங்களா?'' - உதடுகள் உச்ச அதிர்ச்சியில் முணுமுணுக்க, மறு நொடியே கண்ணீருடன் அவளை அணைத்துக் கொண்டார் சுகந்தி!



வெகு நாட்களுக்குப் பிறகு அவரைச் சந்தித்ததில் நெகிழ்ந்து போய் நின்றவளின் மனம், சட்டென்று விழித்துக் கொண்டது.

தன் தந்தையின் நினைவும், அவரின் துர்மரணமும் மீள முடியாச் சுழலாய், கண் முன் விரிந்தன.

திடீரென்று விரைத்த உடலுடன் விலகி நின்ற மகளைக் கண்கள் கலங்க நோக்கிய சுகந்தி, மெதுவாகத் தன் மனம் திறந்து பேச ஆரம்பித்தார்.

அதை வியப்பும் யோசனையுமாக அவள் செவி மடுக்க, சுகந்திக்கோ காட்சிகள் கண் முன் விரிந்தன.

அப்போது, சுகந்திக்குத் திருமணமாகி ஆறு மாதங்களே நிறைந்திருந்தன.

ஐந்து மாத கர்ப்பிணியாய் மனம் நிறைய மழலைக் கனவுகளைச் சுமந்து அவள் காத்திருந்தபோதுதான், அந்த முதல் அதிர்ச்சியைச் சந்தித்தாள்.

அவர்களுடைய வீட்டில் வேலை செய்து வந்த வேலைக்காரப் பெண்ணிடமே அவளுடைய கணவர் வீராச்சாமி தவறாக நடந்து கொண்டதாகத் தெரிய வந்தபோது, பெரிதும் அதிர்ந்து தான் போனாள்.

ஆனால், அவரோ அதற்காக சிறிதும் வருத்தப்படவுமில்லை... மனைவிக்குத் தெரிந்து விட்டதேவென்று கூசிப் போகவுமில்லை!

அப்போதுதான், அவருடைய சுயரூபமே சுகந்திக்குத் தெரிய வருவதாய்!

பெரும் கவலையும், வெறுப்புமாகவே அவர் பிரசவத்திற்கு உறவினரின் வீட்டிற்கு சென்று திரும்பி வருவதற்குள், அவருடைய குணம் வெகுவாகவே மாறியிருந்தது.

JUN 12 2010

பெரும் குடிகாரனாய் மாறி இருந்தவருக்குள் இருந்த தீய குணங்கள், நன்றாகவே வெளியே தெரியத் துவங்கின.

இருவரும் காதல் திருமணம் செய்து கொண்டிருந்ததால், சுகந்திக்கு தன் பிறந்த வீட்டுத் தொடர்பே இல்லாதிருந்த ஒரு நிலை!

அதைத் தனக்கு சாதகமாக்கிக் கொண்ட வீராச்சாமி, பல பெண்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ள ஆரம்பித்தான்.

பிறந்த வீட்டையும் பகைத்துக் கொண்டு, நிராதரவாய் நின்றிருந்த சுகந்தியால், ஒரு குழந்தையையும் வைத்துக் கொண்டு அவனை எதிர்த்து ஒன்றும் செய்ய முடியவில்லை.

எவ்வளவோ எடுத்துக் கூறி, அழுதாலும் கெஞ்சினாலும் கூட அவன் மாறுவதாக இல்லை!

மனதளவில் ஒடுங்கிப் போய், ஒரு கொத்தடிமையாய் சுகந்தி மருகி வாழ்ந்த காலத்திற்கும் ஒரு முடிவு வந்தது.

அப்போது வர்த்தினிக்கு மூன்று வயது முடிந்திருக்க, ஒரு பள்ளியில் அவளைச் சேர்த்த சுகந்தி, தானும் அங்கேயே டீச்சராக வேலையில் சேர்ந்தார்.

அந்த வருமானமும், அவரது கவலைகளை மறக்க உதவிய வேலையும், ஓரளவு அவரை நிம்மதியாய் நடமாட வைத்தன.

வீராச்சாமி, தினமும் குடித்து விட்டு வந்து அடித்து சித்ரவதை செய்து, சந்தேகப்பட்டு அவருடைய வேலைக்கும் உலை வைக்க முயன்றபோதுதான், கொதித்துப் போனார் அவர்.



ஆனால், பள்ளி நிர்வாகம் அவருடைய நிலையைப் புரிந்து கொண்டு மனித நேயத்துடன் செயல்பட, அதையும் தவறாகவே குறை கூறி, மனைவியை கொடுமைப்படுத்தினான் அவன்.

ஆண்களில் மிகவும் அழகாய், கம்பீரமாய் இருந்ததால், அவனுடைய வலையில் பெண்கள் எளிதாகவே மாட்டுவது வழக்கமாயிற்று.

அவனுடைய அடியும் உதையும், சித்ரவதைகளையும் தாங்க முடியாமல் கணவரை விட்டு அவர் பிரிய முடிவெடுத்த வேளையில் தான், அந்த அசம்பாவிதம் நிகழ்ந்து விட்டது.

வீராச்சாமி, குடிபோதையில் ஒரு வீட்டில் தனிமையிலிருந்த பெண்ணை மானபங்கம் செய்துவிட, அப்போது தான் அந்தப் பெண்ணுடைய அண்ணன் சுந்தரமகாலிங்கம் மருத்துவமனையிலிருந்து வீட்டிற்குத் திரும்பியிருந்தார்.

அப்போது விளைந்த பெரும் சண்டையில், அவர் வீராச்சாமியைப் பிடித்து இழுத்துத் தள்ள, குடி போதையில் கீழே விழுந்தவர் பிறகு எழவே இல்லை!

தலையில் அடிபட்டு அவர் அந்த இடத்திலேயே இறந்துவிட, உடனே போலீசில் சரணடைந்தார் சுந்தரமகாலிங்கம்.

அப்போது வர்த்தினிக்கு நான்கு வயதிருக்கும்.

தன் கணவனுடைய துர்குணத்திற்கும், தவறுகளுக்கும் கிடைத்த தண்டனையாக அதை ஏற்று, தனிமையில் வாழ்ந்து வந்தவளுக்கு இடியாய் அந்தச் செய்தி!

வீராச்சாமியால் மானபங்கம் செய்யப்பட்ட அந்தப் பெண்ணும், அவர் தாயும் தற்கொலை செய்து உயிரை மாய்த்துக் கொண்ட செய்தி, வெகு தாமதமாகவே சுகந்தியை எட்ட, உடைந்து போனாள் அவள்.

அப்போதுதான், வர்த்தினியின் ஐந்தாவது பிறந்த நாளுக்கு, மகாலிங்கத்திடமிருந்து சிவம் என்ற பெயரில் பிறந்த நாள் வாழ்த்தும், பரிசுப் பொருட்களும் வந்தன.

அத்துடன் வந்த கடிதத்தில், தான் அவர்களுக்கு தூரத்து உறவென்று மட்டுமே குறிப்பிட்டிருந்தார் அவர்.

பிறகு அதுவே தொடர்கதையாக, ஏழாவது பிறந்த நாளன்று தொலைபேசியிலும் அவர் பேச ஆரம்பிக்க, வர்த்தினிக்கோ அது பெரும் இதமாய்!

மாதம் ஒரு முறையாவது பேசி விடுபவர், ''தங்கச்சி'' என்றே சுகந்தியை அழைக்க, எட்டாவது பிறந்த நாளும் வந்தது.

அன்றுதான் இருவருமே அவரை நேரில் சந்தித்தனர்.

பிறகு நேர்ந்த தனிமையில் அவர் தன்னை யாரென்று வெளிப்படுத்த அதிர்ந்து போனார் சுகந்தி.

தான் இழந்த தன் தங்கையாகவே அவளை ஏற்க விரும்புவதாக மகாலிங்கம் கூறியதும், அவளால் மறுக்க முடியாத ஒரு நிலை!

தன் கணவனின் தீய குணத்தால் தானே அவரை வெறுத்து வந்ததாகவும், பல பெண்களின் வாழ்க்கையை அழித்த காமுகன் அவனென்று அறிந்ததும், அவனிடமிருந்து பிரிய முடிவெடுத்திருந்த நிலையில் தான் இந்த பயங்கரம் நடந்ததாகவும், சுகந்தி தெரிவிக்க, வியப்புடன் அவளை நோக்கியபடி இருந்தார் அவர்.



தன் கணவனை சூரசம்ஹாரம் செய்தது சரியே என்றும் சுகந்தி கூற, நெகிழ்ந்து போய் வணங்கிய மகாலிங்கத்தின் விழிகளிலோ பெரும் நீர்ப் படலம்!

தன் கணவரால் தாய், தங்கை, வாழ்க்கை என்று அனைத்தையுமே இழந்திருந்தவருக்கு ஆறுதலாய், வர்த்தினி மட்டுமே இருப்பது அவருக்குப் புரிவதாய்!

அன்றிலிருந்து அவளுக்கு ஒரு உடன் பிறவா சகோதரராய், வர்த்தினிக்கு ஒரு காட்பாதராய் கார்டியனாய் மாறிப் போனார் அவர்.

மறு மாதமே அவர்களுடைய வாழ்க்கை நிலை வசதியாக மாற, வர்த்தினி படித்த பள்ளியும் மாறி, ஒரு உயர்ந்த பள்ளியில் கல்வியை ஏற்படுத்திக் கொடுத்தார் மகாலிங்கம்.

அன்றிலிருந்து இன்று வரை தன் வளர்ப்பு மகளாகவே அவளைப் பாவித்து, வேறு திருமணமும் செய்து கொள்ளாமல் வாழ்ந்து வருகின்ற அந்த உத்தமரை, அவள் தான் புரிந்து கொள்ளாமல் சேற்றை வாரி இறைத்திருக்கிறாள்.

சுகந்தி முடித்ததும், வர்த்தினிக்குள் பெரும் பிரளயமே நிகழ்ந்து முடிந்த உணர்வு!



## 20

தன்னுடைய தவறும், தந்தையின் வக்ர குணமும், தாயின் இயலாமையும், மகாலிங்கத்தின் உயர்ந்த

JUN 12 2010

உள்ளமும் புரிய, உடைந்து போய் அழ ஆரம்பித்தாள் வர்த்தினி!

பிறகு சுகந்தி அவளைச் சமாதானப்படுத்த வெகு நேரமாயிற்று.

உடனே தன் தாயிடம் மன்னிப்பை யாசித்தவள், தன்னை வளர்த்தவரிடம் மன்னிப்புக் கேட்க விரைந்தாள்.

தான் தவறாக எண்ணிப் புறக்கணித்த அந்த அற்புத மனிதரை எண்ணியபோது, தவிப்பும், குற்றவுணர்வுமே அதிகரித்தன!

மருத்துவமனை வளாகத்தில் ரவுண்ட்ஸ் வந்து கொண்டிருந்த மகாலிங்கத்திற்கோ இன்று பெரும் உற்சாகமாய்!

வர்த்தினி சென்னைக்குத் திரும்பி விட்டாளென்ற செய்தியறிந்ததும், சிறு பிள்ளையாய் துள்ளிய மனதை அடக்கியவருக்கு, தன் மகளைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் அதிகமாய்!

ஆனால், அவள் தன்னைப் பற்றித் தவறாகவல்லவா புரிந்து கொண்டிருக்கிறாளென்ற பரிதவிப்பு!

அவர், தன் அறைக்குள் நுழைந்து ஒரு பைலில் ஆழ்ந்திருந்தபோது, வேகமாக அறைக் கதவு திறக்கப்பட்டது.

கதவு தட்டாமலே உள்ளே வருவது யாரென்ற யோசனையுடன் நிமிர்ந்தபோது, அவரின் கண்களாலேயே அவரை நம்ப முடியவில்லை.

அங்கு, கலங்கிய விழிகளும், கசங்கிய முகமுமாய் நின்றிருந்த வர்த்தினியை... அவர் எதிர்பார்த்திருக்கவில்லை.



வேகமாக எழுந்தவர், ''வர்த்தினிமா'' என்று பிரமிப்புடன் அழைக்கும்போது, விம்மலுடன் ஓடி வந்து அவரை அணைத்துக் கொண்டாள் அவள்.

பிறகு, ஒரு குழந்தை போல் அழுதவளை ஆறுதல் படுத்தியவருக்குள், பழைய ஞாபகங்கள்!

வர்த்தினியின் எட்டாவது பிறந்த நாளன்று, அவர்தான் 'சிவம்' என்று தெரிந்ததும் ஓடிவந்து அணைத்துக் கொண்ட பாசத் தருணம், இன்று மறு ஜனனமெடுத்தது போல்!

அன்றிலிருந்து... தன்னில் ஒருவளாய், தான் பெறாத மகளாய், தன் உயிராய் வளர்த்த அந்த எட்டு வயதுக் குழந்தை இன்று மீண்டு வந்து தன்னுள் சரண் புகுந்ததைப் போன்ற ஒரு உணர்வுடன், அவளுடைய முன்னுச்சியில் வாஞ்சையுடன் முத்தமிட்டார் மகாலிங்கம்.

அவளுக்குத் தான் அவரிடம் மன்னிப்புக் கேட்க, பகிர்ந்து கொள்ள, தவறை உணர்ந்து நன்றியுரைக்க, நிறைய நேரம் தேவைப்பட்டது.

இறுதியாக குற்றவுணர்வுடன் நிமிர்ந்தவள், ''உண்மை என்னன்னே தெரிஞ்சுக்காம உங்களையும், அம்மாவையும் நான் ரொம்ப டார்ச்சர் பண்ணிட்டேன் இல்லை?

''எங்கப்பாவால உங்க குடும்பமே அழிஞ்சும், அதை மறந்து மன்னிச்சு, எங்க ரெண்டு பேரையும் உங்க குடும்பமா ஏத்துக்கிட்ட அந்தப் பரந்த மனப்பான்மை ஏன் எனக்கு வரலை?

''என் அப்பாவோட வக்ரமும், சின்ன புத்தியும் எனக்குள்ளே படிஞ்சிருந்ததுதான் காரணமா? சொல்லுங்க அங்கிள்!''

JUN 12 2010

அவள் கண்ணீருடன் கேட்டதும், பதறிப்போய் அவளைத் தன்னோடு சேர்த்து, ஒரு தகப்பனின் வாஞ்சையுடன் அணைத்துக் கொண்டார் மகாலிங்கம்.

பிறகு அவள் சமாதானமடைந்ததும், ''வர்த்தினி... பழசை எல்லாம் மறந்திடணும்... இனிமே எந்தக் கவலை யும் சஞ்சலமும் உனக்குள்ளே இருக்கக் கூடாது... இன்னிக்கு தான் புதுசாப் பிறந்தேன்னு நினைச்சுக்க!'' ஆறுதல் கூறினார் அவர்.

''ம்... ஆனா, மறக்க முடியாத ஒரு விஷயம் இருக்கு அங்கிள்!'' தவிப்புடன் நிறுத்தினாள் அவள்.

''என்னடா... அப்படிப்பட்ட விஷயம்?''

வாஞ்சையுடன் அவர் கேட்க, ''அதுக்கு முன்னாடி உங்க கிட்ட ஒரு கேள்வி! இப்ப அம்மாவும் நீங்களும் இப்படி உருகறீங்களே... இந்த ஆறேழு மாசமா நான் எங்கேருந்தேன். எப்படி இருந்தேன்னு கொஞ்சமாவது கவலைப்பட்டுத் தேடினீங்களா?'' சலுகையுடன் கோபித் தாள்.

''ம்... அதுக்குத் தான் அவசியமே இல்லையே! உன்னை பத்திரமான இடத்துலதானே ஒப்படைச் சிருந்தோம்!'' சிறு நமட்டுச் சிரிப்புடன் நிறுத்தினார் அவர்.

சட்டென்று நிமிர்ந்தவளின் விழிகளிலோ, பெரும் வியப்பும் புரியாத வினாவும்!

''தென்னவனை யாருன்னு நினைச்சே? என்னோட க்ளோஸ் ஃப்ரெண்ட் ஜம்புவோட பையன்! நான்தான் சபாபதிகிட்ட பேசி, உன்னை அங்கே அனுப்பவே ஏற்பாடு செஞ்சேன்!''



அவர் கூறியதும் திக்கென்று அதிர்ந்தவளுக்குள், சில புரியாத புதிர்களின் முடிச்சவிழ்வது போல்!

''நான்... மீரா வீட்டில இருந்தது...?'' அவள் முடிக்கும் முன்பே இடைமறித்தார் மகாலிங்கம்.

''தெரியும்டா! சபாபதியும் ஒரு பெண்ணுக்கு தகப்பன் இல்லையா? அவர்தான் நீ அங்கிருக்கற விஷயத்தை எங்களுக்குத் தெரிவிச்சாரு!

''அப்புறம், சுகந்தியும், நானும் கலந்தாலோசிச்சிதான் இந்த முடிவை எடுத்தோம்!

''சபாபதியும் சுகந்தியும் தான் இந்த விஷயத்தைக் கொஞ்சம் ஆறப்போட்டு உன்னை விட்டுப் பிடிக்க லாம்னு சொன்னாங்க!''

''அப்பதான், பிரகன்நாயகியையும் வீட்டையும் பாத் துக்க நம்பிக்கையான ஒருத்தர் தேவைப்படறதா தென்ன வன் போன் செஞ்சிருந்தான்.

''உடனே, நான் அங்கே உன்னை அனுப்பலாமின்னு முடிவெடுத்தேன்... உனக்கும் ஒரு சேஞ்சா இருக்கு மேன்னுதான்!''

''ஓ... பிரகன்நாயகி அம்மா நம்ம ஹாஸ்பிடல்லேதான் ட்ரீட்மெண்ட்டிலே இருக்கறதா தென்னவன் சொன்னப் பவே, சின்ன சந்தேகம் வந்ததுதான்... ஏதோ ஒரு கோ இன்சிடென்ஸுன்னு நினைச்சேன்...

''அவங்க இப்போ எப்படி இருக்காங்க அங்கிள்!'' ஆர்வத்துடன் விசாரித்தாள்.

''ம்... நல்ல ஸ்பீடி ரெகவரின்னு தான் சொல்லணும்! இன்னும் பேச்சு சரியா வரலை... ஆனா மக்களங்களை



JUN 12 2010

அடையாளம் புரிஞ்சுக்கற அளவுக்கு வந்திட்டாங்க! கூடிய சீக்கிரமே சரியாயிடுவாங்க!''

''ஓ... தேங்க் காட்!''

சிறு நிம்மதியுடன் அவள் பகர்ந்ததும், அவளையே ஊடுருவியவர் ''நீதான் இதுக்கு முக்கிய காரணம்ன்னு தென்னவன் என்கிட்டே சொன்னான்! அவன் ரொம்ப நல்லவன்மா!'' பெருமையுடன் முடித்தார்.

''ஹூம்! அவர் என்னை எப்படி அடைச்சி வச்சி கல்யாணம் பண்ணிக்க போர்ஸ் பண்ணினாருன்னு தெரிஞ்சா, இந்த வார்த்தையை நீங்க சொல்ல மாட்டீங்க!''

சிறு கோபத்துடன் அவள் கூறியதும், ''தெரியுமேம்மா!'' என்று கூறி அவளை மீண்டும் அதிர வைத்தார்.

''நீங்க... என்ன சொல்றீங்க அங்கிள்?''

நம்ப முடியாமல் அவள் கேள்வி எழுப்பும்போதே, ''உங்கம்மாதான் அவனோட ஐடியாவைக் கேட்டவுடனே சரின்னாங்க! யாராவது உனக்கு இந்த உலக எதார்த்தத்தைப் புரிய வைக்கணும்... உன் பிடிவாத குணத்தை மாத்தணும்ன்னு சொன்னாங்க!'' மெதுவாக நிறுத்தினார்.

''ஓ! எனக்கே தெரியாம, என்னைப் பத்தி எல்லாரும் ப்ளான் பண்ணியிருக்கீங்களா?'' கடும் சீற்றத்தடன் கேட்டாள்.

''இல்லைடா! உனக்கு ப்ராக்டிகல் லைஃபை புரிய வைக்கணும்... உன்னை சுத்தி எத்தனை பேரு உன் மேல அக்கறையா, அன்பா அனுசரணையா இருக்காங்கன்றதை நீ உணரணும்... இதான்டா எங்க ஆசை!''

''அதுக்காக... என்னை அடைச்சி வச்சி... கல்யாணம் செஞ்சுக்க வற்புறுத்தி... இதனால, என் எதிர்காலமே பாதிக்கப்படுமேன்னு உங்க யாருக்குமே தோணலையா?''



''உன் எதிர்காலமே தென்னவன்னுதான்னு நாங்க முடிவு பண்ணினப்புறம்தான், இந்த யோசனைக்கே ஒத்துக்கிட்டோம்டா!''

''அப்போ, என் விருப்பம், ஆசையைப் பத்தி எல்லாம் உங்களுக்குக் கவலையே இல்லை... அப்படித்தானே?''

''இல்லைடா! பொதுவா பெரியவங்க பாத்து முடிவு பண்றதுதானே கல்யாணம்! அதைத்தான் நானும் உங்கம்மாவும் செஞ்சோம்!

''நாங்க உனக்கு நல்லதுதானே செய்வோம்.... தென்னவனும் உன்னைக் கல்யாணம் செஞ்சுக்க விரும்பறதா சொன்னாரு! அதான் இந்த ஏற்பாட்டுக்கு உடன்பட்டோம்...''

''அப்போ... அந்தத் தென்னவன் மேல அப்படி ஒரு நம்பிக்கை? அப்படியே அவர் என்னை ஏதாவது செஞ்சிருந்தார்ன்னா?'' கோபமாக வந்தது அவள் குரல்!

''நிச்சயமா செய்யமாட்டான்னு எனக்குத் தெரியும்டா! நான் அவனைப் பத்தி கேரண்டி குடுத்ததை உங்கம்மாவும் நம்பினாங்க! எனக்கு நீயும் அவனும் ஒண்ணுதான்டா!''

நெகிழ்ச்சியுடன் வந்த அந்த வார்த்தைகளில் ஒரு கணம் யோசித்தவள், ''அப்படியே இருக்கட்டுமே! ஆனா எனக்குப் பிடிக்காமப் போயிருந்தா?'' வேகமாகக் கேட்டாள்.

''தென்னவனை யாருக்காவது பிடிக்காமப் போயிடுமாடா? அவன் அழகு, கம்பீரம், படிப்பு, குடும்பப் பாரம்பரியம், அந்தஸ்த்து எல்லாத்தையும் பாத்தும், அவனை ஒரு பொண்ணு மறுத்தா, அவளுக்கு யோசிக்கத் தெரியலைன்னுதான் அர்த்தம்!''

JUN 12 2010

அவர் முடித்ததும், தன் நிலை உணர்ந்து யோசனையுடன் அமர்ந்திருந்தவளை, அவரின் குரல் கலைத்தது.

"முன்னாடி என்னவோ சொல்ல வந்தியே... மறக்க முடியாத ஒரு விஷயம் அப்படின்னு.. அது என்னடா?"

உடனே விதிர்த்து நிமிர்ந்தவள், "ம்.. அது.. வந்து.. போங்க அங்கிள்!" சட்டென்று வெட்கப்பட்டு எழுந்தாள்.

"ஓ! எங்க ப்ளான் ஒர்க் அவுட் ஆயிடுச்சா? தென்னவனால முடியும்னு நான் நினைச்சது சரியாயிடுச்சி! கூடிய சீக்கிரமே கல்யாணம்தான்!" உற்சாகத்துடன் எழுந்து அருகே வந்தார் அவர்.

அவளுடைய முன்னுச்சி முடியை மெல்லக் கோதியவர், "எனக்கு தெரியும்மா.. நீ மாறுவேன்னு! தென்னவனும் இதே தான் சொன்னான்!"

"ஆனா, நேத்து தான் அவன் குரல்லே பெரிய தயக்கம்... உன்னை அனுப்பிட்டதா திடீர்னு போன் செஞ்சான்!

"நானும் பயந்து போயிட்டேன்... நல்லவேளை... இப்ப உன் விருப்பம் தெரிஞ்சிடுச்சி.. பிரகன்நாயகிக்கு கொஞ்சம் சரியாகட்டும்... உடனே கல்யாணத்தை வச்சிக்கலாம்!"


கண்கள் மின்ன அவர் மகிழ்ச்சியுடன் ஆர்ப்பரித்ததும், சிறு வெட்கத்துடன் தலை குனிந்து கொண்டாள் அவள்.

"உடனே தென்னவனுக்கு போன் பண்ணி சொல்றேன்!"

வேகமாக எழுந்தவரைத் தடுத்தவள், "முதல்லே பிரகன்நாயகி அம்மாவைப் போய் பாத்துட்டு வந்திடலாம் அங்கிள்!" என்றாள்.

"சரி.. வாடா!" என்றபடி அவர் கிளம்ப, ஆவலுடன் பின்தொடர்ந்தாள் அவள்.





# 21

பிரகன்நாயகி அம்மாவின் அறைக்குள் நுழைந்ததுமே, அவர் சாய்ந்தாற்போல் அமர்ந்து ஓட்ஸ் கஞ்சியை சாப்பிடுவதைப் பார்த்தவளுக்குள், பெரும் ஆனந்தம் கை கோர்த்தது.

வேகமாக அருகில் சென்று அமர்ந்ததுமே, அவர் விழிகள் எதையோ உணர்ந்தாற்போல் விரிந்து அவளிடம் பதிந்தன.

அவளை வேகமாக தலைமுதல் கால் வரை ஆராய்ந்து அளவிட்டவர், வேகமாக மகாலிங்கத்திடம் திரும்பினார்.

விழிமொழியிலேயே கேட்டு அவள் யாரென்பதை உணர்ந்து கொண்டவர், தன் இரு கைகளாலும் வர்த்தினியின் முகத்தை நடுங்கும் கைகளால் வருடியபோது, அவர் கண்களோ ஆனந்த அருவியாய்!

"எப்படி இருக்கீங்கம்மா?" பரிவுடன் வினவியவளை அப்படியே அணைத்துக் கொண்டார் அவர்.

பிறகு, வார்த்தைகளே தேவையின்றி சைகை மொழியில், மௌன பாஷையில் பேசிய அவருடைய உற்சாகமும், நன்றியுணர்ச்சியும் இருவருக்குமே புரிவதாய்!

அப்போதுதான் தெரிந்தது.. சுகந்தி தினமும் மாலையில் வந்து அவரைப் பார்த்துச் செல்வாரென்ற விபரம்!

JUN 12 2010

அவரிடம் விடைபெற்று வரும்போதே, மறைக்க இயலாமல் மகாலிங்கத்திடம் கேட்டு விட்டாள் அவள்.

''நான் இல்லாமலே என்னைப் பத்தின எல்லா முடிவும் நீங்க எல்லாருமே சேர்ந்து எடுத்திருக்கீங்களே அங்கிள்!'' சற்று குறையாகக் கேட்டாள்.

''சந்தோஷப்படுடா! நீ எங்களோட இல்லாமல் இருந் தப்பக் கூட உன்னைப் பத்தியே நாங்க எல்லாரும் யோசிச்சி உன் நன்மைக்காகவே பாடுபட்டிருக்கோமே.. அதைப் புரிஞ்சிக்கடா! அதோட தென்னவனுக்கு உன் மேல இருந்த ஆழமான காதலே, அவனைத் தப்பா செயல்பட விடாதுன்னு எனக்கு ஒரு நம்பிக்கை!''

கனிவுடன் கூறியவர், செல்லை உயிர்ப்பித்து ஏதோ ஒரு எண்ணிற்குத் தொடர்பு கொண்டார்.

''தென்னவன்... நான்தான் அங்கிள் பேசறேன்..''

அவர் கூறியதும், அவளுக்குள் சுகமான ஒரு படபடப்பு!

வெட்கமும் தவிப்பும் ஆக்ரமிக்க, அவரையே பார்த் திருந்தாள் அவள்!

ஆனால், அவருடைய முகம் மாறிய விதத்தில் அவளுக் குத்தான் பெரும் விதிர்ப்பாய்!

''சரிப்பா!'' என்றபடி செல்லைத் துண்டித்தவரின் முகம், தீவிர யோசனையிலிருந்தது.

''என்ன அங்கிள்? அவர் என்ன சொல்றாரு?'' தவிப்புடன் கேட்டாள் அவள்.

''ஒண்ணுமில்லைம்மா! உங்களுக்குள்ளே என்ன நடந்ததுன்னு எனக்குத் தெரியலை.. ஆனா விருப்பமில் லாத உன்னை இனி ஃபோர்ஸ் பண்ண வேண்டாம்னு அவன் சொல்றான்.''

''இந்த விஷயத்தைப் பத்தி [illegible] யில்லை... மறந்துடுங்கன்னு முடிவா சொல்லிட்டான்! என்னாச்சுடா?'' கவலையுடன் வினவினார் அவர்.

''ம்! நான் முதல்லே.. தென்னவனை விரும்பலைன்னு தான் நினைச்சிட்டிருந்தேன்.. ஆனா அவர் என்னைப் பிரிய சம்மதிச்சப்புறம்தான் நான் அவரை எந்த அளவுக்கு விரும்பறேன்னே தெரிஞ்சிக்கிட்டேன் அங்கிள்...

''மனசு முழுக்க நிரம்பி இருந்த காதலை வெறுப்புன்னு தப்பா நினைச்சிட்டிருந்திருக்கேன்.. ஆனா அவர் என் உணர்வுகளுக்கு மதிப்புக் குடுத்து, திருப்பி அனுப்பினப்ப தான் நான் தென்னவனை எவ்வளவு விரும்பியிருக் கேன்னு தெரிஞ்சுது!''

மெல்லிய குரலில் அவள் கூற, அவர் முகத்தில் சட்டென்று ஒரு மகிழ்ச்சி மின்னல்!

''அப்போ, இதைப்பத்தி நீ தான் தென்னவனோடப் பேசணும்! உன்னால மட்டும் தான் அது முடியும்.. தென்னவ னோட பிடிவாதமும் ஆளுமை குணமும் எனக்குத் தான் தெரியும்...''

''அவன் அவங்கப்பா மாதிரி! இப்ப இருக்கற ஒரே வழி, நீயாப் போய் அவனை சமாதானப்படுத்தி மனசு விட்டுப் பேசறதுதான்! நீ உடனே கிளம்பு!''

''ஊருக்கு நீ வரேன்னு நான் போனிலே சொல்லிட றேன்.. இன்னிக்கு நைட் ட்ரெயின்லேயே நீ கிளம்பு!''

''உன் மனசு மாறினதைக் கேட்டதும், அவன் எவ்வளவு சந்தோஷப்படுவான் தெரியுமா!''

மறு நொடியே அவர் செல்லில் பேசியபோது, அவன் கூறிய பதில் அவரை அதிர வைப்பதாய்!

JUN 12 2010

''வேண்டாம் அங்கிள்! அவளை யாரும் ஃபோர்ஸ் பண்ண வேண்டாம்! ஒரே நாளிலே அவ மனசு மாறியிருப்பான்னு நீங்க சொன்னா, அதைக் கேக்கறதுக்கு நான் ஒண்ணும் முட்டாள் இல்லை!

''இனிமே நான் யாரையும் நம்பறதாயில்லை! அவ வரவேண்டாம் அங்கிள்! வீண் முயற்சி இது! பிடிக்காத எதையுமே ஃபோர்ஸ் பண்ணித் திணிக்க முடியாது... பெரியவங்க வற்புறுத்தலுக்காக அவ வாழ்க்கையைப் பாழாக்கிக்க வேணாம்! பை அங்கிள்!'' சட்டென்று வைத்துவிட்டான்.

அவருக்கோ.. என்ன செய்வதென்றே புரியாத நிலை!

உறைந்து நின்றிருந்தவரை உசுப்பி விபரமறிந்தவள், உடனே அவனுடைய செல் எண்ணைக் கேட்டுவாங்கிக் கொண்டு, வெளியே தோட்டத்திற்குச் சென்றாள்.

ஆனால், முதல் ரிங்கிலேயே எடுக்கப்பட்டு, அவள் குரலைக் கேட்டவுடனே, தொடர்பு துண்டிக்கப்பட்டது!

மறுகணமே புலன்கள் தொய்ந்து போக, என்ன செய்வதென்று புரியாத தவிப்புடன் உருகியிருந்தது உள்ளிருந்த நேசம்!

பிறகு ஒரு முடிவுடன் உள்ளே வந்தவள், ''அங்கிள்... இன்னிக்கு நைட் ட்ரெயின்லே எப்படியாவது அங்கே போறதுக்கு ஒரு டிக்கெட் வாங்கிடுங்க.. நான் வரதை மட்டும் அவருக்குத் தெரிவிச்சிடுங்க!''

மெலிந்த குரலில் கூறியவளையே யோசனையும் நிம்மதியுமாக அளவிட்டவர், ''நானும் உன் கூட வரேன்டா'' என்றார் பரிவுடன்!

''இல்லை அங்கிள்! வேண்டாம்! இது என்னால ஆரம்பிச்ச ப்ரச்சனை! அதை நான்தான் தீர்க்கணும்...''



''நானும் குழந்தையில [illegible] ணும்னு கைப் பிடிச்சி நீங்க கத்துத் தாறதுக [illegible] லாம் முடிஞ்சி வருஷங்களாச்சே!

''வாழ்க்கைப் பாதையில் எத்தனை இடர்கள் வந்தாலும், தயங்காமத் தாண்டிப் போகத்தான் நீங்க சொல்லிக் குடுத்திருக்கீங்களே.. பழகிக்கிறேன் அங்கிள்!'' - உறுதியாக முடித்தாள்.

உடனே முதல் வகுப்பில் டிக்கெட் பதிவு செய்யப்பட, மதியம் முழுவதும், அவளும் சுகந்தியும் பிரகன் நாயகியுடனே இருந்தனர்.

விபரமறிந்த அவருக்கோ, தன்னை மீட்ட தேவதையே தன் வீட்டு மருமகளாக வருவதில் மிகுந்த சந்தோஷம்!

சுகந்திக்கும், தன் மகள் எல்லாவற்றையும் புரிந்து கொண்டு, மணம் செய்ய ஒத்துக் கொண்ட நிறைவு!

* * *

அன்று மாலையே தென்னவனுக்கு போன் செய்து, வர்த்தினி அங்கு வரப்போவதாகத் தெரிவித்தார் மகாலிங்கம்!

ஆனால் அவர் எதிர்பார்த்த உற்சாகமும், ஆனந்தமும் அவன் குரலில் சிறிதும் தென்படவில்லை!

''சரி அங்கிள்..'' என்ற ஒற்றைச் சொல்லுடன் உடனே அவன் இணைப்பைத் துண்டித்து விட்டான்.

தன் மகள் அவனை எப்படியாவது மாற்றி விடுவாள் என்ற நம்பிக்கையுடன் ''ஆல் தி பெஸ்ட்'' என்று வாழ்த்தி அவளை ரெயிலில் ஏற்றி விட்டார் மகாலிங்கம்!

* * *

JUN 12 2010

ரயில்... தன் பயணத்தை மெதுவாய்த் துவக்கியது!

வர்த்தினிக்குள் பழைய ஞாபகங்கள் மெலிதாய் மொட்டுவிட்டு முகிழ்க்க ஆரம்பித்தன.

சென்னையில், அவனைக் கண்ட முதல் சந்திப்பிலேயே தன்னை அவன் ஈர்த்திருக்க வேண்டுமென்று இன்று தோன்றியது.

அவனுடைய வீட்டில் முதல் நாள் அவனைப் பார்த்த போது, முன்பு அவனைச் சென்னையில் சந்தித்த ஞாபகங்கள் அவளுள் அணிவகுத்தபோதே, சிறு சலனம் எழுந்ததை இன்று உணர முடிவதாய்!

அங்கு, பிரகன்நாயகி அம்மாவைப் பார்த்த உடனே, இனம் புரியா ஒரு பாசமும், அவரைக் குணப்படுத்திக் காட்ட வேண்டும் என்ற ஆவலும் ஏன் வந்தன?

மெல்லிய புகைப்படலமாய்.. அதன் விடை இன்று புரிவதாய்!

அதெல்லாம் தென்னவனுக்காக.. அவனிடம் நல்ல பெயர் வாங்க வேண்டும்.. அவனை உற்சாகமாக மாற்ற வேண்டும் என்பதால்தானே!

கேர் டேக்கர் சம்பந்தம் வீட்டு வழக்கங்கள் பற்றி கூறிய போது, அவனுடைய தந்தைக்கு ஊஞ்சலில் அமர்ந்து அவன் தினமும் வெற்றிலை மடித்துத் தருவது வழக்கமென்று அறிந்ததுமே, தன்னை அவனுடன் இணைத்து அந்தக் காட்சிப் பதிவை குறும்பாய் உள் மனது ஏன் படம் பிடித்து வெட்கத்துடன் விலக்கியது?

அன்றே, முதல் காதல் என்னுள் மொட்டு விடத் தொடங்கி விட்டதா?



தன் தந்தை, தாயைப் பற்றியும், மகாலிங்கத்தைப் பற்றியும் தவறாக அறிந்த பிறகு, மனதிலிருந்த மென் உணர்வுகள் தொலைந்து போனதால்தான் அன்று நான் இறுகியிருந்தேனோ?

முதலில், அவனுடைய தாயின் அறையில் நிகழ்ந்திருந்த மாற்றங்களை அவன் வியந்து பாராட்டிய நினைவு.. இன்றும் சிலிர்ப்பாய்!

ஒரு நாள், அவனுக்கு நம்பிக்கை அளிப்பது போல் பிரகன்நாயகி குணமாகி விடுவாரென்று அவள் கூறிய வார்த்தைகளில் அவன் நெகிழ்ந்து நன்றியுரைத்தபோது, ஏனோ அவன் முகத்தைக் கையிலேந்தி 'கவலைப்படாதே! உனக்கு நானிருக்கிறேன்'' என்று கூற வேண்டும் போலத் தோன்றிய உணர்வை, உடனே அடக்கியதும் நினைவிற்கு வந்தன.

முதல் நாள், பிரகன் நாயகியின் தோற்றத்தை மாற்றி தோட்டத்திற்கு வீல் சேரில் தள்ளி வந்து பேசிக் கொண்டிருந்த அன்று, அவன் நன்றி கூறியபோது, தன் கைப் பிடித்த அந்த முதல் ஸ்பரிசம் இன்றும் தன் விரல்களில் குறுகுறுப்பது போல்!

அன்றிரவு, தன்னை அவன் அணைத்து தன் நன்றியை நெருக்கமாகத் தெரிவித்தபோது, தான் உருகித் தவித்து தன்னையே கட்டுப்படுத்தி விலகியது இன்று ரம்யமாய்!

ஒரு நாள் தன்னை அவன் விரும்புவதாகக் கூறிய அன்று... அவனிடம் தெரிந்த தவிப்பும், தேஜஸும் இன்றும் மறக்க இயலாமல் ஞாபகம் வந்தன!

மறுநாள், தான் ஊருக்குக் கிளம்புகிறேன் என்றதும் அவன் இறுகிப் போனதும், தன்னை ஏமாற்றி அழைத்துச் சென்று சிறை வைத்ததும், மெல்லிய புகை மூட்டமாய்!

JUN 12 2010

ஒருநாள், தான் அவனைக் காட்டுமிராண்டி என்றதும், கடும் கோபத்துடன் வன்மையாய் அவன் இதழ் பதித்ததும், தன்னையே கட்டுப்படுத்த இயலாமல் போய் விடுமோவென்ற பயத்தில் பதறி விலகியதும், சென்ற நிமிடம் நடந்தது போல்!

அவனுடன் வார்த்தைக்கு வார்த்தை மல்லுக் கட்டியதும், இரண்டு நாட்களுக்கு முன்பு தான் சிதற விட்ட கோப வார்த்தைகளால் விரக்தியுற்று, அவனை ஊருக்குத் திருப்பி அனுப்பியதும் மறக்க இயலாப் பகல் கனவாய்!

பிறகு அவனை விட்டுப் பிரிந்தபோது தன் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்து அவன் நடந்து கொண்டதும், ஆனால் தன் மனம் மாறிப் போனதும், அவன் மேலான நேசிப்பை இதயம் உணர்ந்ததும் இன்று சிலிர்ப்பாய் உள்ளே பரவின!

எனக்குள் காதலின் முகவரி, தென்னவனைப் பார்த்த முதல் கணமே எழுதப்பட்டிருக்கிறது... ஆனால், அதை ஒத்துக் கொள்ளத்தான் மனமின்றி நான் இருந்திருக்கிறேன்!

கனவில் கூட என் நேசம் அவனுக்குத் தெரிவதை நான் விரும்பவில்லை...

இரண்டு நாட்களுக்கு முந்தைய பனி பெய்த இரவில், மெலிதாய் அதை உணர ஆரம்பித்தேன்.. இன்று எனக்குள் நேச ஜுவாலைகள் முழுவதுமாய் வியாபிக்க இதயமலையின் ஆழ்ந்த மனவெளியில் அக்னிப்புறாவாய்.. காதல் எரிமலையாய் தகித்து நிற்கிறேன்!

'அதிகாலைப் பனியின் குளிர் அரவணைப்பாய்... குளிர் நிலவின் கீழ் நடக்கும் சில்லென்ற சிற்றோடை



யாய்.. இளவேனிற் காலத் தென்றல் காற்றாய்.. எனக்குள் தகிக்கும்.. கனலாய் பரவும் நேச நெருப்பை அணைத்திட வருவாயா தென்னவனே? என்னுயிரை மீட்டுத் தருவாயா?'

''ரயிலின் வேகத்தில் வெளியிலிருந்து அடித்த வாடைக் காற்றில் என் அருகிலிருந்த புத்தகம் சடசடக்கிறது.. என்னால் எப்படி மறக்க முடியும் உன்னை?''

இதயம், தன் பலமிழந்து தவிப்பாய் பேசிக் கொண்டே போக, விடியலில் அந்த ரயில் கம்பிகளுக்கிடையே தெரியப் போகின்ற அவனுடைய கம்பீர முகத்தை எதிர்நோக்கியபடி இரவு முழுவதும் உறக்கம் தொலைத்து விழித்திருந்த அந்தப் பெண்மை, விடியலில்தான் உறங்கவே ஆரம்பித்தது.

* * *

மறு நாளைய பொன் புலரியில், ஏதோ சப்தம் அவளை உசுப்பி எழுப்ப, விழித்து கதவைத் திறந்தபோது, "ஆத்தூர் ஸ்டேஷன் வந்திடுச்சிம்மா!'' என்றார் டி.டி.ஆர்.

விழிகளும் புலன்களும் வேகமாய் அலைபாய, ஒற்றை சூட்கேஸுடன் கீழே இறங்கினாள் வர்த்தினி!

அருகிலிருந்த பூவரச மரத்திலிருந்து பூபாளம் இசைத்து அந்த ரயில் நிலையத்தின் இரைச்சலை, தம் அழகிய குரலால் இனிய சப்த நெசவை நெய்தபடி ரம்யமாக்கிக் கொண்டிருந்தன பாடும் பறவைகள்!

உடனே, ஷெல்லியின் வரிகள்தான் நினைவிற்கு வந்தன!

''ஏ வானம்பாடியே! உனது ஆனந்த இசைக்கு ஊற்றாக விளங்கும் பொருள்கள் தான் என்ன? அந்த வயல்கள், மலைகள் - அலைகள் - வானம் - அல்லது சமவெளி?

JUN 12 2010

அல்லது காதலோ? நீயும் காதலிக்கிறாய்... துன்பத்தின் நிழலோ, காதலின் வேகமான திகட்டுதலோ உன்னிடம் வந்ததில்லையா?''

அவருடைய வரிகளை அந்தப் பறவைகளிடம் மௌன யாசிப்புடன் பேசியது மனது!

அதிகாலை வாடைக் காற்றில் துளிர் இலைகளின் சலசலப்புடன், சருகுகள் மண் நோக்கி தம் பயணத்தை தொடங்கத் துவங்கியிருந்த அழகு.. ஓவியக் காட்சியாய்!

வர்த்தினியின் நெஞ்சமோ துள்ளாட்டம் போட, காதல் தான் எத்தனை வலிமையானதென்று இன்று புரிவதாய்!

மனதிலிருந்த மாயக் கனவிலிருந்து விடுபட்டு பார்வை ஒருவிதத் தேடலுடன் அலை பாய்ந்தபோது, அவளை நோக்கிப் புன்னகையுடன் வேகமாக வந்து கொண்டிருந் தார் சம்பந்தம்!

தென்னவனை எதிர்பார்த்து சுழன்று தவித்த விழிகளுக் கும், மனதிற்கும் பரிசாய் அவன் வந்திருக்கவில்லை.



## 22

சட்டென்று உணர்வுகள் உலர்ந்து விட, ஏமாற்ற அரும்புகள் உள்ளே மொட்டு விட்டன.

அதற்குள், சம்பந்தம் அருகில் வந்து விட்டிருந்தார்.

''வாங்கம்மா! ரொம்ப சந்தோஷம் நீங்க வந்தது... தம்பி ராத்திரி தான் சொன்னாங்க... உங்களுக்குள்ளே என்ன



ப்ரச்சனை இருந்தாலும், அதையெல்லாம் தூக்கி தூரப் போட்டுட்டு வந்திட்டீங்களே.. அது போதும்மா!''

மன நிறைவுடன் கூறியபடி, அவள் கையிலிருந்த சூட்கேஸை வாங்கிக் கொண்டார்.

தன் இதயமே தனை விட்டு நீங்கிய சோர்வும், எதிலோ தோற்றுப் போன உணர்வும், அவளுக்குள் வேகமாய்ப் பரவின.

ஆனால், சம்பந்தம் ஏதேதோ பேசியபடி வர, கவனம் அவரிடம் சென்றது.

''நீங்க போனதிலிருந்து மூணு நாளா தம்பி ரொம்ப மாறிட்டாரும்மா! சரியாவே சாப்பிடறதில்லை... தன் ரூமிலேயே அடைஞ்சு கிடக்காரு!''

''யாரோடயும் பேசறதில்லை! பிசினஸ் எல்லாம் கூட மத்தவங்க மேற்பார்வையில தான் நடக்குது!''

''ரெண்டு மூணு நாள்னா பரவாயில்லை! ஆனா இதுவே தொடர்ந்தா, என்ன செய்யறது, எனக்கு பயமா இருந்தது... நல்லவேளை நீங்க திரும்பி வந்திட்டீங்க! நன்றிம்மா!''

அவர் கூறியதும், அவள் சட்டென்று உடைந்தாள்.

''அண்ணன்! அவ்வளவு உருகறவரு ஏன் ஸ்டேஷனுக்கு என்னை அழைக்க வரலை?'' குமுறலுடன் கேட்டுவிட்டாள்.

''அது எனக்கு எப்படிம்மா தெரியும்? அவர் இப்ப நம்ம வீட்டில் இல்லை... கெஸ்ட் ஹவுசிலே இருக்காரு... உங்களை.. தம்பி உயிரா விரும்பினது எனக்குத் தெரியும்! அவரை மறுத்து வேண்டாம்னுட்டு நீங்க போனதுல..

JUN 12 2010

அவர் எவ்வளவு காயப்பட்டிருப்பாரு! அதனாலக் கூட இருக்கலாம்!'' அழுத்தமாக வந்த அவர் குரல், அவளுக்குள் சம்மட்டி அடியாய்!

''இதை ஏன் நான் யோசிக்கவில்லை... என்னைப் பற்றியே எண்ணியதில், அவனுடைய உணர்வுகளை நான் புரிந்து கொள்ள மறுத்துவிட்டேனோ? கடவுளே.. இதை எப்படி சரி செய்யப் போகிறேன்?''

சிறகு சிதைந்த பறவையாய் துடித்துத் தவித்த மனதை அடக்கியபடி காரில் ஏறினாள் அவள்.

* * *

கிராமத்துப் பண்ணை வீட்டு வாசலில் சென்று கார் நின்றபோது, காவலாளி கதவைத் திறக்க, க்ரிப்டோவும், ஆண்ட்டோவும் குரைத்தபடி அவளை வரவேற்றன.

காலையில் எழுந்து பல் கூடத் துலக்கவில்லையென்பது நினைவு வர, சம்பந்தத்திடம் திரும்பி, தான் முதலில் குளிக்க வேண்டுமென்றாள் அவள்.

கவுரம்மாவும், கேர்டேக்கரும் அவளை ஆவலுடன் வரவேற்று, அருகிலிருந்த ஒரு விருந்தினர் அறையில் அவளைக் குளித்து தயாராகும்படிக் கூறினர்.

பல் துலக்கி, குளித்து வேகமாகத் தயாராகி அவள் வெளியே வந்தபோது, சம்பந்தம் ஹாலில் காத்திருந்தார்.

''கார் சப்தம் கேட்கும் தம்பி வெளியே வரலை.. நீங்க வந்துட்டீங்களான்னு பாக்கக் கூட இல்லை... என்னன்னு புரியலை..! அதோ, அவர் எப்பவும் தங்கற அதே ரூமில. தான் இருக்காங்க.. நீங்க போங்கம்மா! பெஸ்ட் ஆஃப் லக்!'' என்று வாழ்த்தி அனுப்பி வைத்தார்.



பிறகு அவள் எடுத்து வைத்த ஒவ்வொரு அடியும் தவிப்பாய்... பயம் சுமந்ததாய்!

அவனுடைய அறைக் கதவின் முன்னால் நின்று மெதுவாகத் தட்டியபோது கால்கள் தொய்ந்து விடும்போல் பலமிழந்து தெரிந்தன.

ஆனால், உள்ளிருந்து எந்த சப்தமுமின்றிப் போக, கதவில் கை வைத்துத் தள்ளியபோது, கதவு உள்வாங்கித் திறந்தது.

எதிரே தெரிந்த அவனுடைய அறையில், தென்னவன் இல்லை!

இடையிலிருந்த மற்றொரு வாசலில்... அவள் தங்கியிருந்த அறைக்குச் செல்லும் கதவு திறந்திருக்க, மெதுவாக அங்கு சென்றாள்.

அங்கு ஜன்னலோரம் நின்று, வெளியில் தெரிந்த வானத்தை வெறித்தபடியிருந்தான் தென்னவன்!

பின்புறம் காலடியோசையை உணர்ந்ததும், ''என்னண்ணேன்? அவ வரலையா? அதைச் சொல்ல எதுக்கு இவ்வளவு நேரம்..? இத்தனை தயக்கம்? ஹூம்.. எனக்குத் தெரியும். அவ வரமாட்டான்னு!'' விரக்தியான குரலில் முடித்தான்.

''இல்லை... நான் வந்துட்டேன்!''

மெலிதாய்.. சற்று நடுக்கத்துடன் ஒலித்த அந்தக் குரலில், வேகமாகத் திரும்பியவனின் விழிகள், நம்ப முடியாமல் விரிந்தன.

இந்த இரண்டு நாட்களில், சரியாக சாப்பிடாமல், ஒழுங்காக சவரம் செய்யாததில் பெரிதும் ஓய்ந்து தெரிந்தான் அவன்.



JUN 12 2010

எதிரே அவளைக் கண்டதும் நம்ப முடியாமல் அவன் உறைந்து நின்றது. சில விநாடிகளே இருக்கலாம்...

மறுகணமே வேகமாக அவளிடம் வந்தவன்... ஏனோ, சில அடி தூரத்திலேயே சட்டென்று முகம் இறுகி நின்று விட்டான்.

திடீரென்று அவன் விழிகளில் இனம் புரியாத் தவிப்பும்.. காயப்பட்ட ரணமும் கசிவதாய்!

தன் காதல் சொல்ல வந்த அந்தப் பெண்மைக்கோ.. பெரும் சிலிர்ப்பு!

''தென்னவன்.. நான் திரும்பி வந்திட்டேன்... என் மனசுல இருந்த காதலை, சமீபத்துல தான் நான் உணர்ந்தேன்..''

அவளின் ரோஜா இதழ்கள் நேசத்தை சிந்த.. அந்த மெல்லிய நடுங்கும் குரல், அவனை இலவம் பஞ்சாய் வருடினாலும் அவனிடம் எந்த அசைவுமில்லை!

அவன் பார்வை மட்டும், ஒரு வித வேகத்துடன்... பின்னிப் படர்ந்து அவள் விழிகளுடன் மூர்க்கமாய்க் கலந்திருந்தது.

'காதல் சக்தி, காந்த சக்தியை விட பல மடங்கு வலிமையுடையது.. கண்கள் சந்தித்துக் கொண்டாலே, அது காதலர்கள் கட்டித் தழுவுவதற்கு சமம்' என்ற பொன் மொழி இன்று நிஜமாய்!

அமைதியாய் நீண்ட மணித் துளிகள் சட்டென்று கலைந்தன.. வர்த்தினியின் குமுறலினால்!

''தென்னவன்.. ஏன் என்னைத் துரத்தித் துரத்தி விரும்புனீங்க..? இப்ப ஏன் இப்படி மௌனமா விலகி நிக்கறீங்க... எனக்கு பயமாருக்கு! ஏதாவது பேசுங்க!'' தவிப்புடன் உரைத்தாள்.



மறு கணமே, தென்னவன் என்ற சிலைக்கு உயிர் வந்தாற்போல் சிறு சலனம்!

'உன் சொற்களால் என் இதயத்தைத் தான் சிதைத்து விட்டாயே? ஆனால் அங்கிருப்பது நீயென்பதால் உனக்கு காயப்படுமே என்று நான் துடித்தது தெரியுமா உனக்கு?' இதயம் பேசியது.

பிறகு மெல்லப் பேச ஆரம்பித்தவன், ''நான்.. என்ன பேசறது? என் மனசைத் தான் நான் முன்னாடியே சொல்லிட்டேனே!'' ஆழமான குரலில் நிறுத்தினான்.

''நான் வந்ததிலே உங்களுக்கு சந்தோஷமே இல்லையா? ஏன் இப்படி நிக்கறீங்க?'' கண்ணீருடன் தாள முடியாமல் கேட்டுவிட்டாள் அவள்.

''ஹும்! என்ன செய்யணும்கிறே? என் விரல் நுனி பட்டாதான்.. ஏதாவது செஞ்சுப்பேன்னு...''

முடிக்க முடியாமல், ஒரு வித அலைப்புறுதலுடன் நிறுத்தியவனின் முகத்தில் தெரிந்த வலியும், மௌனக் கதறலும், அவளை அப்படியே சரித்து வீழ்த்தின!



## 23

மறுநொடியே, தன் தவறை உணர்ந்து, ''சாரி... சாரி.. தென்னவன்... ஐ லவ் யூ..'' என்றபடி ஓடி வந்து அவனை அணைத்துக் கொண்டு விசும்ப ஆரம்பித்தாள், வர்த்தினி.

JUN 12 2010

தன் முகவரியை, அவன் மார்பில் உதடுகளால் வல்லினமாய் எழுத ஆரம்பித்தது அந்தப் பெண்மை!

ஒரு கணம் அசையாது நின்றவனின் கரங்கள், தன்னை யறியாமலே உயர்ந்து, அவளை இறுகத் தன்னுடன் ஏந்திக் கொண்டன!

தனக்குப் பிடித்த இசைக் கருவியை தாளலயம் தப்பாது இசைக்கும் கலைஞனின் வாசிப்பாய், அவனுடைய விரல்கள் அவள் தேகமெங்கும் பரவின.

மின்னல்... சூரியன்... எரிமலைக் கங்குகள்... எல்லா வற்றையும் விட காதல் பெரும் ஒளித் துகளாய் அவனுள் ஒளியேற்றியது.

வன்மையான அந்தத் தழுவலில், அவனுடைய நேசத்தின் உச்ச வெளிப்பாடு தெரிய, சிலிர்ப்புடன் அந்த மாயாஜாலத்திற்குள் கட்டுண்டு நின்றிருந்தாள் வர்த்தினி!

மறு கணமே அவள் முகத்தை ஏந்தி அவன் வேகமாக முத்தமிட ஆரம்பிக்க, அவளுக்கோ கொட்டும் மழைச் சாரலாய்.. வெண் பனிச் சிதறலாய்.. நள்ளிரவு நிலவை மூடும் மேக வருடலாய்!

அந்த வன்மையான ஆலிங்கனத்தில் மன்றாடித் தவித்து சப்தமிட்டன.. அவளுடைய கை வளையல்கள்!

அவன் மோகத்தை, வண்ணத்துப் பூச்சிகள் உறிஞ்சிக் குடிக்கும் தேனாய் உள்வாங்கியது அவள் தேகம்!

சலனமற்றிருந்த அந்தப் பகல் பொழுதை சப்தமாய் கலைத்தது... எங்கிருந்தோ ஒலித்த ஒரு தென்னங்குலை வீழ்ந்த அதிர்வு!



சட்டென்று தன்னிலை உணர்ந்து அவள் விலக, கண்களில் பொங்கிய குறுஞ்சிரிப்புடன் அவளை விட மறுத்தான் தென்னவன்!

''ப்ளீஸ்...'' செல்லமாய் அவள் சிணுங்க, தன் கைப்பிடியி லேயே அவளை நிறுத்தியவன், ''ஏய்.. நீ இப்படி மாறினது எப்போன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?'' மென் குரலில் கேட்டான்.

உடனே மையலுடன் அவன் மார்பில் சாய்ந்தவள், "தெரியலை! முதல்லே சென்னையில உங்களைப் பார்த் தப்பவே, நான் கொஞ்சம் சலனப்பட்டேன்னு நினைக் கிறேன்.. ஆனா அப்ப நான் அதை உணரலை..

''இங்கே வந்தப்புறமும் பல நேரங்கள்லே... நீங்க நன்றி தெரிவிச்சப்பல்லாம் ஒரு கணம் நான் என்னை யறியாமலே என் மனசை உங்க கிட்டே இழந்திருக் கேன்...''

''ஆனா.. அப்ப எனக்கு அது புரியலை.. அப்புறம் என்னை சிறை வச்சப்பவும் உங்க மேல கோபம்தான் வந்தது...

''அந்த முதல் முத்தம்..என்னை ஒரேயடியா சிதறடிச்சி.. சரிச்சி வீழ்த்தியிருக்கு... அதைக் கூட ஏத்துக்கற மனநிலை யில் அப்ப நான் இல்லை...

''என் விருப்பத்துக்கு மதிப்புக் கொடுத்து, என்னைத் தொட்டா நான் செத்துடுவேன்ன உடனே தவிச்சிப் போய் என்னை நீங்க அனுப்பினப்ப தான், என் ஆழ் மனசுல இருந்த காதலையும், உங்க நேசத்தை[illegible]யோட உணர்ந்தேன்!

JUN 12 2010

''அப்புறம் ஊருக்குப் போனப்புறம், அம்மா மேலயும் அங்கிள் மேலயும் எந்தத் தப்புமில்லை.. எல்லாத் தவறையும் செஞ்சது எங்கப்பாதான்னு தெரிய வந்தது!

''என் மனசுல பெரிய மாற்றம்.. உடனே அங்கிள்கிட்ட எல்லாம் பேசிட்டு அவசரமாக் கிளம்பி வந்தேன்.. ஆனா, நீங்கதான் என்னை அழைக்க ஸ்டேஷனுக்குக் கூட வரலை!''

சலுகையுடன், அவன் வலிய மார்பில் குத்தியபடி சிணுங்கினாள்.

உடனே அவளுடைய முகத்தை நிமிர்த்தியவன், ''எனக்கு பயம் வர்த்தினி.. நீ வருவியோ வரமாட்டியோன்னு..!

''ஒருவேளை, நீ வரலைன்னா.. என்னால அந்தத் தோல்வியைத் தாங்க முடியாது!

''மனசளவிலே நான் ரொம்ப உடைஞ்சு போயிருந்தேன்! அதான் வரலை!''

உணர்ச்சிகள் நிரம்பிய குரலில் அவன் முடித்தபோது, அவளுக்குள் பெரும் இதமாய்!

அதே உணர்வுடன் மெல்ல எம்பி அவனுடைய கன்னத்தில் அழுத்தமாகத் தன் இதழ் பதித்தாள் அவள்.

''காதலின் திறவுகோல் முத்தமே! ஆனால் அது இலகுவில் கிடைத்துவிடாது.. சில நேரங்களில் மிகவும் கஷ்டப்பட்டு பெற வேண்டியதிருக்கும்'' அப்படின்னு ஒரு பொன்மொழி இருக்கு... அது உண்மைதான்கிறதை இன்னிக்கு நான் புரிஞ்சிக்கிட்டேன்!'' உல்லாசமாக மொழிந்தான் தென்னவன்!



''ம்... உங்களுக்கு எப்போ என் மேல இப்படி ஒரு தீவிர அன்பு வந்தது?''

சிறு குழந்தையாய் விழி விரித்துக் கேட்டாள் வர்த்தினி!

''ம்! முதல்லே உன்னை தியேட்டர் வாசல்லே பாத்தேனே அன்னிக்கே!''

அவன் கூறியதும் வியப்புடன் நிமிர்ந்தவள், ''அப்போ இங்கே ஊருக்கு வந்தப்ப, தெரியாத மாதிரியே நடந்துக்கிட்டீங்க.. என்னை முன்னாடிப் பாத்ததே நினைவிலே இல்லாத மாதிரிப் பழகுனீங்க!'' ஆர்வத்துடன் கேட்டாள்.

''நீயும்தான் என்னைத் தெரிஞ்ச மாதிரிக் காட்டிக்கலை..எனக்கு, இந்த முதல் பார்வையிலேயே காதல் இதிலெல்லாம் நம்பிக்கையேயில்லை... ஆனா, அந்த அனுபவம் எனக்கே கிடைச்சப்ப என்னால நம்பவே முடியலை!

''என் கண்கள் உன்னைத் தீண்டிய அன்னிக்கு.. அந்த ஒளிர்தலில் என்னையே நான் முதன் முதலில் தரிசிச்சேன் தெரியுமா?

''அப்புறம் உன்னை பீச்சிலப் பாத்தேன்... அதுக்கப்புறம் மகாலிங்கம் அங்கிளோட ரூமிலே அவர் டேபிள்லே உன் போட்டோவைப் பாத்தப்பதான் உன்னை யாருன்னு விசாரிச்சேன்!

''அப்பதான், அங்கிள் நீ அவரோட வளர்ப்பு மகள்னு சொன்னாங்க... நான் உன்னைப் பாத்தது.. விரும்ப ஆரம்பிச்சதெல்லாம் உடனே சொன்னேனா...''

JUN 12 2010

''என்னது.. அப்பவேவா?'' பிரமித்துப் போய்க் கேட்டாள் அவள்.

''ஆமாம்.. அப்பவேதான்! உடனே அங்கிள் சிரிச்சாங்க.. தனக்கும் அதிலே சம்மதம்னாங்க... எங்க அம்மா அப்பாவை முறைப்படி வந்து பொண்ணு கேக்க சொன்னாங்க! தானே அப்பாகிட்ட பேசறதாவும் சொல்லி அந்த போட்டோவை என்கிட்ட கொடுத்தனுப்பினாங்க!''

''ஓ!'' வியப்புடன் அவள் நிற்க, ''இப்படியெல்லாம் 'ஓ'ன்னு அழகா உதட்டை சுருக்கினேன்னா, என்னை முத்தம் தர ரெடியான்னு கேக்கற மாதிரி இருக்கு.. நான் பேசவா... இல்லை..?'' மெல்ல இழுத்தான்.

''ப்ச்.. ப்ளீஸ்.. முழுக்க சொல்லுங்க தென்னவன்!'' கண்கள் கிறங்க மொழிந்தாள் அவள்.

''ம்..அப்புறம் நான் ஊருக்கு வந்த அன்னிக்கே அப்பாவுக்கு மேஸிவ் அட்டாக் வந்து அப்பா...''

அவன் நினைவுகள் பலமாகத் தடைப்பட்டன.

''ஓ.. சாரிங்க!'' மெல்ல அவனை அணைத்து ஆறுதல்படுத்தினாள் அவள்.

மறுகணமே தெளிந்தவன், ''அப்புறம்... எதையுமே நினைக்கக் கூட நேரமில்லை... அம்மாவை ஆறுதல் படுத்த.. தொழிலை கவனிக்கன்னு என் கவனமே மாறிப் போனாலும், என் ஆழ் மனசுல உன் ஞாபகம் மட்டும் அழியாம இருந்தது...

''மகாலிங்கம் அங்கிளும், அப்புறம் அதைப் பத்தி எதுவுமே பேசலை! எங்க பேமிலி கொஞ்சம் ஸ்டேபிலைஸ் ஆகட்டும்னு விட்டிருக்கலாம்!



''மூணு மாசத்துல அம்மாவும் கோமாவில படுத்துட்டாங்க.. உணர்வுகள் மரத்துப் போன நிலையில் அப்ப நான் இருந்தேன்..

''அப்பதான் ஒரு நாள் திடீர்னு அங்கிள் என்கிட்டப் பேசினாங்க... அங்கே சென்னையில நடந்த விபரங்கள் எல்லாம் சொன்னாங்க!

''எனக்கு அப்பா சொல்லித் தான் அங்கிளைப் பத்தின விபரமெல்லாம் தெரியும்!

''உன்னை இங்கே அனுப்பறேன்னு அவர் சொன்னப்ப என்னால நம்பவே முடியலை.. உன்னை என் உயிரா பாத்துக்கறதா வாக்குக் கொடுத்தேன்...

''நீயும் வந்தே.. எங்கம்மாவுக்காக நீ பட்ட சிரமங்கள்.. காட்டின அக்கறை.. எங்க வீட்டையே லைவ்லியா மாத்தினது.. இப்படி எல்லாமே என்னை மேலும் சரிச்சி வீழ்த்துச்சி!''

''அம்மாவும் குணமாக ஆரம்பிச்ச உடனே பெரிய நிம்மதி.. இதுக்கெல்லாம் காரணம் என் தேவதை தான்னு நான் உருகி நின்னேன்..

''ஆனா, என்னை நீ தான் புரிஞ்சிக்கவேயில்லை!'' ஒரு பெருமூச்சுடன் நிறுத்தினான்.

உடனே, ''சாரிங்க..'' என்றபடி அவன் கரங்களில் தன்னை ஈந்து.. அவன் தோள் சாய்ந்து கன்னத்தை அவன் மார்பில் மெல்லப் பதித்துக் கொண்டாள் அவள்.

மறுகணமே அவனுடைய மனக்கிளையில் பூவாய் அவள் மலர்வு!

JUN 12 2010

''ஆனா என் மனசை.. என் காதலை உன்கிட்ட சொன்னப்ப நீ மறுத்தவுடனே உடைஞ்சு சிதறிப் போனேன் நான்!

''அதைப் பத்தி அங்கிள் கிட்ட பேசிட்டு உன்னை இங்கு சிறை வைக்கற முடிவை சொன்னப்ப, நீ என் பாதுகாப்பில் தானே இருக்கப் போறேன்னு அங்கிளும் ஒத்துக்கிட்டாங்க.

''உன்னைப் பிரிய.. இழக்க என் மனசு சம்மதிக்கலை.. சிறை வச்சேன்! அப்பவும் நீ மாறலை.. எவ்வளவோ முயற்சி செஞ்சம் நான் தோத்துடுவேன்ற நிலை வந்தப்ப... உன்னைத் தொட்டா நீ செத்துடுவேன்னு சொன்னப்ப தான் எனக்கு பெரிய அதிர்ச்சி.. பெரிய தோல்வின்னாலும் நான் தெளிஞ்சேன்!

''இனிமேயும், உன்னை அடைச்சு வச்சு என் காதலைப் புரிய வைக்க முடியாதுன்ற உண்மையை உணர்ந்தேன்...

''அப்போ, எனக்கு என் காதலை விட உன்னோட உயிர், உணர்வுகள், விருப்பமெல்லாம் முக்கியமாப் பட்டுது வனி!''

''உடனே ஒரு முடிவெடுத்து உன்னை அனுப்பிட்டாலும் என்னால நிம்மதியா இருக்கவே முடியலை!

''என்னையே நான் வதைச்சுக்க ஆரம்பிச்சேன்.. சாபபிடலை.. தூங்கலை... பிசினஸைப் பாக்கலை.. ஒரு பித்துப் பிடிச்ச நிலையில் இருந்தேன்...

''அப்பதான் அங்கிள்கிட்டருந்து போன்! நீ கிளம்பி வரேன்னு சொன்னப்ப, என்னால நம்ப முடியலை.. அவர் தான் போர்ஸ் பண்ணி உன்னை இங்கே அனுப்பறாரோன்னு கோபமா இருந்தது.



''அதான், வேண்டாம்னு தவிர்த்தேன்.. இன்னொரு ரிஜெக்ஷனை என்னால தாங்க முடியாதுங்கறது எனக்குப் புரிஞ்சுது!

''அப்படி.. மத்தவங்க வற்புறுத்தலுக்காக வந்த நீ என்னை உண்மையா விரும்பாம, ஒரு கடமைக்கு என் கூட மனைவியா வாழறதிலயும், எனக்கு உடன்பாடில்லை...

''அதோட.. ரெண்டே நாளிலே நீ மாறியிருப்பேன்னும் என்னால நம்ப முடியலை. ரொம்பத் தவிப்பா இருந்தது... என் வாழ்க்கையில இந்த அளவு நான் ரெஸ்ட்லெஸ்ஸா இருந்தது, இதான் முதல் முறை வனிம்மா!'' ஒரு ஆழ்ந்த பெருமூச்சுடன் முடித்தான்.

அவனுடைய உணர்வுகள் புரிய, இனி அவன் நிழலில் இளைப்பாற ஏங்கிய தன் மனமாற்றத்தை, வலிமையுடன் உணர்ந்தாள் அவள்.

மெல்லிய இளவேனில் மென் காலைப் பொழுதில், பல வண்ண மலர்களின் சொரிதலாய்.. முதல் பனிச் சாரலாய்..

அவன் நேசம் அவளை மென்மையாய் ஸ்பரிசித்து, தேகம் முழுவதுமாய் ஆக்ரமித்தது!

அவனுடைய பிரம்மாண்ட நிழல் அவளை வலிமையுடன் சூழ, அவள் ஆத்மாவையும் முத்தமிட்டன, அவன் வார்த்தைகள்!

அந்த நேசப் பொழுதில், கிறங்கிய விழிகளுடன், அவள் அவன் முகம் நோக்கித் தன் பயணத்தைத் துவங்க, வகுத்தலாய், கூட்டலாய், பெருக்கலாய் முத்தக் கணக்கை எழுத ஆரம்பித்தன அவன் உதடுகள்!

JUN 12 2010

அவள் மேல் விழுந்த ஒவ்வொரு நேசத் துளியும், அவள் தேகம் முழுவதும் தேன் துளியாய் பரவியது!

நேசத்தின் ஸ்பரிசம்.. இருவருக்குள்ளும் வாசமிகு மலர்களாய்.. கற்கண்டின் தித்திப்பாய்.. குடையில்லா மழைச் சாரலாய்.. ஊஞ்சலாடும் உல்லாச நினைவு களாய்... மெல்ல நிறைந்தன.

வெளியே, மரங்கள் தன் கிளைக் கரங்களால் சூரியனை எட்டிப் பிடிக்க முயன்று தோற்றுக் கொண்டிருந்தன!

வீட்டின் பின்புறமிருந்த அழகிய தோட்டத்தில் வண் ணத்துப் பூச்சிகள் சிறகு விரித்துக் காதலுடன் மலர்களைத் தேடிப் பறக்க, பசுமைக் கவிதையாய் பரவித் தெரிந்தன மலைத் தொடர்கள்!